திருமலை திருப்பதி தேவஸ்தானம்

# ஸப்தகிரி

சமய மாத இதழ்

ஜூன் 2020 விலை ரூ.5/-

## உபயநாச்சிமார்களுடன் ஸ்ரீகல்யாணவேங்கடேஸ்வர ஸ்வாமி, ஸ்ரீநிவாசமங்காபுரம்





# திருமலையப்ப ஸ்வாமிக்கு நடைபெற்ற ஜ்யேஷ்டாபிஷேக திருக்காட்சிகள்













அயநேஷு ச ஸர்வேஷு
யதா$_2$பா$_4$க$_3$மவஸ்தி$_2$தா: |
பீ$_4$ஷ்மமேவாபி$_4$ரக்ஷந்து
ப$_4$வந்த: ஸர்வ ஏவ ஹி ||



அனைத்துப் போர்முனைகளிலும் தத்தம் இடத்தில் இருந்தபடியே நீங்கள் எல்லோருமே தவறாமல் பாட்டனார் பீஷ்மரையே நாற்புறங்களிலும் சுற்றி நின்று காப்பாற்றுங்கள்

*– ஸ்ரீமத் பகவத் கீதை 1–11*





இன்றைப் பெருமையறிந்திலையோ ஏழைநெஞ்சே!
இன்றைக்கென்னேற்றமெனி லுரைக்கேன் - நன்றிபுனை
பல்லாண்டுபாடிய நம்பட்டர்பிரான் வந்துதித்த
நல்லானியிற் சோதிநாள்

அறிவிலியான மனமே! இன்றைக்குண்டான பெருமையை அறிய மாட்டாயோ? இந்த நாளுக்கு என்ன பெருமை யென்னில் சொல்லுகிறேன் கேள்; நன்மை வாய்ந்த திருப்பல்லாண்டையருளிச் செய்த நம் பெரியாழ்வார் வந்து தோன்றிய ஆனி மாதத்து ஸ்வாதியென்கிற நல்ல நாள் காண்.

- உபதேசரத்தினமாலை



# திருமலை திருப்பதி தேவஸ்தானம்

## ஸப்தகிரி சமய மாத இதழ்

(தெலுங்கு, தமிழ், கன்னடம், இந்தி, ஆங்கிலம், சமஸ்கிருத மொழிகளில்)

**இல்லந்தோறும் ஸப்தகிரி பத்திரிக்கை!** **இதுவே திருமலையப்பன் அக்ஷர தீபிகை!**





கலியுக கண்கண்ட தெய்வமான திருவேங்கடமுடையானின்
திவ்ய வைபவம் பிரதி மாதம்... ஸப்தகிரி
இதழில் பாருங்கள்! படியுங்கள்!!

பகவானை தரிசிப்பதற்கும் தேவாதி தேவனை
சென்றடைவதற்கும் எத்தனையோ
மார்க்கங்கள் வழிமுறைகள்.

அலர் மேல் மங்கை மணாளனை,
அடியார்களைக்காக்கும்
கார்மேக வண்ணனை சிலர் பூவினால்
அர்ச்சித்தால், சிலர் அக்ஷரபூவினால் ஆராதிப்பர்.

திருவேங்கடமுடையானின் அக்ஷரபிரசாதமான
“ஸப்தகிரி” படிப்பதும், படிக்க வைப்பதும் கூட
அந்த ஸ்வாமிக்கு பண்ணும் உத்தம சேவையே.

பிரதி மாதம்... “ஸப்தகிரி” படியுங்கள்
உங்கள் அன்பானவர்களை படிக்க வையுங்கள்.

பிரதி மாதம் திருமலையப்பனை தரிசியுங்கள்...
திருமலை சிறப்பினைத் தெரிந்து கொள்ளுங்கள்

ஸப்தகிரி வளர்ச்சியைப் பேணுங்கள்.
ஸப்தகிரி மாத இதழுக்கு சந்தா செலுத்துங்கள்!
செலுத்த வையுங்கள்!!

### சந்தா விவரங்கள்

| | |
|---|---|
| தனிப்பிரதி | : ரூ. 5-00 |
| வருடச் சந்தா | : ரூ. 60-00 |
| ஆயுள் சந்தா | : ரூ.500-00 |
| அயல்நாட்டு வருடச் சந்தா | : ரூ.850-00 |

(சமஸ்கிருத மொழி இதழுக்கு ஆயுள் சந்தா கிடையாது)

அலுவலக பணிநாட்களில்
“ஸப்தகிரி” மாத இதழ் குறித்து
மேலும் விவரங்களுக்கு
தொடர்பு கொள்ளவும்...
அலுவலகம் : 0877-2264543
டி.டி.பி. பிரிவு : 0877-2264359
ஆசிரியர் : 0877-2264360

எங்கள் முகவரி :
பிரதான ஆசிரியர்
ஸப்தகிரி மாத இதழ் அலுவலகம்,
தி.தி.தே. அச்சக வளாகம்,
கபில தீர்த்தம் சாலை, திருப்பதி - 517507

ஆலோசனைகள்/ அறிவுரைகள்/புகார்களுக்கு தொடர்பு கொள்ளவும்
sapthagiri_helpdesk@tirumala.org





மலர் 51 இதழ் 01



*சிறப்பு ஆசிரியர் :*
**திரு. அனில்குமார் சிங்ஹால்,** ஐ.ஏ.எஸ்.,
செயலாட்சித் தலைவர், தி.தி.தே.
பிரதான ஆசிரியர் :
**பேராசிரியர் K. ராஜகோபாலன்,** பி.எச்டி.,
ஆசிரியர் : Dr. V.G.**சொக்கலிங்கம்,**
எம்.ஏ., பி.எச்டி.,
அச்சிடுபவர் :
**திரு. பி.ராமராஜு,** எம்.ஏ.,
உதவி செயலாட்சித் தலைவர்
(பதிப்பகம் மற்றும் அச்சகம்), தி.தி.தே.,
தேவஸ்தான அச்சகம், திருப்பதி.
டி.டி.பி.
பிரதான ஆசிரியர் அலுவலகம்,
தி.தி.தே. திருப்பதி.
*புகைப்படங்கள் :*
**திரு. P.N. சேகர்**
**திரு. B. வெங்கடரமணா**



***பிரதிகளுக்கு:***
THE CHIEF EDITOR,
"Sapthagiri", T.T.D., Tirupati-517 507.
0877- 2264543, 2264359
ஆசிரியர் : 2264360



நீங்கள் ஸப்தகிரி இதழை
**www.tirumala.org**யில் பார்த்து, படித்து மகிழலாம். ஆலோசனைகள்/ கருத்துக்கள்/புகார்களுக்கு
**sapthagiri_helpdesk@tirumala.org**



| | |
|---|---|
| தனிப்பிரதி | ரூ.5/- |
| வருடச்சந்தா | ரூ.60/- |
| ஆயுள் சந்தா | ரூ.500/- |
| அயல்நாட்டு வருடச்சந்தா | ரூ.850/- |



இதழில் வெளியாகும் கட்டுரைகளுக்கும், கருத்துகளுக்கும் அவ்வவ்வாசிரியப் பெருமக்களே பொறுப்பாவர்.-பிரதான ஆசிரியர்


## உள்ளுறை


| | பக்கம் |
|---|---|
| **ஸ்யமந்தகமணியின் பெருமை** - *திருமதி எஸ்.குமுதா வரதராஜன், சென்னை.* | 7 |
| **நம்மாழ்வார் அருளிய தமிழ் வேதம்!** - *முனைவர். ச.செந்திலாண்டவன், சென்னை.* | 11 |
| **திருப்பல்லாண்டு** - *திரு.ஏ.கே. கோபி, கள்ளக்குறிச்சி.* | 14 |
| **தாஸ சாகித்யத்தில் திருவேங்கடவன்** - *திரு. வி. வேங்கடரமணா, திருப்பதி.* | 18 |
| **அன்னமய்யா வாழ்க்கை வரலாறு** - *திருமதி ராதாராமநாதன், திருப்பதி.* | 21 |
| **தெய்வத்திருத்தலம் ரிஷிகேஷ்** - *திருமதி ஆ.அருணா, திருப்பதி.* | 24 |
| **அன்றாட வாழ்வுக்கு ஆழ்வார்களின் அருளிச்செயல் : திருமண நாள் குறிக்கும் உரிமை யாருக்கு?** - *பேராசிரியர் எஸ். கோகுலாச்சாரி, புவனகிரி.* | 31 |
| **மனோலயம்** - *திரு. ஆர்.பிரகாசம், கோயம்பத்தூர்.* | 33 |
| **ஆடல் வண்ணனுக்கு ஆனி திருமஞ்சனம்** - *திருமதி எஸ். வைஷ்ணவி, திருப்பதி.* | 35 |
| **ஸ்ரீமத்பாகவத கதை சாகரம் – இறைவன் சமத்துவன்** - *டாக்டர். சி.கோவிந்தசாமி, புத்தூர்.* | 38 |
| **ஸம்ஸ்க்ருதம் அறிவோம்** - *திரு. உ.வே.பி.டி.சேஷத்திரி, சென்னை.* | 41 |
| **அப்பிள்ளை அருளிய ஆழ்வார் ஆசார்யர்கள் வாழித் திருநாமமும் உரையும்** - *உ.வே. டாக்டர். மாடபூசி வரதராஜன் ஸ்வாமி, சென்னை.* | 42 |
| **108 திவ்யதேச வைபவம் – திருப்புளிங்குடி** - *உருப்பட்டூர் சௌந்தரராஜன், சென்னை.* | 45 |
| **பகவத் கீதை–இளைய சமுதாயம் – அசுரகுணம் பந்தத்திற்கு வழிவகுக்கும்** - *திரு. வ.ஓ. சுரேஷ், சத்திரவாடா.* | 48 |
| **ஆயுர்வேதம் – கற்றாழை** - *திருமதி. வி. உஷா, திருப்பதி.* | 51 |


### அட்டைப்பட விளக்கம்

முன்னட்டை : உபயநாச்சிமார்களுடன் ஸ்ரீகல்யாண வேங்கடேஸ்வர ஸ்வாமி, ஸ்ரீநிவாசமங்காபுரம்.
பின்னட்டை : ஸ்ரீகோவிந்தராஜ ஸ்வாமி புஷ்பயாகம், திருப்பதி.

# சுகாதாரமே மனிதனின் சொத்து

உத்தரேதாத்மநாத்மாநம் நாத்மாநம வஸாதயேத் |
ஆத்மைவ ஹ்யாத்மநோ பந்து: ஆத்மைவரிபுராத்மந: || – பகவத் கீதை

உன்னை நீயே பாதுகாத்துக்கொள்ளல் வேண்டும். உனது நன்மை தீமைகளை நீயே அறிந்து கொள்ளல் வேண்டும். நீ தன்னைத்தானே வீழ்த்திக் கொள்ளாதே. உனக்கு நன்மை தீமை செய்யும் நண்பனும், பகைவனும் உன்னிலேயே உள்ளனர். எனவே, நல்வழியைக் கடைபிடித்து வாழ்க்கையின் பயணத்தை மேற்கொள்" எனும் கீதையின் வாக்கியத்தை மறக்காமல் நாம் எப்பொழுதும் கடைபிடித்தல் வேண்டும்.

இயற்கையை இறைவனாக எண்ணும் இந்தியர்களை பழைமைவாதிகளாகக் குறிப்பிடும் அயல் நாட்டினர் இன்று இந்திய சனாதன விதிமுறைகளையே கடைபிடிக்கத் துவங்கியுள்ளனர். நம் நல்லொழுக்கமான இரு கைகள் கூப்பி "வணக்கம்" செலுத்துவது நம் இந்திய பண்பாடு மற்றும் பக்தியின் சின்னமும் ஆகும். இன்றைய நாட்களில், "கை தொழுவதே சிறந்த வழி" என உலக நாடுகளில் உள்ள அனைவரும் நம் வழியினையே கடைபிடித்து வருகின்றனர். முன்பெல்லாம் வெளியே சென்றுவிட்டு வீட்டிற்கு வந்த உடனே, குளிப்பதும் தூய்மையான ஆடைகளை அணிவதையும் நமக்கு நம் பெரியோர்கள் கற்றுக் கொடுத்த பண்பாடாகும். இப்பண்பாடு தொற்றுநோயிலிருந்து நம்மையும் நம் குடும்பத்தையும் காக்க உதவும் பாதுகாப்பு அம்சமாகும். ஏன் எனில், இதன் மூலம் வெளியே சென்று வருவதினால் நம் கைகால்களில் தொற்றிக்கொள்ளக் கூடிய நுண்கிருமிகளை போக்க முடிகிறது.

உணவு உட்கொள்ளும் முறையிலும் வாழை இலையில் உணவு உண்பதே ஆரோக்கியமானதாகும். செம்பு பாத்திரங்கள், வெள்ளி குவளைகளில் நீரை அருந்தினால் அனைத்து நுண்கிருமிகளும் அழிந்து விடுவதாக பரிசோதனைகளில் அறியமுடிகிறது. நம் ஆலயங்களிலும் கூட வெள்ளிப் பாத்திரங்களில் உபயோகிக்கும் தீர்த்தத்தில் துளசி. இலவங்கப் பொடி, பச்சைக் கற்பூரம், ஏலக்காய் பொடி போன்றவற்றை கலந்து பக்தர்களுக்கு தீர்த்தமாக வழங்குவதினால், அவர்களை நுண்கிருமிகளில் இருந்து காப்பது மட்டுமின்றி, பல உடற் கோளாறுகளையும் போக்கக் கூடிய குணத்தை இது அளிக்கின்றது. எனவேதான் தீர்த்தம் வழங்கும் போது அர்ச்சகரும் *''அகாலம்ருத்யுஹரணம், ஸர்வவ்யாதி நிவாரணம்''* எனும் மந்திரத்தை கூறி வழங்குகின்றார்.

மற்றவர் என்ன கூறுவரோ என்று எண்ணி நம் பழக்கவழக்கங்களை புறக்கணிக்கக் கூடாது. பழக்கவழக்கங்களைப் புறக்கணிப்பதால் தான் கொடிய தொற்று நோயான "கொரோனா" போன்ற நோய்கள் ஏற்பட்டு உலகத்தையே அச்சுறுத்தி வருகின்றன. எனவேதான் நாம் கடைபிடிக்கும் சனாதன பழக்கவழக்கங்களை நிறுத்தக் கூடாது. நம் நல் வாழ்விற்காக அவற்றை கடைபிடித்தல் வேண்டும். நம்மை நாமே தற்காத்துக் கொள்ளல் வேண்டும்.

கொரோனா பேரழிவின் போது திருமலை திருப்பதி தேவஸ்தானமும் உலக நன்மைக்காக ஜபம், யாகங்கள், பாராயணங்கள் முக்கியமாக யோக வாசிஷ்டத்தில் கூறப்படும் தன்வந்தரி மஹாமந்திர பாராயணம் சுமார் 62 நாட்கள் மேற்கொண்டது, அதேபோன்று இராமாயணத்தில் "சுந்தர காண்ட பாராயணம்" பண்ணப்பட்டதும், அனைத்து மக்களுக்கும் ஆரோக்கியம் நல்க வேண்டியே ஆகும். மேலும், அரசும் கொரோனா நோய் தொற்றுக்கு ஆளாகாமல் இருப்பதற்கான வழிமுறைகளையும் வழங்கி வருகிறது. எப்பொழுதும் கைகளை தூய்மையாக வைத்திருத்தல் வேண்டும், தவறாமல் முகக்கவசம் அணிதல் வேண்டும், சமூக இடை வெளியைக் கடைப்பிடித்தல் வேண்டும் என தெரியப்படுத்துகிறது.

நாமும் இவற்றினை தவறாமல் கடைபிடிப்போம். தம்மைச் சார்ந்தவர்களையும் கடைபிடிக்க வைப்போம்.

# ஸ்யமந்தகமணியின் பெருமை



திருமதி எஸ்.குமுதா வரதராஜன்,
சென்னை, 044-28440997

ஸ்ரீ கிருஷ்ணாவதாரத்தில் நடந்த பல சிறப்பான நிகழ்ச்சிகளில் ஸ்யமந்தகமணியின் பெருமை அளவிடற்கரியது.

யது வம்சத்தோன்றலில் நிக்கினன் என்ற மன்னனுக்கு இரண்டு பிள்ளைகள் இருந்தனர். ஒருவன் பிரசேனன். மற்றொரு பிள்ளை சத்ராஜித். இருவரும் ஒருவர் மீது ஒருவர் அன்புடையவர்கள். பிரசேனன் நல்லொழுக்கம் இல்லாதவன். ஆனால் சத்ராஜித் மிகவும் நல்லவன். சூரிய பகவானை சத்ராஜித் கடற்கரையில் இருந்து தினமும் பக்தியோடு துதித்து வந்தான். சூரிய பகவானும் சத்ராஜித்துக்கு நண்பனாயிருந்தான். ஆகையால் அவன் பக்திக்கு பரவசமடைந்த சூரிய பகவான் தன் கழுத்தில் அணிந்திருந்த ஸ்யமந்தக மணியோடு காட்சி அளித்தான். சத்ராஜித்தும் மிக்க மகிழ்ச்சி அடைந்து அவரை வணங்கி, தான் அவரிடம் கொண்டிருந்த பக்திக்கு பரிசாக ஒன்றைக் கேட்க விரும்பினான்.

சூரிய பகவான் ஸ்யமந்தகமணியைக் கழற்றி வைத்து, சத்ராஜித்தை வேண்டிய வரம் கேட்கும்படி சொன்னார். சத்ராஜித்தும் அவர் கழற்றிய ஸ்யமந்தமணியைத் தனக்குத் தந்தருள வேண்டினான். சூரியபகவானும் மிக்க மகிழ்ச்சியோடு அம்மணியைக் கொடுத்து பின்னர் மறைந்தார்.

சத்ராஜித் மிக்க உகப்போடு அம்மணியைக் கழுத்தில் அணிந்து, அதன் மகிமையால் சூரிய பகவானைப் போல் விளங்கினான். பின்னர் துவாரகைக்குச் சென்றான். அவனைக் கண்டவர்கள் கண்ணபிரானைத் தரிசிக்க சூரிய பகவானே வருகிறார் என்று மதித்து கண்ணனிடம் அறிவித்தனர். கண்ணனும், வருகிறவன் சூரியன் அல்லன். அவன் அநுக்ரஹத்தால் பெற்ற ஸ்யமந்தகமணியை அணிந்து கொண்டு வருவதனால், சூரியனைப் போல் தோற்றமளிக்கும் சத்ராஜித் என்பதைக் கருத்தில் கொண்டு, இவ்வுண்மையை அருகே சென்று கண்டு வரும்படி வந்தவர்களிடம் கூறினான். அவர்களும் அருகே சென்று பார்த்தபோது சத்ராஜித் மன்னன் தான் என்று அறிந்தனர். அவனும் துவாரகையை அடைந்து மணியைக் கழற்றி தன் மாளிகையில் வைத்தான். அம்மணியானது ஒரு நாளைக்கு எட்டுப் பாரப் பொன் (20 அல்லது 28 துலாம்) அளிக்கும் சக்தி வாய்ந்தது.

அது இருக்கும் இடத்தில் வியாதி, கொடிய உயிரினங்களால் ஏற்படும் அபாயம், மழையின்மை முதலிய துன்பங்கள் இல்லாதிருக்கும். கல்வி, கேள்விகளில் சிறந்தவனும், நல்லொழுக்கம், நல்லறிவு, நற்சிந்தை உடையவனும் இந்த மணியை அணிந்து கொள்ளத் தகுதி உடையவனாவான். இவையேதுமில்லாதவன் அணிந்தால் அவனுக்கு அது கெடுதலை விளைவிக்கும். சத்ராஜித் நல்லொழுக்கம், நல்லறிவு, நற்சிந்தை உடையவனாதலால் அந்த மணி அவனுக்கு தினமும் எட்டு பாரப் பொன்னைக் கொடுத்தது. அவனும் நல்லொழுக்கம் உடைய ஏழை எளியவர்களுக்கும், முதியவர்களுக்கும் அந்தப் பொன்னை வழங்கி வந்தான்.

கண்ணன் இந்த ஸ்யமந்தகமணி கம்சனுடைய தகப்பனான உக்ரஸேன மகாராஜாவுக்குக் கிடைத்தால் நன்றாக இருக்கும் என்று எண்ணினான். ஆனால் யது குலத்தில் வேற்றுமை உண்டாகும் என்று ஆலோசித்து அந்த எண்ணத்தைக் கைவிட்டான். சத்ராஜித்தும் இந்த மணியை கண்ணன் கேட்டால் எதைச் சொல்லி மறுப்பது என்று யோசித்து, தான் இதை பாது




காப்பாக வைத்துக் கொள்வதும் சிரமம் என்று நினைத்து அதை தன் சகோதரனான பிரசேனனிடம் கொடுத்து விட்டான்.

நல்லொழுக்கமற்ற பிரசேனனும் அதன் பெருமை அறியாது அதைத் தான் அணிந்து குதிரை மீதேறி வேட்டையாடச் சென்றான். அந்தக் காட்டில் கொடிய சிங்கம் ஒன்று அவ்வழியே வந்தது. அது மிக்க சினம் கொண்டு, இவன் மீது பாய்ந்து, இவனைக் கொன்று அந்த மணியைக் கவ்விச் சென்றது. அந்த வழியே வந்த கரடியான ராஜன் ஜாம்பவான் அந்த சிங்கத்தைக் கொன்று, அந்த மணியைக் கைப்பற்றி, தன் இருப்பிடம் சென்று தன் பிள்ளையான சுகுமாறனுக்கு விளையாடக் கொடுத்தார். இந்த சமயத்தில் வேட்டையாடச் சென்ற பிரசேனன் திரும்பி வராமையால் கண்ணபிரானின் சூழ்ச்சியால் அவனுக்கு ஏதேனும் நேர்ந்திருக்குமோ என்று யாதவர்கள் சந்தேகத் தோடு ஒருவருக்கொருவர் பேசிக் கொண்டதை கண்ண பிரானும் கேள்வியுற்று, உலகத்தார் பழிச்சொல்லுக்கு ஆட்படாதவாறு யாதவகூட்டத்தை அழைத்துக் கொண்டு, பிரசேனனைத் தேடும் முயற்சியில் ஈடுபட்டு காடு முழுவ தும் தேடி, ஓரிடத்தில் பிரசேனனும் அவனது குதிரையும் உயிரற்றுக் கிடந்ததைக் கண்டு, அதே இடத்தில் சிங்கத்தின் அடிச்சுவடுகளையும் அவனைத் தாக்கிய அதன் நக அடை யாளங்களையும் யாதவர்களும் கண்ணனும் நேராகப் பார்த்த பிறகு கண்ணனும் தனக்கு ஏற்பட இருந்த பழிச்சொல்லிலிருந்து தப்பினான்.

அதன் அடிச்சுவட்டைப் பின் தொடர்ந்துச் செல் லும்போது அச்சிங்கமும் கரடியால் கொல்லப்பட்டி ருப்பதைப் பார்த்து, அம்மணியின் அருமை பெரு மையை நினைத்து, தன்னோடு வந்த யாதவர்களை ஓர் மலைச்சாரலில் நிறுத்திவிட்டு, தான் மட்டும் கரடி சென்ற வழியில் சென்று கரடியின் குகையில் நுழைந் தான். அங்கு ஜாம்பவான் என்ற அந்த கரடியின் குமாரனான சுகுமாறனை அதன் செவிலித்தாய் ஒரு தொட்டிலில் இட்டு ஆட்டிக் கொண்டிருந்தாள்.

அழுது கொண்டிருந்த அக்குழந்தைக்கு தாலாட் டாக மணியின் பெருமையைப் பற்றி சுருக்கமாக நடந்து முடிந்த விஷயங்களை பாட்டாகப் பாடினாள். அதாவது பிரசேனன் பெற்ற மணியை அடைய நினைக்கும் சிங்கம் அவனைக் கொன்றதும், பிறகு உன் தந்தையான ஜாம்பவான் அச்சிங்கத்தைக் கொன்று அந்த மணியை உனக்கு விளையாடக் கொடுத்துள்ளான். இனி உனக்கு ஒரு குறையு மில்லை அழாதே மகனே! என்று பாடி தாலாட்டினாள்.

அப்போது அந்த மணியை வைத்தகண் வாங்கா மல் பார்த்துக் கொண்டிருந்த கண்ணனைக் கண்டு நடுங்கி தன்னைக் காப்பாற்றுமாறு குரல் எழுப்ப, ஜாம்பவானும் கோப ஆவேசத்துடன் அங்கு வந்து கண்ணனோடு இருபத்திஎட்டு நாட்கள் யுத்தம் செய்தான். வெற்றி, தோல்வி யாருக்கும் கிட்டாத நிலையில், அங்கே, மலைச்சாரலில் உள்ள யாதவ சேனைகள் கண்ணன் திரும்பி வரக் காணாமையால், கண்ணன் பகைவரை வெல்லும் ஆற்றல் மிக்கிருந்தும் கரடியின் குகையில் வேறு ஏதாவதொரு இடையூறு நேர்ந்து, அதனால் அவர் உயிர் துறந்திருப்பார் என்று நினைத்தனர்.

யாதவகுலமே கண்ணன் இல்லாமல் இனி நாம் என் செய்வோம் என்று சிந்தித்து மிகவும் மனம் நொந்து வாய்விட்டு அலறினர். பின் ஒருவாறு தேறி அவருக்குச் செய்ய வேண்டிய சடங்குகளை மிகவும் பக்தியோடும், கவனமாகவும் செய்து முடித்தனர். இவர்கள் இப்படிச் செய்ததின் பலனாக ஜாம்பவா னோடு யுத்தம் செய்துக் கொண்டிருந்த கண்ணனுக்கு மனக்களிப்பும் உடல் வலிமையும் உண்டாயிற்று.

அதே சமயத்தில் ஜாம்பவானுக்கு உடல் தளர்ச்சியும் மனக்கலக்கமும் உண்டாகி, போர் செய்யும் ஆற்றல் குன்றியதால் கண்ணன் திருவடிகளில் விழுந்து வணங்கி, தீயவர்களை அழித்து நல்லவர்களைக் காக்க அவதரித்த தனது தலைவர் இராமபிரானே இப்போது கண்ணபிரானாக அவதாரம் செய்துள்ளதை எண்ணிப் பலவாறாகத் துதி செய்தார். கண்ணனும் அவர் மேல் இரக்கம் கொண்டு அவரை கைகளால் அணைத்துக் கொண்டு நடந்து முடிந்த பெரும்போரில் மிகவும் சோர்வடைந்த ஜாம்பவானுக்கு அருள் புரிந்தார்.

பின்னர், ஜாம்பவான் கண்ணனை நோக்கி தேவரீரை இன்னாரென்று அறியாமல் போர் செய்த கொடுஞ்செயலை மன்னித்து அருள்வதோடு தன் புதல்வியாகிய ஜாம்பவதி யையும் மனைவியாக அங்கீகரிக்க வேண்டுமென்று வேண்டிக் கொண்டு, தன் புதல்வியையும், ஸ்யமந்தகமணி யையும் கொடுத்து வணங்கினார். ஜாம்பவானின் வேண்டு கோளுக்கு இணங்கி ஜாம்பவதியை மனைவியாகக் கொண்டு ஸ்யமந்தகமணியையும் பெற்று ஜாம்பவதிக்கு ஆசி மொழியைக் கூறி துவாரகா புரியை நோக்கி எழுந்த ருளினார்.

அப்போது துவாரகாபுரியிலுள்ள அனைவரும் மனக் களிப்புடன் ஆனந்தக் கண்ணீர் மல்க வணங்கி நின்று இழந்த பொருளைப் பெற்றோமென்று மகிழ்ச்சிக் கடலில் மிதந்து ஆரவாரித்தார்கள்.

கண்ணன் ஜாம்பவானுடைய குகையில் நடந்த வர லாற்றை விவரமாக யாதவ குழந்தைகளுக்கு எடுத்துக் கூறி, ஸ்யமந்தகமணியை சத்ராஜித்துக்கு அளித்து, ஜாம்ப வதியை தன் அந்தப்புரத்திற்கழைத்துச் சென்று சுகமாக எழுந்தருளியிருந்தார்.

பக்தவத்ஸலனாகிய ஸ்ரீகிருஷ்ணபகவான் ஜாம்பவதி என்னும் கன்யாரத்னத்தையும், ஸ்யமந்தக மணி என்னும் உயர்ந்த ரத்னத்தையும் பெற்று, மேலும் பல ரத்னங்களால் ஜாம்பவானால் ஆராதிக்கப்பெற்று, அதன் காரணமாக ஜாம்பவானுக்கு திரும்பி வருதலில்லாத மோக்ஷ ஸாம் ராஜ்யத்தைக் கொடுத்தான்.

துவாரகையில் தேவகியும் ருக்மிணியும், வஸுதேவ ரும் மற்றும் எல்லா உறவினர்களும், குகைக்குள் சென்ற கிருஷ்ணன் திரும்பி வரவில்லை என்று யாதவர்கள் சொல்லக்கேட்டு மிகவும் துக்கித்து சத்ராஜித்தை சபித்து, மீண்டும் கிருஷ்ணனைப் பெற மஹாமாயையென்னும்



துர்கையைப் பணிய, அவளும் இவர்களைப் பார்த்து மீண்டும் நீங்கள் கிருஷ்ணனைப் பெறுவீர்கள் என்று ஆசீர்வதித்தாள். அவ்வமயம் ஸ்ரீகிருஷ்ணனும் தன் ஆசை நிறைவேறப் பெற்று ஜாம்பவதியையும் அழைத்துக் கொண்டு அவர்களை களிப்புறச் செய்ய அவர்கள் முன் தோன்றினான்.

மணியைப் பெற்றுக் கொண்ட சத்ராஜித்தும் கிருஷ்ணனுக்கு மணியைக் கொடுக்காமல் அவன் மீது வீண் பழி சுமத்திய பாபத்தினால் மிகவும் மனம் நொந்து, வெட்கப்பட்டு அதற்குப் பரிகாரம் தேடிக் கொள்ள நினைத்து தனக்கு இனி வரும் நன்மை தீமைகளை ஆலோசித்து தனக்கு க்ஷேமமுண்டாக ஒரு உபாயத்தைக் கையாண்டான்.

பல மன்னர்களால் வேண்டப் பெற்றவளும், ஒழுக்கம், அழகு, மேன்மை முதலான நற்குணங்கள் நிறைந்தவளும், மங்கள ஸ்வபாவமுள்ளவளும், பேரழகியுமான தன் புதல்வி சத்யபாமையையும், மேலும் பல உயர்ந்த ரத்னங்களையும் கொடுத்தார். ஸ்ரீகிருஷ்ணனும் சத்யபாமையை முறைப்படி விவா ஹம் செய்துக் கொண்டு மணியை வாங்க மறுத்தார். அந்த மணியால் வரும் பஞ்சம் முதலான கொடிய பலன்கள் தங்களைச் சேரட்டும் என்றும், ஆண் வாரிசு

சத்ராஜித்துக்கு இல்லாத காரணத்தால் சத்ராஜித்துக்கு வரும் பணம் தன்னைச் சேரட்டும் என்றும் கூறினார்.

இதைக் கேள்வியுற்று அக்ரூரனும், க்ருதவர்மனும் சததன்வன் என்னும் மன்னனைப் பார்த்து, சத்ராஜித்தைக் கொன்று ஸ்யமந்தகமணியைக் கைக்கொள்ள யோசனை கூறினார்கள். சத்யபாமை தங்களுக்கு கிடைக்கவில்லை என்ற காரணத்தால் அவர்கள் ஆத்திரத்தோடு கூறியதைக் கேட்ட சததன்வனும் மதிகெட்டு மணியிடத்தில் மிகவும் பேராசைக் கொண்டு, தூங்கிக் கொண்டிருக்கும் சத்ராஜித்தைக் கொன்று மணியை எடுத்துக் கொண்டு போனான். சத்யபாமையும் தந்தை இறந்தது கேட்டு மிகவும் துக்கமடைந்துப் பலவாறாகப் புலம்பினாள். இதையறிந்த கிருஷ்ணனும் ஏதுமறியாதவன்போல் மனிதர்களின் மனநிலைக்கேற்ப துக்கித்து கண்ணீர் சொரிந்து புலம்பினான். அதன் பிறகு கிருஷ்ணனும் சத்யபாமையோடும் தன் தமயனோடும் ஹஸ்தினாபுரத்தினின்று புறப்பட்டு துவாரகைக்கு வந்து சததன்வனைக் கொன்று மணியைப் பறிக்க முயன்றார்.

இதையறிந்த சததன்வனும் தன்னைப் பாதுகாத்துக் கொள்ள அக்ரூர, க்ருதவர்மர்களின் உதவியை நாட, அவர்களும் கிருஷ்ணனின் அவதார மேன்மையை அறிந்தவர்களாகையால் உதவி செய்ய மறுத்தனர். சததன்வனும் அக்ரூரனிடம் மணியை வைத்து விட்டு, ஒரே நாளில் நூறு யோசனை தூரம் நடக்கவல்ல குதிரை மீதேறி மிதிலாபுரியின் உபவனத்தை அடைந்தான். அதற்குமேல் குதிரை போக முடியாமல் விழுந்துவிட்டது. சததன்வன் அதைவிடுத்து தானே நடந்து ஓடினான். இதை அறிந்த ஸ்ரீகிருஷ்ண பலராமர்கள் தங்கள் குருவாகிய சத்ராஜித்தனுக்கு துரோகம் செய்த சததன்வனை தொடர்ந்து சென்று கூரியநுனியுடைய சக்ராயுதத்தினால் அவன் தலையைக் கொய்து அரைத்துணியில் மணியைத் தேடி அது காணாமையால் வேறு ஒருவரிடம் வைத்திருப்பதைக் கண்டு பட்டணம் சென்று மணியைத் தேடிவர கிருஷ்ணனை அனுப்பி விட்டு, தான் மட்டும் மிதிலைக்குச் சென்று, தன் நண்பன் வைதேஹ ராஜனைப் பார்த்தான். ராஜனும் முறைப்படி பலராமனுக்குப் பூஜை செய்தான்.

அக்ரூரனும் க்ருதவர்மனும் சததன்வன் வதைக்கப் பட்டதை கேள்விப்பட்டு தங்களுக்கு என்ன நேருமோ என்று பயந்து துவாரகையினின்று வெளியேறினர். கிருஷ்ணனும் அக்ரூரன் இருக்குமிடத்தில் வியாதிகளோ மழையின்மையோ உண்டாவதில்லை என்று பெரியோர்கள் சொல்லக்கேட்டு அக்ரூரனை வரவழைத்துப் பூஜித்து யோகக்ஷேமங்கள் விசாரித்து, அவனை நோக்கி ஸ்யமந்தகமணி இப்போது உன்னிடத்தில் உள்ளது என்று தனக்கு முன்பே தெரியும்.

சத்ராஜித் துக்கு பிள்ளையில்லையாகில் அது உன்னிடமே இருக்கட்டும் என்றான். ஏனெனில் நீ நல்லொழுக்கம் உள்ளவன். ஆனால் பலராமன் நான் மணியை ஒளித்து விட்டேன் என்று தவறாக நினைத்துக் கொண்டிருப்பதால் அந்த மணியை உன்னுடைய உறவினர்களுக்குக் காட்டி தெளிவு பிறக்கச் செய்வாயாக. அந்த மணியின் மகிமையால் பல நல்ல யாகங்கள் நடக்கின்றன என்று நல்வார்த்தைகளைக் கூறியவுடன் அக்ரூரன் அந்த மணியை தன் வஸ்த்திரத்திலிருந்து எடுத்துக் கொடுத்தான். கிருஷ்ணனும் மணியை தன் உறவினர்களுக்குக் காட்டி தன் மீது வந்த பழியைப் போக்கி மணியை அக்ரூரனுக்கே திருப்பிக் கொடுத்தான்.

ஆக, இந்த ஸ்யமந்தகமணி, ஸ்ரீவிஷ்ணு பகவானின் வீரச் செயல்களை தன்னுள்ளே அடக்கிக் கொண்டிருப்பதால் இந்த விருத்தாந்தத்தின் மகிமையை சொல்பவர்கள், கேட்பவர்கள் மற்றும் நினைப்பவர்களின் பாபத்தைப் போக்கி எல்லாவித மங்களங்களையும் விளைவித்து மோக்ஷ ஸாம்ராஜ்யத்துக்குக் காரணமாக சாந்தியை அளிக்கும் என்பது திண்ணம்.

ஸர்வம் ஸ்ரீக்ருஷ்ணார்ப்பணமஸ்து


## ஸப்தகிரி வாசகர்களுக்கு...

ஸப்தகிரி சந்தாதாரர்கள் தயவு செய்து முகவரியை முறைபடுத்துவதன் பொருட்டு **0877-2264359** தொலை பேசியில் தங்கள் முழு முகவரி, அஞ்சல் எண், செல்போன் எண்ணை அலுவலக பணி நாட்களில் (காலை 10:30 மணி முதல் மாலை 5:00 மணிக்குள்) மீண்டும் ஒரு முறை தெரியப்படுத்தவும். மேலும் sapthagiri_helpdesk@tirumala.org க்கு இமெயில் அனுப்புவதன் வாயிலாகவும் தெரிவியுங்கள்.

# நம்மாழ்வார் அருளிய தமிழ் வேதம்!



முனைவர். ச.செந்திலாண்டவன்,
சென்னை, 94445 82856

நம்மாழ்வார் அருளிச் செய்த திருவாய்மொழிக்கு ஸ்ரீமந்நாதமுனிகள் அருளிய தனியன் ஒன்றில், நம்மாழ்வாரின் பாசுரங்களின் மேன்மையை,

*"பக்தாம்ருதம் விச்வ ஜநானு மோதனம்*
*ஸர்வார்த்ததம் ஸ்ரீசடகோப வாங்மயம் |*
*ஸஹஸ்ர சாகோபநிஷத் ஸமாகமம்*
*நமாம்யஹம் த்ராவிட வேத ஸாகரம்"*

என்று பாடியுள்ளார். அதாவது, "அடியார்களுக்கு ஆராவமுதமாய் இருப்பதும், எல்லா மக்களையும் மகிழ்விக்கச் செய்வதும், எல்லா உறுதிப் பொருள்களையும் அருள வல்லதும், ஆயிரக்கணக்கான கிளைகளைப் பரப்பியுள்ள உபநிடதங்களின் தொகுதியாய் இருப்பதும், நம்மாழ்வாரால் அருளிச் செய்யப் பெற்றதுமான "தமிழ் வேதக்கடலை" அடியேன் வணங்குகிறேன்" என்பது இத்தனியனின் பொருள்! நம்மாழ்வாரின் திருவாய்மொழிப் பாசுரங்கள், வைணவத் தத்துவமாகிய "அர்த்த பஞ்சக ஞானத்தை உணர்த்துவதாக இருக்கின்றன" என்பர் ஆன்றோர்.

## ஆன்மாவின் இயல்பு!

*"கருமாணிக்க மலைமேல் மணித்தடம் தாமரைக் காடுகள் போல்*
*திருமார்பு வாய் கண் கை உந்தி காலுடை ஆடைகள் செய்யபிரான்*
*திருமால் எம்மான் செழுநீர் வயல் குட்ட நாட்டுத் திருப்புலியூர்*
*அருமாயன் பேரன்றிப் பேச்சிலள் அன்னை மீர்! இதற்கு என் செய்கேனோ?"*

இப்பாடலில் திருமால்-மகாவிஷ்ணு தன்னுடைய திவ்ய அலங்காரங்களுடன், அங்கங்களுடன் நீலமேகச் சியாமள வண்ணனாகத் தோன்றுகிறான்! கரிய மாணிக்க மலையிலே, அழகிய தடாகத்தில் தாமரைப் பூக்கள் மலர்ந்து அழகினை விரித்தாற்போலே, அவனது திருமார்பும், திருவாயும், திருக்கண்களும், திருக்கைகளும், திருநாபியும், திருவடிகளும், பீதாம்பரங்களும் அழகுடன் விளங்கிப் பொலிகின்றன. இப்படிப்பட்ட சுந்தரப் பெருமாள், குட்ட நாட்டுத் திருப்புலியூரில் எழுந்தருளியுள்ளான். அவனுடைய திருப்பெயரைத் தவிர, வேறு எதையும் எங்கள் தலைவி பேசவில்லை! அன்னையீர்! இதற்கு என் செய்வேன் என்று தோழி கூற்றாகப் பாடுகிறார் நம்மாழ்வார். நாயகிதான் ஆன்மா! ஆகவே ஆன்மாவின் இயல்பு பரம்பொருளாகிய எம்பெருமானையே சதா சர்வ காலமும் நினைத்திருத்தல்!

## பரம்பொருளின் இயல்பு !

நம்மாழ்வாருக்கு இறையருள் இன்ப நுகர்ச்சி நிலையைக் கவர்ந்து உள்ளெழுச்சியை ஏற்படுத்தியது எம்பெருமானின் கல்யாண குணங்களே எனலாம்!

*"உயர்வற உயர்நலம் உடையவன் யவன் அவன்*
*மயர்வற மதிநலம் அருளினன் யவன் அவன்*
*அயர்வறும் அமரர்கள் அதிபதி யவன் அவன்*
*துயரறு சுடரடி தொழுது எழு என் மனனே!"*

ஏ! நெஞ்சமே! தன்னைக் காட்டிலும் ஒப்புயர்வு இல்லை என்னும்படி, உயர்ந்த மகிழ்ச்சி முதலிய நல்ல

கல்யாண குணங்களை உடையவன் எம்பெருமான்! எனது அறியாமை முழுவதும் நீங்கும் படியாக, ஞானத்தையும் பக்தியையும் குழைத்து அடியேனுக்கு அருளினான்!

மயர்வில்லாத நித்திய சூரிகளுக்கு அவன் தலைவன்! உயிர்களுக்கு ஏற்படும் இடர்களையெல்லாம் போக்குகின்ற சுடரொளித் திருவடிகளை உடைய எம்பெருமானைத் தொழுது, பிறவியாகிய பெருங்கடலினை நீந்திக் கரையேறு என்று தம் நெஞ்சத்திற்குக் கூறுவது போலே நம்மனோர்க்கு கூறுகிறார், நம்மாழ்வார்!

### ஆன்மா அடையும் பயன்!

திருவேங்கடநாதனைக் குறித்துப்பாடும்போது,

*"எந்தை தந்தை தந்தை தந்தை தந்தைக்கும்*
*முந்தை வானவர் வானவர் கோனொடும்*
*சிந்துபூ மகிழும் திருவேங்கடத்து*
*அந்தமில் புகழ்க் காரெழில் அண்ணலே"*

திருவேங்கடத்து அமுதத்தை, எற்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும் போற்றி வருகிறேன் என்றும்,

*"ஒழிவில் காலம் எல்லாம் உடனாய் மன்னி*
*வழுவிலா அடிமை செய்ய வேண்டும் நாம்*
*தெழிகுரல் அருவித் திருவேங்கடத்து*
*எழில்கொள் சோதி எந்தை தந்தை தந்தைக்கே"*

திருவேங்கடத்தில் எழுந்தருளியிருக்கும் சீனிவாசப் பெருமாளுக்கு, இடையறாது, எல்லாக் காலங்களிலும், எல்லா இடங்களிலும், குறைவிலா நிறைவாய்ச் சகல தொண்டினையும் செய்ய வேண்டும் என்று விண்ணப்பிக்கின்றார்! இதுவே சகல ஆன்மாக்களும் அடையும் பயன்!

### அப்பயனை அடையும் உபாயம்!

*"ஆராவமுதே! அடியேன் உடலம் நின்பால் அன்பாயே*
*நீராய் அலைந்து கரைய உருக்குகின்ற நெடுமாலே!*
*சீரார் செந்நெல் கவரி வீசும் செழுநீர்த் திருக்குடந்தை*
*ஏரார் கோலம் திகழக் கிடந்தாய்! கண்டேன் எம்மானே!"*

என்று திருக்குடந்தை ஆராவமுதனைப் பாடுகின்றார் நம்மாழ்வார். "எம்பெருமானே! உன் அழகாலே என்னை உருக்குகின்றாய்! உன்னைக் கண்ணாரக் கண்டு அனுபவிக்கும்போதே என் உயிரும் உருகுகின்றது! உன்னோடு சேர்ந்து, உனது பாதாரவிந்தங்களை எனது பக்தி என்ற கண்ணீரால் அபிஷேகம் செய்கின்றேன் பேருவகை அடைகின்றேன்! இந்த வழியை, இந்த உபாயத்தை இதுநாள் வரை தெரிந்திலேன்! இன்று தெரிந்து பேரின்பம் பெற்றேன்!" என்று எம்பெருமானை அனுபவிக்கும் பயனை வழியாகக் கூறுகிறார்! மேலும்

*"நோற்ற நோன்பிலேன் நுண்ணறிவிலேன் ஆகிலும் இனி உன்னை விட்டொன்றும்*
*ஆற்றகிற்கின்றிலேன் அரவின் அணை அம்மானே!"*

என்று பாடும்போது "சரணாகதியே" நல்வழி, உயர் வழி! உய்யும் வழி என்று நம்மனோர்க்கு அறிவுறுத்துகிறார்!

### பயனை அடையத் தடையாக உள்ளவை!

இருள்தரு மாஞாலமான இவ்வுலகில் உள்ளவற்றையெல்லாம் அறவே துறந்து, இறை அனுபவத்தில், ஆத்ம சமர்ப்பணம் செய்யும்படி உபதேசம் செய்கின்றார் நம்மாழ்வார்!. *"மின்னின் நிலைஇல, மன்னுயிர் ஆக்கைகள்"* என்றும் *"நீர் நுமது என்றிவை வேர் முதல் மாய்த்து இறைசேர்மின்"* என்றும்

*"அற்றது பற்று எனில்*
*உற்றது வீடு! உயிர்*
*செற்றது மன்னுறில்*
*அற்று இறை பற்றே"*


என்றும் பாடி, மின்னலுக்கு நிகரான உலகப் பற்றுக்களை விட்டு ஒழித்தால், தடைகள் விலகி, நிலையான "பரமபதத்தை" அடைவது எளிதாகும் என்கிறார்.

உலக மாயையில் சிக்கித் தவிக்கின்ற இன்றைய உலக மக்களும் உய்வதற்காகவே

*"கொண்ட பெண்டிர் மக்கள் உற்றார் சுற்றத்தவர் பிறரும்*
*கண்டதோடு பட்டது அல்லால் காதல் மற்று யாதுமில்லை!*
*எண்டிசையும் கீழும் மேலும் முற்றவும் உண்ட பிரான்*
*தொண்டரோமாய் உய்யல் அல்லால் இல்லை கண்டீர் துணையே!"*

என்று பாடி, "ஆத்மாவிற்கு சத்யமான உறவு எம்பெருமானே! அவனுக்குத் தொண்டராய்ப் பற்றிக் கொள்மின்!" என்றும், "ஜீவான்மா, பரமான்வை அடைய உத்தமமான நெறி, யான், எனது என்னும் செருக்கற்று, எம்பெருமானையே இடையறாது நினைந்து, அவன் ஒருவனையே சரணடைதல் தான்" என்றும் நமக்கு உயர்நெறி காட்டியருள்கின்றார் நம்மாழ்வார்!

# வைணவக் குறுக்கெழுத்துப் புதிர் - 46



தொகுப்பு :
திரு. எஸ். ராஜகுமார்,
சென்னை, 8124930259

புதிருக்கு விடை அறிய
49ம் பக்கம்
பார்க்கவும்...

### இடமிருந்து வலம்

1. கேரளாவில் இராமருக்கு கோயில் உள்ள இடம்....(7)
5. புரந்தரதாஸர் கீர்த்தனை பாடியவுடன் மூடியிருந்த கோயில் கதவு தானாகத் திறந்த திருத்தலம்...(6)
7. ஒரே தலத்தில் மூன்று திருக்கோலங்களில் பெருமாள் காட்சி அளிக்கும் திருத்தலம்....(8)
9. சோளிங்கர் கடிகாசல மலையில் இவர் உள்ளார்....(8)
11. அமாவாசையும் திங்கட்கிழமையும் சேர்ந்த நாள்.... (7)
12. ....(5) வானமாமலைப் பெருமாளுக்கு அபிஷேகம் செய்யப்பட்ட எண்ணெயை சரும நோய் உள்ளவர்கள் தடவி வந்தால் சரும நோய் நீங்கும்.
15. ......(7) யானையைக் கொண்டு கிருஷ்ணரைக் கொல்ல வேண்டுமென்று கம்சன் முடிவெடுத்தான்.
16. வேதவாக்கியங்களை ....(5) என்று சொல்வர்.
18. பெருமாள் நான்கு கோலங்களில் அருள் புரியும் தலம்....(6)
19. அமாவாசை திதியை.....(3) திதி என்று அழைப்பர்.

### வலமிருந்து இடம்

2. திருப்பதி மலையில் சமாதியான சித்தர்....(5)
4. சூரியபகவானை வைணவர்கள் இப்படி அழைப்பர்.....(8)
6. வால் சுருட்டி ஆஞ்சநேயர் உள்ள தலம்....(3)
8. தஞ்சாவூர் ஊத்துக்காடில் காளிங்க.....(10) ஆலயம் உள்ளது.
10. சீதையின் தந்தை....(4)
13. துரியோதனால் கர்ணனுக்கு வழங்கப்பட்ட நாடு...(6)
14. வேதத்தை மீட்க மஹாவிஷ்ணு எடுத்த அவதாரம்....(7)
17. மகாவிஷ்ணுவிற்கு உகந்த நட்சத்திரம்....(5)

### மேலிருந்து கீழ்

1. ஆண்டாள் அருளிச் செய்த பிரபந்தம்....(5)
3. இராமாநுஜர் ஞானதீபம் என்று சிறப்பித்த பாசுரம் முதல்....(6)
13. பாற்கடலைக் கடையும் போது வெளிப்பட்ட .......(4)யை பிரம்மன் தனது மகளாக ஏற்றுக் கொண்டார்.
21. துரியோதனன்.........(5)யை பலர் முன்னிலையில் அவமானப்படுத்தினான்.

### கீழிருந்து மேல்

8. குருபகவான் ரிஷப ராசிக்குச் செல்லும்போது ...(4) நதியில் புஷ்கரம் விழா நடைபெறும்.
20. ஆண்டு முழுவதும் நரசிம்மர் மீது சூரிய ஒளி படுவதுபோல் அமைக்கப்பட்டுள்ள திருத்தலம்....(4)

# திருப்பல்லாண்டு

– திரு. ஏ.கே. கோபி, கள்ளக்குறிச்சி, 94438 79592

ஸ்ரீய:பதியான ஸ்ரீமந்நாராயணனின் வாகனமும் நித்யசூரியுமான பெரிய திருவடி எனப்படும் கருடாழ்வாரின் அம்சமாக ஸ்ரீவில்லிப்புத்தூரில் திருவவதாரம் செய்தவர் விஷ்ணுசித்தர் எனப் போற்றப்படும் ஸ்வாமி பெரியாழ்வார். ஸ்ரீவில்லிபுத்தூரில் நந்தவனம் அமைத்து, அன்றலர்ந்த பூக்களை பக்தியுடன் பறித்து, அழகான மாலையாக ஆர்வத்துடன் தொடுத்து, அவ்வூரிலே கோயில் கொண்டருளிவரும் வடபெருங்கோயிலுடையானான வடபத்ர சாயிக்கு இருவேளைகளிலும் சமர்ப்பிக்கும் திருநந்தவன கைங்கர்யத்தில் ஆழ்ந்த அத்யந்த பக்தியுடன் ஈடுபட்டு வந்தார் பெரியாழ்வார்.

மதுரையினை ஆண்டு கொண்டிருந்த பாண்டிய மன்னன் வல்லப தேவன் என்பானுக்கு வேத வேதாங்கங்கள் அறுதியிடும் பரதேவதை குறித்து நிரூபணம் தேவைப்பட, நாட்டிலுள்ள வேத விற்பன்னர்களையும் வித்வான் களையும் அரசவைக்கு வருமாறு வேண்டுகோள் விடுத்தான்.

**திருப்பல்லாண்டு :**

எம்பெருமானின் ஆணைப்படியும் நியமனப்படியும் மதுரை நகருக்கு பெரியாழ்வார் சென்று மன்னனின் அரசவையில் பல்வேறு சமயங்களைச் சார்ந்த வித்வான்களின் முன்பு பல்வேறு வேத உபநிஷத் புராண இதிகாச வாக்கியங்களை பிரமாணமாகக் கொண்டு ஸ்ரீமந்நாராயணன் ஒருவனே பரதேவதை என நிரூபித்து, அரசன் வைத் திருந்த பொற்கிழியினை பரிசாகப் பெற்றார். பெரியாழ்வாரின் நிரூபணத்தில் ஆனந்தமடைந்த அரசன் ஆழ்வாரை ஒரு யானை மீதமர்த்தி சகல மரியாதைகளோடு மேளதாள வாத்தியங்கள் முழங்க மதுரை நகரை வலம் வருமாறு செய்தான்.

இதனால் அகம் மகிழ்ந்த ஸ்ரீமந்நாராயணன் ஸ்ரீவைகுண்டத்தி லிருந்து கருட வாகனத்தில் பிராட்டிமார்களுடன் அமர்ந்து புறப்பட்டு அரனும் அயனும், நித்ய சூரிக ளும், இந்த்ராதி தேவர்களும் புடைசூழ மதுரை வான்வெளியில் பெரியாழ் வாருக்கு திருக்காட்சித் தந்தருளினார்.




எம்பெருமானின் அளப்பரிய சௌந்தர்யத்தினையும், சௌலப் யத்தினையும், பராக்கிரமத்தினையும், தேஜஸ்ஸினையும் தம்முடைய கண் களாலும், மனத்தினாலும் வாரிப்பருகினார் பெரியாழ்வார். யானையின் மத்தகத்தின் மீதிருந்த மணிகளை தாளங்களாகக் கைகளிலேத் தாங்கி இசைகூட்டி திருப்பல்லாண்டு என்கிற பிரபந்தப் பாசுரங்களைப் பாடி எம்பெருமானை மங்களாசாசனம் செய்த ருளினார்.

**பிதா புத்திர சம்பந்தம் :**

ஆழ்வார்கள் எம்பெருமானின் மீதுள்ள பக்தி நிலையினை நவவித சம்பந்தம் என் கிற ஒன்பது வகை உறவுகளை வகுத்துக் கொண்டு பாசுரங்களைப் பொழிந்துள்ளனர். நாயகி, தோழன், அடிமை, தெய்வம் என்று உள்ள உறவுகளில் எம்பெருமானை

புத்திரனாகவும், அவனின் தாய் அல்லது தந்தை என்கிற உறவும் உள்ளது. இதனை பிதா புத்திர சம்பந்தம் என்பர் ஆன்றோர். பெரியாழ்வார் தம்மை யசோதையாகவும், எம்பெருமானை கண்ணனாகவும் பாவித்து திருப்பல்லாண்டு, பெரியாழ்வார் திருமொழி உள்ளிட்ட பாசுரங்களை அருளியுள்ளார்.

சர்வ வல்லமை பொருந்தினவனான எம்பெருமான் தம்மை காத்து வைகுண்ட வாழ்வு அருள வேண்டும் என எம்பெருமானை முன்னிட்டுக் கொண்டு பிரார்த்தனை செய்தனர் மற்ற ஆழ்வார்கள். பெரியாழ்வார் தாயார் என்கிற நிலையிலே உள்ளதால் எவ்வாறு தாயானவள் தாம் பெற்ற பிள்ளைக்கு யாராலும் எவ்வித தீங்கும் வராமல் தாம் தான் இரட்சிக்க வேண்டும் என பாசத்துடனும் எச்சரிக்கையுடனும் பயத்துடனும் பிள்ளையினை பாதுகாப்பாளோ, அவ்வாறே பெரியாழ்வாரும் எம்பெருமானை தாம்தான் பாதுகாக்க வேண்டும் என்கிற யசோதையின் நிலையினை இயல்பாகவே பெற்று, கண்ணனின் திருமேனிக்கு எந்த தீங்கும் வந்துவிடுமோ என்கிற பயத்தில் பாசுரங்களை இயற்றியுள்ளதாக ஆசாரியர்கள் அருளுவர்.



**மூவகை உபாசனை :**

மனிதர்கள் ஒரு பயனை முன்னிட்டுக் கொண்டு பகவானை தவம் ஜபம் முதலான முறைகளால் உபாசனம் செய்வார்கள். உலகியல் இன்பங்களை வேண்டி உபாசனம் செய்வோர்கள் ஐஸ்வர்யார்த்திகள் எனப்படுவர். பகவான் ஐச்வர்யத்தினை அருளினாலும் இவர்களுக்கு மறுபிறப்பு உண்டு.

தம்மையே பரமாத்மாவாக எண்ணி, தம் ஆத்மாவையே உபாசனம் செய்வோர் கைவல்யார்த்திகள் எனப்படுவர். இவர்களுக்கு சொர்க்கம் முதலான தேவர்களுக்கு நிகரான சுகபோகங்கள் கிடைத்தாலும் பலன் தீர்ந்தபிறகு மறுபடியும் பூலோகத்தில் பிறப்பார்கள்.


பகவானையே மிகவும் விரும்பி அவனுக்கான கைங்கர்யம் ஒன்றினையே பரமபோக்யமாக உபாசனம் செய்து சரணாகதி அனுஷ்டிப்பவர்கள் பகவல்லாபார்த்திகள் ஆவர். எம்பெருமான் இவர்களுக்கு ஸ்ரீவைகுண்ட வாழ்வினை அருளி தம் திருவடிகளுக்குள் சேர்த்துக் கொள்வதால் இவர்களுக்கு மறுபிறப்பு கிடையாது.

**பெரியாழ்வார் தனித்த பல்லாண்டு :**

திருப்பல்லாண்டு மொத்தம் பனிரெண்டு பாசுரங்களைக் கொண்டது. முதல் இரண்டு பாசுரங்களால் ஆழ்வார் தாம் தனியாக எம்பெருமானுக்கு பல்லாண்டு பாடுகிறார். முதற் பாசுரத்தில் பலகோடி நூறாயிரம் ஆண்டுகளுக்கு அடியார்களை காத்தருளும் திண்மையான திருத்தோள்களை உடையவனான எம்பெருமானின் செம்மையானத் திருவடிகளுக்கு **"செவ்வடி செவ்வி திருக்காப்பு"** என்று மங்களாசாசனம் செய்கிறார்.

இரண்டாம் பாசுரத்தில் எம்பெருமானும், அவன் மார்பிலே நித்யவாசம் செய்தருளும் பெரிய பிராட்டியாரும், தம்மோடு கூடியிருக்கின்ற பாகவதோத்தமர்களும், ஒரு கணமும் பிரியாமல் பகவானை சேவித்திருக்கவும், வலது திருக்கையில் ஒளிவீசும் திருவாழி எனும் சக்கரமும், இடது திருக்கையிலேந்திய யுத்தகளத்திலே நாதம் எழுப்புவதான சங்கும் பல்லாண்டு ***"அடியோமோடும் நின்னோடும் பிரிவின்றி"*** என மங்களாசாசனம் செய்தருள்கிறார்.

தாம் மட்டில் பல்லாண்டு பாடியதில் திருப்தி அடையாத ஆழ்வார் மதுரையில் இருக்கின்ற அனைத்து வகையான உபாசகர்களும் ஸ்ரீவைஷ்ணவர்களாகி, ஸ்ரீமந்நாராயணனுக்கு பல்லாண்டு பாடி உய்வடைய வேண்டும் என்கிற அவாவில் அவர்களையும் கோஷ்டியில் கூடி இருந்து குளிருமாறு அழைக்கிறார்.



### பகவல்லாபார்த்திகள் :

3,6,9 பாசுரங்களில் பகவல்லாபார்த்திகளை அழைத்து வந்ததை உறுதிப்படுத்தியும், அவர்களோடு சேர்ந்தும் பல்லாண்டு பாடிக் களிக்கின்றார். இருபத்தொரு தலைமுறைகளாக தூய்மையான சரணாகதி தத்துவத்தினை கிஞ்சித்தும் மாறாமல் கை கொண்ட பாகவதோத்தமர்களே ''ஏழாட்காலும் பழிப்பிலோம்'' வாருங்கள் என்கிறார். அரக்கர்கள் மலிந்த இலங்கையினை படையெடுத்து அழித்தவனுக்கு ''இலங்கை பாழாளாகப் படை பொருதானுக்கு'' என்று பல்லாண்டு பாடுவோம் என மூன்றாம் பாசுரத்தில் பெரியாழ்வார் அழைக்கிறார்.

அவர்களும், அந்தி நேரத்தில் நரசிங்க அவதாரமெடுத்து இரணியனை அழித்தவன் நம்மையெல்லாம் காத்தருளும்படி பல்லாண்டு பாட வந்து விட்டோம் என ஆறாம் பாசுரத்தில் ''அந்தியம் போதில் அரியுருவாகி அரியை அழித்தவனை'' என்று வந்துவிட்டதை உறுதி செய்தார்கள்.

ஒன்பதாம் பாசுரத்தில் பகவல்லாபார்த்திகள் பகவான் உடுத்திக் கலைந்த பீதாம்பரத்தினை தாமுடுத்தியும் அவன் பருகிய அமுதத்தின் மிச்சத்தினை பிரசாதமாகப் பருகியும், அவன் சூடிக்களைந்த திருத் துழாய் மாலைகளை சூடியும், அவனிட்ட காரியங்களை குறைவற நிறைவேற்றும் கைங்கரியத்தினை பெறவும் பகவல்லாபார்த்திகளோடு தாமும் சேர்ந்து பல்லாண்டு பாடி, திருவனந்தாழ்வான் மேலே பள்ளிகொண்ட எம்பெருமானை ''உடுத்துக் கலைந்த பீதவாடை'' ''துழாய் மலர் சூடிக் களைந்தன சூடுமித் தொண்டர்களோம்'' என்று மங்களாசாசனம் செய்கிறார் பெரியாழ்வார்.

### கைவல்யார்த்திகள் :

4,7,10 பாசுரங்களில் தம்முடைய ஆத்மாவினை அனுபவிக்கும் கைவல்யார்த்திகளை அழைத்து அவர்களையும் திருத்திப் பகவல்லாபார்த்திகளாக்கி பல்லாண்டு பாடுகிறார் பெரியாழ்வார். நான்காவது பாசுரத்தில் பகவானின் கைங்கர்யத்தை விழையாமல் ஆத்மாவினை அனுபவிக்கும் கைவல்யார்த்திகளே உங்கள் ஆத்மா, நீங்கள் விரும்பும் ஆத்ம அனுபவம் முடிந்து மீண்டும் மூலப்பிரக்ருதியில் ஒடுங்குவதற்குள் பரதேவதையான எம்பெருமானை சரண் புகுந்து "ஓம் நமோ நாராயணாய" எனும் மந்திரத்தை அடியோங்களோடு நாடும் நகரமும் அறியுமாறு உச்சரித்து பல்லாண்டு பாடுவோம் வாருங்கள் ''நாடும் நகரமும் நன்கறிய நமோ நாராயணாய வென்று'' என ஆழ்வார் அழைக்கிறார்.

ஏழாம் பாசுரத்தில் ஆழ்வாரின் அழைப்பினை ஏற்ற கைவல்யார்த்திகள் ஸ்ரீவைஷ்ணவர்கள் ஆவதற்கு தகுதியான பஞ்ச சம்ஸ்காரம் செய்து சங்கு சக்கர இலச்சினைகளை தம் தோள்களிலே பொறித்துக் கொண்டு

''தீயிற் பொலிகின்ற செஞ்சுடராழி திகழ்திருச் சக்கரத்தின்
கோயிற் பொறியாலே ஒற்றுண்டு நின்று''

எனும்படி வாணன் எனும் அசுரனின் ஆயிரம் தோள்களும் குருதி கொப்பளிக்கும்படி வானில் சுழற்றி எறிந்து கொன்றவனான கண்ணனை பரம்பரை முழுவதும் கொண்டாடும்படி பல்லாண்டு பாட வந்துள்ளதை உறுதி செய்தனர்.

பத்தாம் பாசுரத்தில் கைவல்யார்த்திகள் பஞ்ச சம்ஸ்காரமும் மந்த்ரோபதேசமும் பெற்று பரம ஸ்ரீவைஷ்ணவர்களாக திருந்தினவர்களாய் எம்பெருமா

னின் திருவடி சம்பந்தம் கிடைத்த நாளிலிருந்து அடி யோங்களுடைய குலம் முழுதுக்கும் வீடுபேறான வைகுந்த வாழ்வு **''அடியோங்கள் அடிக்குடில் வீடு பெற்றுய்ந்தது காண்''** என அறுதியிடுகிறார்.

அடியார்களை காக்கும் பொருட்டு வடமதுரையில் திருவவதாரம் செய்து கம்சனுடைய ஆயுத சாலையி லுள்ள விற்கள் அனைத்தையும் முறித்து ஐந்து தலை களையுடைய விஷ நாகத்தின் மேல் நடம்பயின்ற எம் பெருமானுக்கு பாகவதர்களோடு சேர்ந்து **''ஐந்தலைய பைந்நாகத்தலைப் பாய்ந்தவனே''** என்று பல்லாண்டு பாடுகிறார் பெரியாழ்வார்.

**ஐஸ்வர்யார்த்திகள் :**

*5,8,11* பாசுரங்களில் உலகியல் இன்பங்களை உபா சனம் செய்யும் ஐஸ்வர்யார்த்திகளை அழைத்து திருத் திப் பணி கொண்டு பகவல்லாபார்த்திகளாக்கி பல்லாண்டு பாடுகிறார். ஐந்தாம் பாசுரத்தில் செல்வ போக்கியங்களில் மூழ்கி ஸ்வரூபத்தினை மறந்தொழிந்த ஐஸ்வர்யார்த் திகளை உங்களுடைய பழைய வாசனையினை மறந்து அடியோங்களுடைய கைங்கர்ய கோஷ்டியில் சேர்ந்து இப்பேரண்டத்திற்கு அதிபதியானவனும் அரக்கர்களை அழித்தவனும், சண்டாளர்களின் குலத்தை நிர்மூலமாக் கினவனுமான **''இண்டைக்குலத்தை எடுத்துக் களைந்த'' ''பண்டைக் குலத்தை தவிர்ந்து''** என்று எம்பெருமானை ஆயிரம் திருநாமங்களால் போற்றி பல்லாண்டு பாட வாருங்கள் என அழைக்கிறார்.

எட்டாம் பாசுரத்தில் எம்பெருமானின் கழுத்தணி காதணி முதலானவைகளை பரிசாகப் பெற்றும், அவனுக் கும் நித்தம் செய்யும் கைங்கரியத்தினை போக்கியமாக அடைந்தும், எம்பெருமானின் பிரசாதமான நெய் மணக் கும் சோறும், அவன் திருமேனியினை மணக்கச் செய்த சந்தனத்தோடு வெற்றிலைப்பாக்கும் ஐச்வர்யங்களாகப் பெற்று கருடக்கொடியினை **''நெய்யிடை நல்லதோர் சோறும்'' ''மெய்யிட நல்லதோர் சாந்தமும்''** உடைய எம்பெருமானுக்கு பல்லாண்டு என பாட வந்துவிட்டதை உறுதி செய்தார்கள்.

திருக்கோட்டியூரில் வாழும் செல்வநம்பி நீதியல் லாதனவற்றை செய்யாமல் வாழும் பரம ஸ்ரீவைஷ்ணவர், பரம பாகவதர்களாகிய நாமும் செல்வநம்பியினைப் போலவே பரிசுத்தனான எம்பெருமானுக்கு அடிமையாகி



திருமந்திரத்தினை உச்சாடனம் செய்து பற்பல திரு நாமங்களாலே **''நமோ நாராயணா வென்று நாமம் பல பரவி''** என போற்றி பல்லாண்டு பாடுவோம் என்று களிக்கிறார் பெரியாழ்வார்.

**ஸ்ரீவைகுந்த புருஷார்த்தம் :**

கடைசி பனிரெண்டாம் பாசுரத்தில் பரமாத்மா வானவனும் சார்ங்கமென்னும் வில்லைத் தரித்துள்ள தான இராமவதாரம் முதலான அவதாரங்களை எடுத்து அடியார்களுக்கு அருளின பரிசுத்தமானவனு மான எம்பெருமானைச் சரண் புகுந்தால் ஸ்ரீவைகுண் டத்தில் எம்பெருமானை சூழ்ந்திருந்து **''பல்லாண்டும் பரமாத்மனை சூழ்ந்திருந்து''** என்று அனுபவித்து, நாராயணா எனும் திருநாமத்தினை சதா சர்வகாலமும் உச்சாடனம் செய்து போற்றும் ஸ்ரீவைகுண்டப் புரு ஷார்த்தம் சித்திக்கும் என அனைத்து மனிதர்களுக்கும் பகவானின் திருவடியினைப் பற்றுகின்ற சரணாகதி தத்துவத்தினை உபதேசம் செய்து திருத்திப் பணி கொண்டதால் தாமருளிய திருப்பல்லாண்டு **''வில்லி புத்தூர் விட்டுசித்தன் விரும்பிய சொல்''** பாடுவதலான பலனைச் சொல்லித் தலைக் காட்டுகிறார் பெரியாழ்வார்.

பெரியாழ்வார் திருவடிகளே சரணம்

தாஸ சாகித்யம்

# தாஸ சாகித்யத்தில் திருவேங்கடவன்



*''தாசரெந்தரே புரந்தரதாசரய்யா''* என்று வியாச ராஜரால் புகழப்பட்டவர் புரந்தரதாசர். அதாவது தாசர்களில் சிறந்தவர் புரந்தரதாசரே என்று புகழ்ச்சியை ஏந்தினாலும் மனநிறைவு இல்லாமல் "நான் இன்னும் ஹரிதாசன் ஆகவில்லையே" என்று திருவேங்கடவனிடம் தம் மனவேதனையைக் கூறியவாறு...

*''தாசநெந்தாகுவெனு தரெ யொளகே னாநு''*

*''தாசன் எப்பொழுது ஆவேன் இந்த பூமியில்''* என்று பரிதவித்து, இங்கே கூறப்பட்டுள்ள அருளை வழங்கி அதன்பின் தாசனாக என்னை ஏற்றுக் கொள்வாயாக என்று வேண்டினார்.

*''துர்புத்தி .... கரபுஷ்பவ என்ன சிரதல்லி முடிசோ!!''* "தீய எண்ணங்களை அகற்றுவாயாக! உம் கருணையை எம் வாழ்விற்கு அளிப்பாயாக! உம் திருவடியை சேவிக்கும் பாக்கியம் அருள்வாயாக! உம் அபய அஸ்தங்களில் உள்ள புஷ்பங்களால் என்னை ஆசிர்வதிப்பாயாக!'' என்கிறார்.

*''த்ருட பகுதி நின்னல்லி பேடி...* உறுதிபடைத்த திடமான பக்தியை உம்மிடம் வேண்டுகிறேன். உம் திருவடியை பணிந்து எவ்வேளையிலும் பாடுகின்றேன். உம் பரிபூரணமான அருளை எனக்கு வழங்கி மனத் தூய்மையை அருள்வாயாக!

*''மொரெஹொக்க வரகாய்ய பிருது.... பொரெது!''* பக்தவத்சலா எனும் பெயர் கொண்ட ஸ்வாமி மறக்காமல் என்னைக் காப்பாற்றுவாயாக.

தாஸ்ய பக்தியைப் பற்றி மேலும் விரிவாக ஸ்ரீவிஜய தாசர், திருவேங்கடநாதனை வழிபட்டு தெரிவிக்கிறார்.

*'தாச தாச தாசர தாஸ்யவ...''* இங்கு மூன்று முறை "தாச" என்று வருகிறது. இச்சொல் தாசர்களுக்கு தாஸ்ய பக்தியை அருளுமாறு கூறுகிறார். இங்கே மூன்று தாசர் என்றால் ஸ்ரீஹரி, வாயுதேவர், புரந்தரதாசர் என்றும் கூறலாம்.

அதில் முதல் சரணம் *''சித்த நின்ன சிந்தெயோளிரதி....''* என் மனம் என்றும் உன்னையே நினைக்கின்றது, என் மனதில் உள்ள துயர் எல்லாம் நீங்க அருள் புரிவாயாக. அதனால் என் மனதில் ஆனந்தம் நிலைத்து நின்று அகங்காரம் விலகிப் போகட்டும். அவ்வாறே உம் திருவடிகளைப் பற்றிக் கொள்ள எம் நெஞ்சம் பயணிக்க வேண்டும்.

மேலும் தர்ம மார்க்கத்தின் வழி செயல்பட அருள் புரிக! தீயவற்றை விலக்குக, எப்பொழுதும் என்னைக் கை விடாமல் காப்பாற்றுக ஸ்வாமி என்று கூறுகிறார். இவ்விதமாக ஹரிதாசர் தாஸ்யபக்தியை பிரசாதிக்குமாறு கடவுளை வேண்டி, தாஸ்யபக்தி குணநலன்களை தெரிவிக்கின்றார். மத்வாச்சாரியரும் தம் நூல்களில் ஸ்ரீஹரியின் தாஸ்ய பக்தியை வெளிப்படுத்தியுள்ளார்.

தெலுங்கு மூலம்: திரு. எஸ். நாகராஜாசார்யுலு
தமிழாக்கம் : திரு. வி. வேங்கடரமணா

**தாஸ்ய பக்தி-கீர்த்தனை பக்தி :**

க்ருதயுகத்தில் தவத்தையும், த்ரேதாயுகத்தில் யக்ன யாகங்களையும், த்வாபர யுகத்தில் விரதங்கள் மற்றும் அர்ச்சனைகளையும் செய்து பகவானின் அனுக்கிரகத்தை அடைந்தனர். ஆனால் கலியுகத்தில் சத்கர்மாநுஷ்டான பலனுடன் பகவானின் அனுக்கிரகம் நாம சங்கீர்த்தனைகளால் மட்டுமே அடைய முடியும் என்று ஶ்ரீமத் பாகவதம் கூறுகிறது.

அதனால்தான் "ஹிரண்யகசிபு தவத்தையும், தசரதன் யக்னத்தையும், கோபிகைகள் விரதங்களையும் செய்தனர். இக்கலியுகத்தில் பக்தியுடன் எம்பெருமானை துதிப்பதனால் வரக்கூடிய பலன்கனைப் பற்றி ஶ்ரீமத்பாகவதம் சிறப்பாகக் கூறுகின்றது.

*"ஏதாவதால .... யுஜ்யமான:"* நரக மோட்சத்திற்கு பரமாத்மாவின் குணநலன்களே சாட்சி. இதற்கு அஜாமிளனே சாட்சி. வேதங்களின் அர்த்தம் தெரியாமல், பாகவதத்தின் தர்மங்களை அறியாமல் சொர்க்கத்தை அடைய வேண்டும் என்று யாகங்களை செய்வதை விட, பக்தியுடன் பகவானின் நாம சங்கீர்த்தனைகளை உச்சரித்தாலே போதும் என்பதே எமதர்மராஜாவின் கருத்தாகும். நாம சங்கீர்த்தனைகளின் மூலம் பாவங்கள் அழிந்து போகும். அதுமட்டுமின்றி பக்தியுடன் பகவானின் நாமங்களைப் பாடுபவர் என் தண்டனைக்கு பயப் படத் தேவை இல்லை என்று எமன் தன் தூதரிடம் கூறினார். மேலும் ஶ்ரீஹரியின் மகிமையைப் பாடுபவர், கேட்பவர், கேட்டு ஆனந்திப்பவர், ஸ்வாமியை சேவிப்பவர் இந்த வாழ்க்கைக் கடலை எளிதாகத் தாண்ட முடியும் என்று குந்தி தேவி எண்ணினார். பகவானின் நாம சங்கீர்த்தனைகள் கேட்பதாலோ, சொல்வதாலே, மனதில் உன்ள அறியாமை, பாவங்கள் எல்லாம் விலகும். எவ்வாறென்றால் சூரியோதயம் ஆன உடனே உலகில் இருள் மறைவது போன்றும், காற்று வீசிய உடனே கரிய மேகங்கள் மறைவது போன்றும் ஆகும். ஶ்ரீஹரி நாம சங்கீர்த்தனைகளினால் – அக்னியின் மூலம் உலோகங்கள் கருகுவது போன்று நம் பாவங்கள் கருகி போகும் என்று மத்வாச்சாரியர் கூறியுள்ளார். பலரும் ஶ்ரீஹரியின் குணநலன்களை புகழ்ந்து பாடி மகிழ்ந்தனர். அவ்வாறு புகழ்ந்து பாடியவர்களுள் சிறப்புப் பெற்றவர்கள் வால்மீகி, சபரி, அகல்யா போன்றவர்ஆவர்.

*''கலியுகதொளு.... வித்தஹரி''* நாள்தோறும் ஶ்ரீஹரியின் நாமகீர்த்தனை செய்பவருக்கு நரகம் என்ற பயம் இல்லை. இந்த கலியுகத்தில் நாமகீர்த்தனையால் நல்வாழ்க்கை பெறுவர் என்று புரந்தரதாசர் கூறுகிறார். நாம சங்கீர்த்தனைகள் பாடுவதால் சிங்கக்குட்டியைக் கண்ட யானை தம் கூட்டத்திற்குள் ஓடி செல்வது போன்று, அக்னியின் வெப்பத்தால் காடு எரிந்தது போன்று, சூரியோதயத்தால் இருள் விலகியது போன்று, வஜ்ராயுதத்திற்கு மலைகள் அறுந்து போவது போன்று, கருடனைக் கண்டு பாம்பு பயப்படுவது போன்று. நம் பாவங்கள் அனைத்தும் விலகும் என்கிறார்.

*''கானனஸா டிதவ ஹரிமூர்த்தி நோடிதவ''* பக்தியுடன் பாடலைப் பாட ஶ்ரீஹரியை காண முடியும். இது யோக மார்க்கத்தில் ஒன்று. அதனால் தான் விஜய தாசர், *''கானலோலன குள்ளிரிசி த்யானதிந்த பஜிசுவே''* ஶ்ரீஹரிக்கு சங்கீதமென்றால் பிரியம். அதனால் அவரை பாடல்களால் பூஜிக்கின்றேன் என்கிறார். ஹரிகதாம்ருதன் சாரம் என்ற நூலிலும் ஶ்ரீஜகன்னாத தாசர் ஆடம்பரத்திற்காகவோ, வயிற்றுப் பசிக்காகவோ, நோயிலிருந்து விடுபடவோ, எதற்காக இருந்தாலும் சரி பக்தியுடன் ஶ்ரீஹரியை துதித்து பாடினால் இந்த வாழ்க்கைக் கடலை எளிதில் கடக்க முடியும் என்கிறார்.





## தர்மத்தின் அவதாரம்

**அதர்மத்தை அழித்துத் தர்மத்தை நிலைநாட்ட நாராயணன் எடுத்த ஒப்பற்ற, ஈடு இணையற்ற அவதாரம் ஸ்ரீகிருஷ்ணாவதாரம். கண்ண பெருமான் 108 திவ்ய தேசங்களிலும் தர்மத்தின் தோற்றம், அதர்மத்தின் வீழ்ச்சி ஆகியவைகளை உலகிற்கு எடுத்துக்காட்டும் வகையில் தரிசனம் தருகிறார்.**

**108 திவ்ய தேசங்களில், பதினெட்டு திவ்ய தேசங்களில் கிழக்கு நோக்கி நின்றும், ஏழு திருத்தலங்களில் மேற்கு நோக்கி நின்றும் சேவை சாதிக்கிறார். தர்மத்தின் வாழ்வினையும், தோற்றத்தினையும் பதினெட்டுத் திருத்தலங்களிலும் நினைவுபடுத்தும் கிழக்கு திசையை நோக்கி சேவை சாதிக்கிறார். ஏழு திருத்தலங்களில் அதர்ம அழிவை நினைவுபடுத்தும் மேற்கு திசையிலும் சேவை சாதிக்கிறார்.**

திரு. டி. பூபதிராஜ், காஞ்சிபுரம், 94446 03652

*"பிட்டகள நெபதிந்தலாகிலி.... பகுதரனு" "இஹபர சாதன மிதி யொகடே... சருகனனு தலசுடி சங்கீர்த்தனம்!"* என்று அன்னமய்யாவும் சங்கீதத்தையே முதன்மைப்படுத்தினார். அவ்வாறே கர்நாடக ஹரிதாசர்கள் சங்கீதத்தை அனுசரித்து அதற்கு தகுந்த ராக தாளங்களை ஏற்படுத்தி, நாட்டியத்திற்கு அனுகூலமாக தாளங்களை சேர்த்து ஸ்ரீகிருஷ்ணலீலா தரங்கத்தைப் பாடியுள்ளனர்.

கர்நாடக சங்கீதத்தில் முதன்மையானவர் ஸ்ரீபாத ராஜர், அவருக்குப் பின் வியாசராஜர், வாதிராஜர் அவர்களுக்கும் பின் கர்நாடக சங்கீத பிதாமகன் என்று அழைக்கப்படும் புரந்தரதாசர், கனகதாசர், விஜயதாசர், கோபாலதாசர், ஜகன்னாத தாசர் ஆகியோர்களின் வழியில் வந்த அன்றைய ஹரிதாசர் முதல் இன்றைய மத்திய கால ஸ்யாம சுந்தரதாசர் வரை கர்நாடக சங்கீதத்தைப் பின்பற்றினர். இவர்கள் அனைவரும் ஸ்ரீமந் மத்வாச்சாரியாரின் சித்தாந்தத்தை அனுசரித்து எளிமையான அழகான சொற்களால் இனிமையான ராகதாளங்களின் உதவியால் பாடிக் கொண்டு பிறரை ஆனந்தப்படுத்தினர். இவர்களின் சாகித்தியங்களை அனைவரும் விரும்பிப் பாடி மகிழ்ந்து வந்தனர்.

கர்நாடக ஹரிதாசர்களின் கீர்த்தனைகள் தேவதைகளின் ஸ்துதிகளையும், வைராக்கிய பிரபோதகங்களையும் கொண்டது. பாரதீய தேவதா மூர்த்திகளை வணங்கி கடைசியாக விட்டலனுக்கு இச்சங்கீர்த்தனைகளைப் படைத்தனர்.


ஸ்ரீபாதராஜர் முதல் இன்றைய ஹரிதாசர் வரை கணபதி, பார்வதி, நாருணி, சாபர்ணி, பாரதி, சரஸ்வதி, கருடர், சேஷன், வாயு, மஹாலக்ஷ்மி, ஸ்ரீஹரி ஆகிய தேவதா மூர்த்திகளை வழிபட்டனர். புரந்தரதாசர் தம் பாடலில் மேலே கூறப்பட்டுள்ள அனைத்து தேவதா மூர்த்திகளையும் வழிபட்டார் என்பதை கீழே கூறப்பட்டுள்ள கீர்த்தனையின் மூலம் அறியலாம்.

*"சதத கணநாத சித்திய நீவ கார்யதலி.... க்ருதி நடெசுவனு"* இப்பாடலில் சகல கார்யசித்திக்கு கணபதியையும், பார்வதி தேவியையும், முக்தியை அடைய ருத்ரனையும், பக்திக்கு பாரதி தேவியையும், சகல கலைகளுக்கு சரஸ்வதி தேவியையும், மனதிற்கு ஆனந்தத்தை அருள ரமாதேவியையும் இவ்வாறு அனைத்து தேவதா மூர்த்திகளை துதித்து தனக்கு அனுக்கிரகத்தை அருளுமாறு வேண்டிக் கொண்டார். இந்த தேவதாமூர்த்திகளை தனித்தனியாகவும் பாடி மகிழ்ந்தார். மேலும் ஸ்ரீஹரியின் தசாவதாரங்களைப் பற்றியும் அவருடைய மகிமைகளைப் பற்றியும் மிக இனிமையாகத் துதித்துப் பாடினார்.

அவர்களில் நரசிம்மர், ஸ்ரீராமர், கிருஷ்ணர் ஆகியோர்களை அதிக அளவில் தம் கீர்த்தனைகளால் பாடி மகிழ்ந்தார் என்பதை இவரின் பாடல்களால் அறிய முடிகிறது.

தொடரும்...

# அன்னமய்யா வாழ்க்கை வரலாறு



தெலுங்கு மூலம் : டாக்டர். மன்னூரு சிவப்ரவீண்
தமிழாக்கம் : திருமதி ராதாராமநாதன், 93936 09240

**அன்னமய்யா பிறப்பு :**

திருவேங்கடமுடையானின் அருளால் நாராயணசூரி லக்கமாம்பா புண்ணிய தம்பதியருக்கு வைகாசி மாதம், விசாக நட்சத்திரத்தன்று, ஸ்ரீஹரியின் நந்தகம் (வாள்) அம்சமாக அன்னமய்யா பிறந்தார்.

**அன்னமய்யாவின் குழந்தை பருவம் :**

அன்னமய்யாவிற்கு ஞானத்துடன் கூடிய நல்ல பழக்க வழக்கங்கள் இயல்பாய் அமைந் தன. அவர் நந்தகத்தின் அம்சமாகப் பிறந்த வராதலால் சிறு வயதிலிருந்தே ஆன்மீகச் சிந்தனை வளர்ந்து வந்தது. பாலோ அல்லது நெய்யோ கலந்த பருப்பு அன்னத்தை, அன்பு டன் ஊட்டி விட்டால் கூட அன்னமய்யா சாப் பிட மாட்டாராம். இது திருமலேசனின் பிர சாதம் என்று சொன்னால் தான் உண்பாராம்.


நீருக்கு பள்ளம் எங்கிருக்கிறது என்று காட்டவா வேண்டும்? பள்ளத்தை நோக்கி ஓடுவது நீரின் இயல்பு. தேனீக்கு பூவிலுள்ள மகரந்தத்தின் ருசி எப்படி இருக்கும் என்று சொல்லவா வேண்டும்? மாந்தளிரின் தளிர் இலைகளைத் தின்று விட்டு உண்ட மயக்கத் தில் கூவும் குயிலுக்கு ஸ்வரங்களைக் கற்றுத் தரவா வேண்டும்?


அது போன்று காரண பிறப்பான அன்ன மய்யாவிற்கு ஸ்ரீஹரியின் திருவடி மலரை சிந்தையில் இருத்தி, அமிர்த பானத்தை அருந்தி மகிழும் ஆனந்தம் இயல்பாய் அமைந்தது. அவரது பிறவி தெய்வ சங்கல் பம். அவரது கானம் தெய்வத்தின் லீலா அம்சம். அவரது சிந்தனையில் உதித்த பக்திப் பாடல்களை அவரே பாடி தன்னைப் பரவசப்படுத்த வேண்டுமென ஹரி சங்கல் பத்தினால் தோன்றிய அன்னமய்யாவிற்கு ஸ்ரீஹரி பக்தியை இன்னுமொருவர் ஊட்ட வேண்டுமா என்ன?


தொட்டிலில் இட்டு எவ்வளவு நேரம் ஆட்டினாலும், எத் தனை தாலட்டு பாட்டு பாடினாலும் அதில் வேங்கடவனின் பெயர் இல்லாவிடில் உறங்க மாட்டாராம் அன்னமய்யா. வீட்டில் எவ்வ ளவு பூஜைகள் நடந்தாலும், எந்த தெய்வ பூஜையானாலும் "ஏழு மலையானுக்கு நமஸ்காரம் செய்" என்று சொன்னால் தான் நமஸ்காரம் செய்வாராம். உலகமே தெரியாத அந்த சிறு வயதில் வேங்கடவன் மீது இவ்வளவு பக்தி எவ்வாறு ஏற்பட்டது? காரணப்பிறவி எடுத்தவர்களுக்கு அவர்களது பிறப்பின் கார ணத்தை எவரும் எடுத்துச் சொல்ல வேண்டியதில்லை. அவ் வாறே பூர்வ பிறவியின் தொடர்பாலும் அன்னமய்யாவிற்கு திருவேங்கடவனின் மீதான பக்தி ரசம் பெருகி வந்தது (அன்ன மய்யா சரித்திரம் பக்கம் 109,110).

**அன்னமய்யாவின் கல்வி :**

அன்னமய்யா வளர்பிறைச் சந்திரனைப் போன்று படிப் படியாக வளர்ந்து தனது ஐந்தாவது வயதை எட்டினார். பண்டிதரான நாரா யண சூரி, தன் மகனுக்கு உப நயனம் செய்வித்து பிரம் மோபதேசம் செய்தார். வேத அத்யயனம் செய் வித்தார். சேஷாசல







வாசனின் அருட்கண் அவருக்கு அளப்பரிய சக்தியைக் கொடுத்து வைதீக வித்தைகள் அவர் நாவில் நடனமாடும் படி செய்தது. அந்த சிறு வயதிலேயே அவர் நாவினின்றும் வெளி வந்த வாக்குகள் அமிர்த வாக்குக ளாயின.

பாடிய பாடல்கள் பரமகானமாயிற்று. அன்னமய்யாவின் கவிபாடும் திற மையைக் கண்டு வியந்து தாள்ளபாக்க வாசிகள் பரவசமடைந்தனர். வேங்கடவன் மீது பக்திப் பாடல்களை அச்சிறு வயதிலேயே அன்னமய்யா பாட ஆரம்பித்தார்.

வீட்டில் தாய் தந்தையர் மட்டுமின்றி, ஏனைய குடும்ப உறுப்பினர்கள் இடும் பணியைத் தட்டாமல், மறுத்துச் சொல்லாமல் ஆனந்தமாகச் செய்வாராம். இவ்வாறிருக்கையில் ஒரு நாள் பெற்றோர் வீட்டில் உள்ள பசுக்களுக்கு புல் அறுத்து வரச் சொன்னார்களாம். அன்னமய்யாவும் பசுவிற்கு புல் அறுத்துக் கொண்டிருக்கையில் தனது சுண்டு விரலை, வெட்டிக் கொண்டு விட்டார். இரத்தம் பெருகியது. கையில் இருந்த கத்தி கீழே விழுந்தது. என்ன நடக்கின்றது என்றே தெரியாமல் சிறிது நேரம் திகைத்து நின்றார். அந்த நொடியில் நான் ஏன் பிறந்தேன்? என்ன செய்து கொண்டிருக்கிறேன்? என்ற கேள்விகள் மனதில் எழுந்தன. தன்னை வேலை யிடுபவர்கள் எனக்கு எந்த வகை சுற்றம்? நான் அவர்களுக்கு எந்நாளைய பந்தம்? என்ற கேள்விகள் மனதைக் குடைந்தன. அனைத்து படைப்பிற்கும் காரணமாக விளங்குபவன் அந்த ஸ்ரீஹரி ஒருவரே.

அந்த சேஷாத்ரி வாசனே தனக்குத் தாய், தந்தை, குரு, தெய்வம் அனைத்தும். அவர் எப்போதும் என்னுடனேயே இருக்கிறார் என்ற எண்ணம் தோன்றிய அந்த கணத்திலேயே கோவிந்த நாம சப்தம் எங்கிருந்தோ கேட்டது. நான்கு திசைகளிலும் சுற்றிப் பார்த்தார். ஒரு இசைக்குழு பக்தி பரவசத்துடன் பாடிய வண்ணம் தாள்ளபாக்கத்தில் இருந்து திருமலைக்கு கோலாகலமாகச் சென்று கொண்டிருந்தது.


இந்த பக்த சமூகத்தில் சிலர் தம்பூரா மீட்டிக் கொண்டிருந்தனர். சிலர் பெரிய மிருதங்கங்களைத் தட்டிக் கொண்டி ருந்தனர். சிலர் கைத்தாளத்தைத் தட்டிக் கொண்டிருந்தனர். இந்த பக்தர்கள் கூட்டம் அன்னமய்யாவிற்கு சனகசனந் தனாதி மகரிஷிகளைப் போலத் தோன்றினர். தன்னை அறியாமலேயே ஏதோவொரு உந்துதலால் அந்த பஜனை கோஷ்டியோடு அன்னமய்யா சேர்ந்து கொண்டார்

**அன்னமய்யாவின் திருமலை பயணம் :**

“ஸ்வாமி புஷ்கரணியின் கரையில் குடி கொண்டுள்ளவன் ஏழுமலை வாசன், வட்டிக்காசு வசூலிக்கும் அந்த வரதன் வரங்களை அள்ளிக் கொடுப்பவன்” என்றெல்லாம் பலவிதமாக வேங்கடவனை துதித்த வண்ணம் வந்த அந்த பஜனை கோஷ்டியரோடு அன்னமய்யா திருப்பதி வந்தடைந்தார். அங்கு கிராம எல்லை தேவதை கோயிலுக்குச் சென்றார். அந்த தேவதையை வணங்கி, திருமலைக்கு ஏறத் தொடங்கினார். அங்கு வழியில் தலையேரு குண்டாவில் உள்ள நரசிம்ம ஸ்வாமியை தரிசித்துக் கொண் டார். மிகவும் புனிதமான பரம பாவங்களையும் போக்கும் அந்தத் திருமலையின் அழகைக் கண்ணாரக் கண்டு, மெய்மறந்த நிலையில், முழங் கால் முடிச்சு எனப்படும் மலையருகே வந்தடைந் தார். வயிறு பசிக்க ஆரம்பித்தது. தாள்ளபாக்கத் திலிருந்து பல மைல்கள் நடந்து வந்த களைப்பு மேலிட, பிறந்தது முதல் தாயைப் பிரிந்திராத அன்னமய்யா அன்னையை நினைத்தவாறு ஒரு பாறையின் மீது படுத்துக் கொண்டார்.



### பத்மாவதி தாயாரின் கருணை :



அன்னமய்யாவுடன் வந்த பக்தகோஷ்டிகளில் ஒருவர் கூட அவரின் பசியை உணர வில்லை. உலகையே ஈன்ற அன்னையான அலர்மேல் மங்கையுணர்ந்தாள். அந்த தாய் ஒரு வயதானவர் வடிவில் அன்னமய்யா அருகில் வந்தாள். தன் குழந்தைகளின் பசியை உணரக் கூடியவள் தாயே அல்லவா? “மகனே! உன்னைப் பார்த்தால் மிகவும் களைத்துப் போய் இருக்கின்றாய் என்று தெரிகிறது. பசியும் அதிகமாக இருப்பதாகத் தோன்றுகிறது” என்று அந்த மங்கல வடிவான தாயார் சொன்னவுடனே அன்னமய்யா அவசரஅவசரமாக “அம்மா என் பசியும் களைப்பும் தீர்ந்து நான் வெகு விரைவில் வேங்கட வனைத் தரிசிக்கும் வழியைச் சொல்லுங்கள்” என்றார். “அப்பனே! மிகவும் புனிதமான பவித்ரமான சாளக்கிராம கற்களுமான இந்தத் திருமலைக்கு நீ காலணி அணிந்து வந்ததால் உனக்கு காண்பதற்கியலவில்லை. காலில் உள்ள அந்த காலணியை கழற்றி விட்டுப் பார். உன்னைச் சுற்றியுள்ள பிரம்மத் துவம் உனக்குப் புலப்படும்” என்றாள் அந்த பத்மத்தில் தோன்றிய பத்மாவதி. தாய் சொல்லைத் தட்டாத தனயன் உடனே தன் காலணியைக் கழற்றி எறிந்தார். அதுவரை அங்கிருந்த செடிகொடிகள், மரங்கள், புதர்கள், கற்க ளாகத் தோன்றிய திருமலை இப்போது “ஸர்வம் விஷ்ணு மயமாக”த் தோன்றியது. தனக்கு அந்த ஞானக் கண்ணைக் கொடுத்தருளிய அந்தத் தாய் ஜகன் மாதாவை நமஸ்கரித்தார். உடனே அந்தத் தாய் அவருக்குத் தான் கொண்டு வந்திருந்த ஸ்வாமியின் பிரசாதத்தைக் கொடுத்தாள். அதைத் தின்ற உடனே அளப்பரிய சக்தி அவருக்குண்டாயிற்று. மலையெல் லாம் திருமலையப்பனாகவும், தனக்கு அருள் புரிவ தற்காகவே வந்த அந்த அன்னை அலர்மேல் மங்கை யாகவும் தோன்றினர். அங்கேயே அந்த அன்னையைத் துதித்து 100 பாடல்கள் (சதகம்) அவர் நாவினின்று ஆசுவாக அதுவே வெளிப்பட்டது.

தொடரும்...




பூரி ஜெகந்நாதர் கோயில் ஒடிசா மாநிலத்தில் கடற்கரையில் அமைந்துள்ள மிகப் பெரிய கோயில். பல சந்நிதிகள் உள்ளன. இக்கோயில் ஒரு சிறிய குன்றின் மீதுள்ளது, 22 படிகள் ஏறி எம்பெருமானை தரிசனம் செய்ய வேண்டும். ஆதிசங்கரர் இங்கே ஒரு மடம் அமைத்துள்ளார். இக்கோயிலில் பிரசித்தி பெற்றது பிரசாதமாகும். இங்கே பலவிதமான பிரசாதம் செய்வார்கள். இங்கு ரதயாத்திரை மிகவும் பிரபலமானது. எம்பெருமான் கிருஷ்ணருக்கும், அவருடைய அண்ணன் பலராமருக்கும், தங்கை சுபத்திரைக்கும் தனித்தனியாக ஒவ்வொரு வருடமும் புதிதாக ரதம் தயாரித்து, அழகு வண்ணங்கள் தீட்டி எம்பெருமானை குண்டிசா ஆலயத்திற்கு அழைத்து செல்வார்கள். இதைக் காண பலவிடங்களிலிருந்தும் பக்தர்கள் திரண்டு வருவார்கள். இவ்வாறு தேர் திருவிழா கொண்டாடும் உலகிற்கு நாயகனாக விளங்கும் ஜெகன்நாதரின் அருளை பெற்று நாமும் வளமாக வாழ்வோமாக.

- திருமதி டி.எஸ். இராஜலஷ்மி, திருவனந்தபுரம்

# தெய்வத் திருத்தலம் ரிஷிகேஷ்





தெலுங்கு மூலம்:
டாக்டர். எஸ். வேங்கடகுமார்
தமிழாக்கம்:
திருமதி ஆ. அருணா,
97037 34848

உத்திரகாண்ட் மாநிலம், டெஹ்ராடுன் மாவட்டத்தில் உள்ள பிரசித்தி பெற்ற புண்ணிய தலம் “ரிஷி கேஷ்”. ஹ்ருஷிகேஷ் என்பதே ரிஷிகேஷ் என்றாகியது. இத்தலத்தை “தெய்வத் திருத்தலம்” என்றும் அழைக்கின்றனர். புனிதமான கங்கை நதிக்கரையில் உள்ள இப்புண்ணிய திருத்தலத்தை இந்துக்கள் பரம பவித்திரமாகக் கருதுகின்றனர். இது இமயமலையின் அடிவாரத்தில் அமைந்துள்ளது.

ஸ்ரீராமபிரான் இராவணாசூரனை சம்ஹாரம் செய்ததால் உண்டான பிரம்மஹத்தி தோஷத்தை போக்கிக் கொள்வதற்காக இங்கு அதற்கான பரிகாரங்களை செய்ததாக புராணங்கள் கூறுகின்றன. ரிஷிகேஷ் ஹரித்துவாருக்கு சுமார் 25 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. இந்த ரிஷிகேஷ் வழியாக கங்கை நதி பாய்கிறது. கங்கை நதி இமாலயத்தில் சிவாலிக் மலைகளைக் கடந்து, வட இந்திய சமவெளிக்குள் பிரவேசிக்கும் பகுதியே “ரிஷிகேஷ்”

ரிஷிகேஷில் கங்கை நதிக்கரையில் ஏராளமான பழமையான கோயில்கள் பல உள்ளன. ரிஷிகேஷ் சுற்றுப் புறப்பகுதிகளில் கங்கை நதிக்கரையில் பல ரிஷிகள் வாழ்ந்தபடியால் “ஹ்ருஷிகேஷ்” என்ற பெயர் வந்ததாகக் கூறப்படுகிறது.

## ஆந்திர ஆசிரமம் :

ரிஷிகேஷில் உள்ள ஆந்திராசிரமம் திருமலை திருப்பதி தேவஸ்தான நிர்வாகத்தின் கீழ் இயங்கி வருகிறது. ஸ்ரீவேங்கடேஸ்வர ஸ்வாமி ஆலயத்தோடு இதர ஆலயங்களும் இங்கு உள்ளன. இங்கிருக்கும் சந்திர மௌலீஸ்வரருக்கும், வேங்கடவனுக்கும் நித்திய பூஜைகள், நைவேத்தியம், உற்சவங்கள் மற்றும் பண்டிகைகள் தி.தி.தேவஸ்தானம் தலைமையில் நடைபெறுகிறது.

1930ல் ஸ்வாமி தரிசனத்திற்காக சச்சிதானந்த ஸ்வாமி என்பவர் இங்கு வந்து, தெற்கு பகுதிகளிலிருந்து வரும் பக்தர்களுக்காக விடுதி ஏற்பாடு செய்ய வேண்டும் என்று எண்ணினார். தி.தி.தேவஸ்தானம் மற்றும் மற்றவர்கள் வழங்கிய காணிக்கைகளை சேகரித்து ஸ்ரீவேங்கடேஸ்வர ஸ்வாமி, ஸ்ரீதேவி, பூதேவி விக்ரகங்களை பிரதிஷ்டை செய்து, உற்சவ மூர்த்திகளையும் தயார் செய்தார். ஆரம்ப நாட்களில் இந்த ஆந்திராசிரமம் அறக்கட்டளைக் குழுவால் நிர்வகிக்கப்பட்டது. அதன் பிறகு தி.தி. தேவஸ்தானத்திடம் ஒப்படைக்கப்பட்டது.

## சிறப்பு அம்சங்கள் :

சிவாலிக் மலையில் 13 மிக முக்கியமான தேவதைகளில் ஒருவரான “சதிதேவி”யினுடைய குஞ்சபுரி இங்கே உள்ளது. புராணங்களின்படி சிவபெருமான் தன் மனைவியான சதிதேவியை கைலாச மலைக்குக்

கொண்டு செல்கையில், அவருடைய மேல்பாகம் இங்கு விழுந்ததாகக் கூறுகின்றனர். இவ்வாலயம் அவருடைய சரீரபாகம் விழுந்த இடத்திலேயே அமைக்கப் பட்டுள் ளது. ரிஷிகேஷில் உள்ள யோக பயிற்சி ஆல யங்கள் பக்தர்களை கவருவதற்குக் காரணம் புண்ணியமான கங்கை நதியில் நீராடுவது, ரிஷிகேஷில் தியானம் செய்தால் மோட்சம் கிடைக்கும் என்பதும் பக்தர்களின் நம்பிக்கையாகும்.

ரிஷிகேஷில் சுமார் 120 ஆண்டுகளுக்கு முன்பு நிறுவப்பட்ட "கைலாஷ் பிரம்மவித்யாபீடம்" உள்ளது. இங்கு மாணவர்களுக்கு வேதங்கள் பயில பயிற்சி அளிக்கப்படுகிறது.

### தரிசிக்க வேண்டிய கோயில்கள் :

**குஞ்சபுரி கோயில் :** இது ரிஷிகேஷ் நகரத்திலிருந்து சுமார் 15 கி.மீ. தூரத்தில் ஒரு சிறிய குன்றின் மீது உள் ளது. இந்த கோயில் அருகில் சூரியோதயம், அஸ்த மனம் காண்பது நன்றாக இருக்கும். இங்கிருக்கும் 13 கோயில்களில் இது சிறப்புமிக்கது எனக் கூறலாம்.

### பாரத மந்திர் :

ஆதிசங்கரரால் கங்கை நதிக்கரையில் நிறுவப்பட்ட விஷ்ணு மூர்த்தி கோயிலாகும். இவ்வாலயத்தில் உள்ள விஷ்ணு விக்ரகம் சாளக்கிராமத்தால் செய்யப்பட்ட தாகும். 9ல் ஒன்றுடன் ஒன்று கலந்து திரிபுஜ வடிவில் உருவான ஸ்ரீயந்திரத்தை கோயிலின் உள்ளே காண லாம். "பஸந்த் பஞ்சமி" என்ற முக்கியமான பண்டிகையை மிகவும் சிறப்பாக இங்கு கொண்டாடுகின்றனர்.

### லக்ஷ்மன் கோயில் :

ரிஷிகேஷில் அனைவரையும் கவரக்கூடிய ஆல யங்களில் இந்த லக்ஷ்மன் ஆலயமும் ஒன்றாகும். இவ்வாலயம் ரிஷிகேஷிலிருந்து சுமார் 5 கி.மீ. தொலைவில் உள்ளது. இராமபிரானின் சகோதர னான லக்ஷ்மணனுக்கு சமர்ப்பித்த கோயில் இது. இவ் வாலயமும் கங்கை நதிக்கரையில் அமைந்துள்ளது. இவ்வாலய மதில் சுவர்களில் அழகாக செதுக்கப்பட்ட சித்திரங் களையும் காணலாம்.

### நீலகண்ட மஹாதேவ ஆலயம் :

ரிஷிகேஷ் அருகில் கடல் மட்டத்திலிருந்து சுமார் 1330 மீ. உயரத்தில் மலை மீது இவ்வாலயம் உள்ளது. இங்கிருந்து விஷ்ணுகூட், பிரம்ம கூட் மலைகளை காண முடியும். ஏராளமான பக்தர்கள் இந்த மலையை ஆவணி மாதத்திலும், சிவராத்திரி நாட்களிலும் வந்து சேவித்துச் செல்கின்றனர்.

### கீதா பவன் :

இது கங்கைக்கரையில் உள்ள ஒரு புராதன நிலை யம். இங்கு இராமாயணம், மகாபாரதம் பற்றிய சித்திரங் களை சுவற்றின் மீது செதுக்கியுள்ளனர். புனிதமான கங்கை நதியில் நீராடி இங்கு வந்து தியானம் செய்து, சாதுக்களின் சொற்பொழிவினைக் கேட்கலாம்.

### ஓம்காராநந்தா ஆசிரமம் :

பிரபல இந்து தத்துவநிபுணர், மகரிஷி, கவிஞரான ஓம்காராநந்தா சரஸ்வதி 1967ல் இந்த ஆசிரமத்தை அமைத்தார். இங்கு பக்தி நிகழ்ச்சிகள், யோகா பயிற்சி மற்றும் யாகங்கள் நடத்துகின்றனர்.






**பரமார்த்த நிகேதன் :**

இமய மலைகளின் நடுவே இருக்கும் இந்த ஆசிரமத்தில் ஆயுர்வேத சிகிச்சை மேற்கொள்கின்றனர். யோகா பயிற்சி, தியானம் போன்றவற்றைப் பயில இங்கு அவ்வப்போது யாத்ரிகர்கள் வருகிறார்கள். வருடந்தோறும் நடைபெறும் யோகா உற்சவத்திற்கு பெரிய அளவில் யாத்ரிகர்கள் வருகின்றனர்.

**சிவானந்த ஆசிரமம் :**

இங்கு முழுதும் ஆன்மீக நிகழ்ச்சிகளே நடைபெறுகின்றது. ஆயுர்வேத மருந்தகம், யோகா, வேதாந்த கலைக்கூடம் மற்றும் கண் மருத்துவமனையையும் இந்த ஆசிரமம் நடத்தி வருகிறது.

**வசிஷ்ட குகை :**

இந்த குகையை யோகா, தியானம் செய்வதற்கு சாதுக்கள் உபயோகப்படுத்துகின்றனர். இங்கு மிகவும் பழமையான ஆலமரம் விழுதுகளுடன் உள்ளது. இந்துக்கள் புனிதமாக சேவிக்கும் சிவலிங்கம் குகை இதன் அருகில் உள்ளது.

**லக்ஷ்மன் ஜுலா :**

லக்ஷ்மன் ஜுலா என்பது நதிக் கரையில்



உள்ள கோயில்கள் மற்றும் ஆசிரமங்களைக் காண சுமார் 450 அடி உயரத்தில் தொங்கும் கொலுசு பாலமாகும். இராமபிரானின் தம்பி லக்ஷ்மணன் ஒரு முறை கங்கை நதியைக் கடப்பதற்கு இதை உபயோகித்தார் என்று நம்புகின்றனர். ஆதலால் தான் இதனை "லக்ஷ்மன் ஜுலா" என்றழைக்கின்றனர்.

**இராம் ஜுலா :**

ஸ்வர்க் ஆசிரமத்தை சிவானந்த ஆசிரமத்துடன் இணைக்கும் இந்த இராம்ஜுலா ரிஷிகேஷின் பிரதான இணைபாலமாகக் கூறலாம். லக்ஷ்மன் ஜுலாவை விட இது மிகப் பெரியது.

**திரிவேணி காட் :**

கங்கை, யமுனை மற்றும் சரஸ்வதி நதிகள் சங்கமமாகும் பகுதியே இந்த திரிவேணி காட். கோயில்களைப் பார்க்க வரும் பக்தர்கள் இங்கு நீராடி விட்டுத்தான் மாலை நேரத்தில் மஹா ஆரத்திக்காக இந்த "காட்"டிற்கு வருகின்றனர்.

**ருஷிகுண்ட் :**

புனிதமான திரிவேணி காட் அருகில் உள்ள ஒரு புனிதமான "ஏரி". இங்கு இராமபிரான் மற்றும் சீதைக்கு சமர்ப்பித்த ரகுநாத் கோயில் பிரதிபிம்பத்தைக் காணலாம்.

இவ்விதமாக புண்ணிய தலமாகிய "ரிஷிகேஷ்" காண உலகின் பல இடங்களிலிருந்தும் பல பகுதியிலிருந்தும், பக்தர்கள் இங்கு வருகின்றனர்.

திருப்பதி
ஸ்ரீகோவிந்தராஜ ஸ்வாமி
ஜ்யேஷ்டாபிஷேக மஹோத்ஸவம்













திருமலை நாதநீராஜனம் அரங்கில் சுந்தரகாண்ட படனம் ஆரம்பம்

உலக நன்மைக்காக திருமலை தர்மகிரி வேதவிக்ஞான பீடம்
அருகில் நடைபெற்ற மஹாசுதர்சன சஹித விஷ்வசாந்தி மஹாயாகம்















# திருப்பதி ஸ்ரீகோவிந்தராஜ ஸ்வாமி பிரம்மோத்ஸவம்







## அப்பளாயகுண்ட்டா ஸ்ரீபிரசன்ன வேங்கடேஸ்வர ஸ்வாமி பிரம்மோத்ஸவம்








தி.தி.தே. பொறுப்பாண்மைக்குழுவிற்கு
பதவி அடிப்படையில் உறுப்பினராக
27-05-2020 அன்று பதவிப் பொறுப்பேற்ற
ஆ.மா. இந்து சமய அறநிலையத்துறை
ஆணையர் திரு. பி. அர்ஜுன் ராவ் ஐ.ஏ.எஸ்.
அவர்களுக்கு ஸ்வாமி சித்திரப்படத்தை
அளிக்கும் தி.தி.தே. கூடுதல்
செயலாட்சித்தலைவர்
திரு.ஏ.வி. தர்மாரெட்டி அவர்கள்



ஆந்திர மாநில
அரசால் தி.தி.தே. புதிய
இணைச் செயலாட்சித்
தலைவியாக (கல்வி மற்றும்
சுகாதாரத்துறை) நியமிக்கப்பட்ட
திருமதி. எஸ். பார்கவி, ஐ.ஏ.எஸ்.
அவர்கள் 20-05-2020
அன்று பதவிப்பொறுப்பு
ஏற்றபோது

அன்றாட
வாழ்வுக்கு
ஆழ்வார்களின்
அருளிச்
செயல்–5





# திருமண நாள் குறிக்கும் உரிமை யாருக்கு?

பேராசிரியர் எஸ். கோகுலாச்சாரி,
புவனகிரி,
94434 39963

சென்ற இதழில் கன்னிகாதானம் பற்றிய செய்திகளைப் பார்த்தோம். பெண்ணைப் பெற்றவருக்கு உள்ள பெருமைகளையும் கன்னிகாதானம் செய்து கொடுப்பதன் மூலம் அவர் பெறும் பல்வேறு சிறப்புகளையும் பார்த்தோம். நம்முடைய ஆசாரியர்கள், ஆழ்வார்கள் இந்தப் பெருமையை முன்னெடுத்து மொழிந்தார்கள்.

பகவானே, பெண்ணைப் பெற்று, கன்னிகாதானம் செய்த பெற்றோர்களை உகந்து கொண்டாடினான். இப்படிக் கொண்டாடப்பட்ட பெருமையை பல மகான்கள் பெற்றார்கள். இராமாயணத்தில் ராஜரிஷி ஜனக மகாராஜா, சீதையை, இராமனுக்கு மணமுடித்துத் தந்து பெருமையைப் பெற்றார். ஆழ்வார்களில் பெரியாழ்வார் ஆண்டாளை எம்பெருமானுக்கு திருக்கல்யாணம் செய்து வைத்து பெருமையைப் பெற்றார்.

*“ஒருமகள் தன்னை உடையேன் உலகம் நிறைந்த புகழால், திருமகள் போல வளர்த்தேன் செங்கண்மால் தான் கொண்டு போனான், பெருமகளாய்க்குடி வாழ்ந்து பெரும் பிள்ளை பெற்ற யசோதை, மருமகளைக் கண்டுகந்து மணாட்டுப்புறம் செய்யும் கொலோ?”* என்று பாடுகின்றார்.

மகான்களை தந்தையாக அடைய பிராட்டியும் துடிக்கிறார்.

*“இன்றோ திருவாடிப்பூரம் எமக்காக*
*வன்றோ இங்காண்டாளவதரித்தாள் குன்றாத*
*வாழ்வான வைகுந்தவான் போகந்த(ன்) னை*
*யிகழ்ந்து ஆழ்வார் திருமகளாராய்”*

“திருமாலுடன் கூடி வாழும் என்றுமே குறையாத பெரும் செல்வமாகிய வைகுந்தமாகிற வான்போகத்தை வேண்டாமென உதறித் தள்ளிவிட்டு, பூவுலக மாந்தர்களை உய்விக்க பெரியாழ்வார் பெற்றெடுத்த பெண்பிள்ளையாய் பூமிதேவி இந்தப் புவியில் அவதரித்த நாள் இன்று” என்கிறார் மணவாள மாமுனிகள் தமது உபதேசரத்தின மாலையில்.

இதைப் போலவே மகான்களை மாமனாராக அடைய எம்பெருமானும் துடிக்கிறார். குலசேகராழ்வார் தன் மகளான சேரகுலவல்லி நாச்சியாரை அரங்கனுக்கு திருமணம் செய்து கொடுத்து மாமனார் என்கிற பெருமையைப் பெற்றார். இதிலுள்ள பல நுட்பமான விஷயங்களைப் பற்றி பிறகு பார்ப்போம்.

இராமாயணத்தில் ஒரு கட்டம்.

விசுவாமித்திர முனிவர் இராமனை அழைத்துக் கொண்டு மிதிலைக்குச் செல்கிறார். அங்கே ஜனகர் அவர்களை வரவேற்கிறார்.

அப்போது சதானந்த முனிவர் மூலம் அங்கே ஓர் சிவதனுசு இருப்பதையும், அதனை நாண் ஏற்றுபவர்க்கே தனது பெண்ணான சீதையைத் திருமணம் செய்து கொடுப்பதாக ஒரு நிபந்தனை இருப்பதையும் அறிகிறார்.

அப்படியா! அந்த வில்லைப் பார்க்கலாமா என்று விசுவாமித்திரர் கேட்க, வில்லை அறுபதினாயிரம் வீரர்கள் மூச்சுவாங்க கொண்டு வந்து வைக்கிறார்கள்.

விசுவாமித்திரர் இராமனைப் பார்க்கிறார். முனிவரின் ஜாடையில் இருந்து அவருடைய எண்ணத்தையும், அனுமதியையும் அறிந்த இராமன், நெய் வார்க்கும் போது அக்னி ஜ்வாலை மேலே எழுவது போல் தன் ஆசனத்தில் இருந்து குதித்து எழுகிறான்.

ஓர் பூமாலையைத் தூக்குவதுபோல, எளிதாக, அந்த வில்லை எடுத்து நாண் ஏற்ற, அது பெரும் சத்தத்தோடு முறிகிறது.

"தடுத்து இமையாமல் இருந்தவர் தாளில்
மடுத்ததும் நாண்நுதி வைத்ததும் நோக்கார்
கடுப்பினில் யாரும் அறிந்திலர் கையால்
எடுத்தது கண்டார் இற்றது கேட்டார்"

இராமன் அந்த வில்லை எப்படி நாண் ஏற்றப் போகிறான் என்று கண்ணிமைக்காமல் சுற்றி இருந்தவர்கள் எல்லாம் பார்க்க முயற்சித்தார்கள். ஆனால், "அந்த வில்லை இராமன் எடுத்ததும் அதன் ஒரு நுனியை தன் கால் பெருவிரலால் அழுத்தியதும், அடிக்கப்பட்ட நாகம் போல் அது வளைந்து நிமிர்ந்ததும், நிமிர்ந்த அதில் நாண் பூட்டி காது வரை இழுத்ததும், யாரும் காணவில்லை. முறிந்த ஓசையை மட்டுமே கேட்டார்கள்" என்கிறார் கம்பர்.

இந்த இடத்தில் வான்மீகி எழுதுகிறார்.

பெருமலைகள் ஒன்றையொன்று இடித்துப் பிளந்தது போன்ற ஓசையும், வானமே இடிந்தது போன்ற ஓசையும் கேட்டது. விளைவு இராம இலட்சுமணர்கள், விசுவாமித்திரர், ஜனக மகாராஜா தவிர, அனைவரும் மயங்கி விழுந்தனர்.

சரி; முடிந்தது.

இந்த விஷயத்தைக் கேள்விப்பட்டு அயோத்தியில் இருந்த தசரதன் மகிழ்ச்சி அடைகிறான். வேகவேகமாகத் தன் படைகளுடன், வசிஷ்ட முனிவர் போன்ற ஆசிரியர் குழுவுடன், மிதிலைக்கு வருகிறார்.

இதெல்லாம் முக்கியமில்லை. ஜனகர் அவர்களை வரவேற்று உபசரித்து ஓர் விண்ணப்பம் செய்கிறார்.

''திருமணம் குறித்து தங்களுடன் பேசி ஆராய அவகாசம் இருக்கிறது. ஆகையினால், அந்த விஷயத்தை காலையில் பேசிக் கொள்ளலாம்" என்று சொல்ல அவரை இடைமறித்த தசரதன் (இராமனைப் பெற்ற தந்தை) சொல்லும் சொல், நம் மரபு குறித்த ஓர் அருமையான செய்தியைச் சொல்லுகிறது.

தசரதன் சொல்வது இது.

"ஜனகராஜரே! நீங்கள் தர்மத்தின் நுட்பங்களை எல்லாம் அறிந்தவர். என்னுடைய குமாரர்கள் தகுதியை அறிந்து மகிழ்ச்சியோடு உமது பெண்களை அவர்களுக்குத் திருமணம் செய்து கொடுக்க நிச்சயித்திருப்பதை கேள்விப்பட்டேன். நான் அரச மரபினர். அதாவது சத்திரியன். ஆதலால் இது வரையில் பிறர்க்குக் கொடுத்துப் பழக்கப்பட்டவனே தவிர எதையும் வாங்கிப் பழக்கப் பட்டவன் அல்ல. அதனால் எனக்கு இதில் பழக்கம் இல்லை. அனுபவமும் இல்லை.

ஆனால், யார் தானம் கொடுக்கிறார்களோ, அவர்களை அனுசரித்து தானம் வாங்குபவர்கள் இருக்க வேண்டும் என்பதை அறிந்திருக்கிறேன்.

இதில் பெண்ணைக் கன்னிகாதானம் செய்து கொடுப்பவர் நீங்கள். கன்னிகாதானம் கொள்கின்ற அதாவது தானம் வாங்குகின்ற இடத்தில் நாங்கள் இருப்பதால் விவாக தேதியையும் மற்ற சௌகரியங்களையும் தாங்கள் தான் முடிவு செய்ய வேண்டும். இதில் உங்கள் விருப்பப்படி நடப்பதற்கு நான் சித்தமாக இருக்கிறேன்."

இந்த நுட்பத்தை நாம் மிகவும் தெரிந்து கொள்ள வேண்டும். பெண்ணைப் பெற்றவர்களுக்கு பல்வேறு விதமான சூழ்நிலைகள் இருக்கின்றன. அந்த சூழ்நிலைகள் அவர்களுக்கு மட்டுமே தெரியும்.

எனவே, நாள் குறிப்பது போன்ற விஷயங்களில், நம்முடைய சாஸ்திரங்கள், பெண்ணைப் பெற்றவரின் நிலையை அனுசரித்து நடக்க வேண்டும் என்பதை இந்த இடத்தில் மிக அழுத்தமாக சுட்டிக் காட்டுவதை இந்நிகழ்வுகளில் இருந்து நாம் தெரிந்து கொள்கின்றோம்.

அருளிச்செயல் தொடரும்...



# ம னோ ல ய ம்

மஹாபாரதத்தில் பஞ்ச பாண்டவருக்கும், கௌரவருக்கும் குருவாக துரோணாச்சாரியார் விளங்கினார்.

பாண்டவர்கள் குருபக்தியுடனும், ஒழுக்கத்துடனும், நற்பண்புகளுடனும் கல்வி, வில்வித்தை மற்றும் அனைத்து விதமான சாஸ்திரங்களையும் எளிதாகவும் மிக விரைவாகவும் கற்றனர்.

கௌரவர்களோ பாண்டவர்களுக்கு நேர் மாறான தன்மைகள் கொண்டவர்களாக விளங்கினர்.

கௌரவர்கள் பீஷ்மரிடம் சென்று துரோணாச்சாரியார் பாண்டவருக்கு மட்டும் வில்வித்தைகளையும், சாஸ்திரங்களையும் நன்கு கற்பிக்கின்றார். எங்களுக்கு சரியாக பாடம் கற்பிப்பதில்லை என்று புகார் கூறிக் கொண்டே இருந்தனர்.

பீஷ்மர் துரோணாச்சாரியாரை விசாரித்தார். பாண்டவருக்கும் கௌரவருக்கும் சில போட்டிகள் வைத்து பார்ப்போம் என்றார் ஆச்சாரியார்.

முதலாவதாக இருபாலருக்கும் தலா ஒரு மண் பானை கொடுக்கப்பட்டது. விடிவதற்கு முன் பானை நிறைய பனி நீர் சேகரித்து காண்பிக்க வேண்டும். இதுவே முதல் பரிட்சை.

கௌரவர்கள் தங்களுக்கு கொடுக்கப்பட்ட இடத்தில் உள்ள இலைகளிலிருந்து ஒவ்வொரு சொட்டாக விழும் பனி நீரை பிடித்து மண் குடத்தில் விட்டுக் கொண்டிருந்தனர்.

பாண்டவர்கள் உறங்கச் சென்றுவிட்டனர் என்று எண்ணிய கௌரவர்கள் இருமாந்திருந்தனர்.

சூரியன் உதிக்கும் நேரம் நெருங்கிக் கொண்டிருந்தது.

ஆயிற்று....! விடிந்தது...!!

இரு மண்பாண்டங்களும் பீஷ்மர் மற்றும் பார்வையாளர்கள் பார்வையில் வைக்கப்பட்டது. இரண்டு பாண்டங்களும் நிரம்பி இருந்தன.

துரோணாச்சாரியார், சூரிய பகவான் இதற்கு தீர்ப்பு கூறுவார் என்றார். அனைவரும் ஆச்சரியத்துடன் என்ன நிகழுமோ என்று ஆவலுடன் காத்திருந்தனர்.

சூரியன் நேரம் ஆக ஆக தனது வெப்பக் கதிரை வீசிக்கொண்டே உச்சிக்கு வந்தது.

பாண்டவர்களுடைய மண்பாண்டத்தில் உள்ள அனைத்து நீரும் ஆவியாகி விட்டது.

கௌரவர்களுடைய மண்பாண்டத்தில் உள்ள நீர் சிறிது மட்டும் ஆவியாகிவிட்டிருந்தது.

இது எவ்வாறு நிகழ்ந்தது?

பாண்டவர்களுக்கு கொடுக்கப்பட்டிருந்த இடத்தில் உள்ள செடி கொடிகள் மீது சுத்தமான துணிகளை பரப்பி விட்டிருந்தனர். காலையில் துணிகளின் மேல் படர்ந்திருந்த பனி நீரை பிழிந்து மண்பாண்டத்தில் நிரப்பினர். இது தான் தூய பனி நீர்.

கௌரவர்கள் செய்தது என்ன?

விடிய விடிய இலைகளிலிருந்து விழும் பனி நீரை பிடித்து பானைக்குள் விட்டுக்கொண்டிருந்தனர். விடியும் நேரம் வந்தது பானை நிறையவில்லை. யாருக்கும் தெரியாது என்று மீதமுள்ள குடத்தில் கிணற்று நீரை நிரப்பினர்.

இதிலிருந்து பாண்டவருக்கும், கௌரவருக்கும் உள்ள நுண்மாண் நிரைபுலம் புரிகின்றது.

அடுத்ததாக ஒரு மரத்தின் கிளை மீது பொம்மை கிளி வைக்கப்பட்டிருந்தது. ஒரே ஒரு அம்பில் அதனை வீழ்த்த வேண்டும். இது தான் போட்டி.

முதலாவதாக துரியோதனன் வந்தான். ஆச்சாரியார் அம்பு எய்து, வீழ்த்து என்றார். வில் பிடித்தான் துரியோதனன்.

நில்...! என்றார் குரு! உனக்கு என்ன தெரிகிறது. மரம் தெரிகிறது. கிளைகள் தெரிகின்றன. ஏன் நீங்கள் தெரிகின்றீர்கள். அனைவரும் தெரிகின்றனர்.

அப்படியா, கிளி தெரியவில்லையா?

கிளியும் தெரிகின்றது.

சரி விடு அம்பை. அம்பை விட்டான்.

அம்பு எங்கோ சென்று விட்டது. முகம் தொங்க அவனிடத்தில் வந்து அமர்ந்தான்.

அடுத்து அர்ச்சுனன் வந்தான். துரோணாச் சாரியாரை வணங்கினான். குரு கட்டளைக்குக் காத்திருந்தான்.

அர்ச்சுனா! ஏன் தயக்கம்! விடு அம்பை என்றார்.

அர்ச்சுனன் வில் தொடுத்தார்.

நில்!... என்றார் துரோணாச்சாரியார்

உனக்கு என்ன தெரிகின்றது?

நான் தெரிகின்றேனா?

இல்லை.

மரம் தெரிகிறதா?

இல்லை.

கிளை தெரிகிறதா?

இல்லை.

இலைகள் தெரிகின்றனவா?

இல்லை.

துரியோதனனுக்கு இருப்பு கொள்ளவில்லை ஏதும் தெரியவில்லையாம் என்று.

என்ன தான் தெரிகின்றது? என்றார் துரோணாச் சாரியார்.

கிளியின் கழுத்து மட்டும் தெரிகின்றது என்றான் அர்ச்சுனன்.

விடு அம்பை.

விட்டான் அம்பை. கிளியின் தலையைக் காணோம்.

இதிலிருந்து மனோலயம் எவ்வளவு அவசியம் என்று தெரிகிறது அல்லவா.

அதற்கு சில பயிற்சிகள் உள்ளன.

வெளிச்சம் அதிகம் இல்லாத இடத்தில் ஆசனம் அமைத்து பத்மாசனத்தில் அமரவும். ஒரு மீட்டர் தொலைவில் கண்களுக்கு நேராக மெழுகுவர்த்தி அல்



லது நெய் தீபம் எரிய விடவும். கண்களை இமைக்காமல் தீபச் சுடரை பார்த்துக் கொண்டிருக்கவும். சிறிது நேரத்தில் கண்களிலிருந்து கண்ணீர் ததும்பும். சுற்றிலும் உள்ள பொருட்கள் தெரியாது. சுடர் மட்டும் தெரியும். அப்போது காலையில் ஆதித்ய ஹிருதயம், மாலையில் ஸ்ரீவிஷ்ணு ஸஹஸ்ரநாமம், ஸ்ரீலலிதா ஸஹஸ்ரநாமம் மெதுவாக பாட விட்டுக் கேட்கலாம்.

மற்றொன்று பூஜை, யோகா, ஜபம், தியானம் முதலியன முடிந்தவுடன் ஒரு நோட்டுப்புத்தகத்தில் கீழ்காணும் ஏதாவது ஒரு நாமத்தை எவ்வளவு எண்ணிக்கைகள் முடியுமோ அவ்வளவு தினமும் எழுதலாம். படிப்படியாக அதிகமான எண்ணிக்கைகள் எழுதலாம்.

ஓம் நமோ நாராயணாய நம:, ஓம் ஸ்ரீலக்ஷ்மியை நம: ஸ்ரீராமஜெயம், ஓம் ஸ்ரீராம் ஜெய்ராம் ஜெய் ஜெய்ராம், ஓம் நமச்சிவாய, ஓம் ஸ்ரீசக்தியை நம:, ஓம் சரவணபவ


திரு. ஆர். பிரகாசம், கோயம்புத்தூர்,
6382702084


## ஸப்தகிரி எழுத்தாளர்களுக்கு ஓர் வேண்டுகோள்

**ஸப்தகிரி எழுத்தாளர்களுக்கு அளிக்கும் சம்பாவனையை தங்கள் வங்கிக் கணக்கில் செலுத்த தி.தி.தே. முடிவு எடுத்துள்ளது. ஸப்தகிரி எழுத்தாளர்கள் தங்களுடைய கட்டுரையுடன் வங்கி புத்தகத்தின் முதல் பக்கம் மற்றும் வங்கியின் விவரங்களை** (Your Bank A/c No., Bank Name with IFSC Code No.) **இணைத்து அனுப்புதல் வேண்டும். தவறினால் உங்கள் கட்டுரை அச்சிட இயலாது.**

– பிரதான ஆசிரியர்



பருவ தினம்

# ஆடல் வல்லானுக்கு ஆனி திருமஞ்சனம்

– திருமதி எஸ்.வைஷ்ணவி, திருப்பதி,
9989376756

இறைவனுக்கு அபிஷேகம் செய்தல், அலங்காரம் செய்வித்தல், நைவேத்தியம் படைத்தல் என்பன காலங்காலமாக நடைபெற்று வருகின்றது. பலவிதமான அபிஷேக பொருட்களால் இறைவனுக்கு நீராட்டு உற்சவத்தை நடத்துவதை திருமஞ்சனம் என்பர்.


சிவபெருமானின் 64 மூர்த்தி வடிவங்களில் ஒன்று நடராஜர் வடிவம். உலகை தன் உள்ளங்கால் பிடியில் சுழல வைக்கும் தத்துவத்தை உணர்த்தும் விதத்தில் அமைந்ததே இந்த நடராஜர் வடிவம்.

வைகறை, காலை, உச்சி, மாலை, இரவு, அர்த்த ஜாமம் என பொழுதுகள் ஆறாகப் பிரித்து, ஆலயங்களில் ஆறு கால பூஜைகள் நடைபெறுகின்றது. மானிடர்களுக்கு ஒரு வருடம் தேவர்களுக்கு ஒரு நாளிற்கு ஒப்பானது. தேவர்களின் வைகறை பொழுது மார்கழி மாதம், காலை பொழுது மாசி மாதம், உச்சி பொழுது சித்திரை மாதம், மாலை பொழுது ஆனி மாதம், இரவு பொழுது ஆவணி மாதம், அர்த்த ஜாமம் என்பது புரட்டாசி மாதமாக பகுக்கப்பட்டுள்ளது. மார்கழி திருவாதிரை, ஆனி உத்திரம், சித்திரை திருவோணம், ஆவணி, புரட்டாசி, மாசி மாதங்களில் வரும் வளர்பிறை சதுர்த்தசி என வருடத்திற்கு ஆறு முறை திருமஞ்சனம் நடைபெறும்.

இதில் வைகறை பொழுதான மார்கழி மாதம் திருவாதிரை நட்சத்திரத்தில் நடைபெறும் திருமஞ்சனமும், ஆனி மாதம் (மாலை பொழுது – பிரதோஷ காலம்) உத்திரா நட்சத்திரம் அன்று நடைபெறும் திருமஞ்சனமும் மிகவும் சிறப்பானது. அனைத்து சிவாலயங்களிலும் இந்த உற்சவம் சிறப்பாக நடைபெறுகின்றது.

பஞ்சபூதங்களில் ஒன்றான "ஆகாய" தலமான சிதம்பரத்தில் இந்த உற்சவம் 10 நாட்கள் பிரம்மோத்ஸவமாக மிகச்சிறப்பாக நடத்தப்படுகின்றது.

ஆனி மாத கார்த்திகையில் ஆனி திருமஞ்சன விழா துவங்குகிறது. ஒன்பதாம் நாள் தேரோட்ட விழாவில் விநாயகர், சுப்ரமணியர், நடராஜர், சிவகாமி அம்மையார், சண்டிகேஸ்வரர் தனித்தனி தேர்களில் உலா வருவது மிகவும் சிறப்பான நிகழ்வாகும்.



இந்த பத்து நாட்களும் இறைவன் இறைவி ஒவ்வொரு வாகனத்திலும் எழுந்தருளி பக்தர்களுக்கு தரிசனம் அளிப்பது சிறப்பான அம்சமாகும். பத்தாம் நாள் அதிகாலையில் அம்மைஅப்பருக்கு சிறப்பாக அபிஷேகங்கள் நடைபெற்று, நண்பகலில் நடனமாடும் கோலத்தில் ஆதி தம்பதிகள் தரிசனம் அளிப்பதே “உத்திர தரிசனம்” என்பர். இந்நிகழ்வை காண்பதற்கு பல்லாயிரக்கணக்கான மக்கள் கூடுவர். நடராஜரின் இடப்பாகம் சக்தி வடிவாகக் கருதப்படுகிறது. நடராஜ ஸ்வாமியை வழிப்படும் போது ஸ்வாமியின் இடப்பக்கம் பார்த்து இடது திருப்பாதத்தை வழிபட்டால் சக்தியின் அருளை முழுமையாகப் பெறலாம். நடராஜ ஸ்வாமியின் வலது திருப்பாதம் செல்வத்தை குறிப்பதால் அதனை தரிசிப்பவர்கள் செல்வச்செழிப்பாக இருப்பர்.

ஸ்வாமியை தரிசித்த கன்னிப் பெண்களுக்கு நல்ல இடத்தில் திருமணம் கைகூடும். சுமங்கலி பெண்களுக்கு தீர்க்கசுமங்கலியாக நீடூழி வாழும் பாக்கியம் கிடைக்கும். சிறார்கள் தரிசிப்பதால் அவர்கள் கல்வி கேள்விகளில் சிறந்து விளங்குவர். பெரியவர்கள் அவர்களுடைய தொழிலில் சிறந்து விளங்குவதோடு, செல்வ செழிப்பாக நோய் நொடியில்லாமல் சிறப்புடன் வாழ்வர்.

திருவண்ணாமலையிலும் ஆனி திருமஞ்சனம் மிகவும் சிறப்பாக நடைபெறு கின்றது. ஆனி திருமஞ்சனத்திற்கு முந்தைய நாள் ஸ்ரீநடராஜப் பெருமான் அம்மை யோடு புறப்பட்டு இராஜ கோபுர வாசலை கடந்து ஆயிரங்கால் மண்டபத்தில் எழுந் தருளுவார். அன்றிரவு முழுவதும் சிவகாமசுந்தரி உடனுறை ஸ்ரீநடராஜ பெருமான் ஆயிரங்கால் மண்டபத்தில் எழுந்தருளி அனைவருக்கும் அருள்புரிவார். ஆண்டிற்கு இருமுறை அதாவது மார்கழி மாதம் திருவாதிரை மற்றும் ஆனி மாதத்தில் உத்திர நட்சத்திரம் அன்று இந்த ஆயிரங்கால் மண்டபத்தில் நடராஜப் பெருமான் எழுந்தருளும் காட்சியைக் காண பக்தர்கள் ஆயிரக்கணக்கில் கூடுவர். மறுநாள் காலையில் திரு மஞ்சனம் நடைபெறும். அபிஷேகம் நிறைவடைந்ததும் அழகாக அலங்கரிக்கப்பட்டு, சிறப்பு பூஜைகள் நடைபெற்ற பின் சிவபார்வதி நடனமாடிய வண்ணம் பக்தர்களுக்கு அருள்பாலிப்பர்.


திருவண்ணாமலையில் பொதுவாக உற்சவ மூர்த்திகள் திட்டி வாசல் வழியாகத் தான் கோயிலைச் சுற்றி வலம் வருவர். நடராஜப் பெருமான் திருமஞ்சனத்திற்கு வரும் பொழுது திருமஞ்சன கோபுர வாசல் வழியாக திருவீதி உலா வருவார். திருமஞ்சனம் நிறைவடைந்த பின்னரும் அவ்வாசல் வழியாகவே திருக்கோயிலை அடைவார். இந்த இராஜகோபுர வாசல் வழியாக திருமஞ்சன தீர்த்தம் கொண்டு வந்ததால் இக் கோபுரத்தை “திருமஞ்சன கோபுரம்” என்பர்.

ஆனி மாத திருமஞ்சன விழாவினால் நாட்டில் நல்ல மழைப் பொழிந்து விவசாயம் செழித்து மக்கள் மகிழ்வோடு வாழ்வர்.










# திருக்கண்ணபுரம்

கண்ணபுரம்! கண்ணபுரம்!
திருக்கண்ணபுரம்! கண்ணபுரம்!
விண்ணவரும் வந்து தொழும்
பெருகு சீர் கண்ணபுரம்!
வீடணனை வியக்க வைத்த
கன மதிள் சூழ் கண்ணபுரம்!
நடையழகு காட்டி யங்கு
நலம் சேர்த்த கண்ணபுரம்!

வண்டுகளின் பாட்டிசைப்பில்
வளம் சேர்க்கும் கண்ணபுரம்!
பாமாலை பூ மாலை
தமிழ் இனிக்கும் கண்ணபுரம்!
நாலாயிரம் பாக்களிலே
நா மணக்கும் கண்ணபுரம்!
நாற்றிசையும் தென்னைமரம்
விண் முட்டும் கண்ணபுரம்!
முடியழகு காட்டி நிற்கும்
முத்தான கண்ணபுரம்!
முடி காட்டிப் பக்தனைக்
காத்த இடம் கண்ணபுரம்!
முடி சூடிப் படியளக்கும்
சௌரி ராஜக் கண்ணபுரம்!
முத் தமிழும் முழுநிலவாய்
வந்து தொழும் கண்ணபுரம்!

மல்லிகையின் மணம் வீசும்
முல்லை நகர் கண்ணபுரம்!

பற்றுபவர் பற்ற றுக்கும்
பெருமாளின் கண்ணபுரம்!
தாமரையாள் வாழுமிடம்
தாமரை சூழ் கண்ணபுரம்!
நீர் வயல் சூழ் கண்ணபுரம்
நீலக் கடல் கண்ணபுரம்!

நீலக் கடல் பெருமானின்
நிலைத்த இடம் கண்ணபுரம்!
நீலமேகப் பெருமானாய்
நின்ற இடம் கண்ணபுரம்
மாயக் கண்ணன் வாழுமிடம்
மாதவனின் கண்ணபுரம்
கண்ணனின் தாலாட்டு
கேட்குமிடம் கண்ணபுரம்!

கண்ணனின் குழல் இசையே
தவழும் இடம் கண்ணபுரம்
கண்ணான கண்ணபுரம்
மண்ணில் ஒரு விண்ணகரம்!
தேவர்கள் வணங்கி நிற்கும்
தேவலோகக் கண்ணபுரம்!
பூலோக வைகுண்டம்
பூ வளரும் பொன்னகரம்!

அசுரரையும் தேவரையும்
படைத்தவனின் கண்ணபுரம்!
அனைவருக்கும் தெய்வமாய் அவன்
நின்ற இடம் கண்ணபுரம்!



துருவம் திசைகள் படைத்தவனின்
தூய இடம் கண்ணபுரம்!
திக்கெட்டும் ஜோதியாய்
ஒளிர்பவனின் கண்ணபுரம்!

கண்ணபுரத்தை நினைத்தாலே
கவலையெல்லாம் மறந்து விடும்!
கண்ணபுரம் சென்றடைந்தால்
வாட்டமெல்லாம் நீங்கி விடும்!
கண்ணபுரத்துப் பெருமாளே! திருக்
கண்ணபுரத்துத் தாயாரே!
உம் வடிவழகைக் கண்டிடவே
வந்திடுவோம் கண்ணபுரம்!
சௌரி ராஜப் பெருமாளே!
கண்ணபுரத் தாயாரே!
சரணடைந்தோம் உம் பாதம்!
காத்தருள்வீர் எமை என்றும்!

– திரு. நா. சௌரிராஜன், சென்னை.




ஹரே ராமா! ஹரே கிருஷ்ணா!!

தொடர் கதை

# ஸ்ரீமத்பாகவத கதை சாகரம்

# இறைவன் சமத்துவன்



தெலுங்கு மூலம் : டாக்டர். வைஷ்ணவாங்கிரி சேவக் தாஸ்.
தமிழாக்கம் : டாக்டர். சி. கோவிந்தசாமி-9676695443

இறைவன் தேவர்கள் பக்கமாய் நின்று நன்மைகள் பலவும் செய்கின்றான் என்றும், அசுரர்களைத்தண்டிப்பதும் அழித் தொழிப்பதுமே தொழிலாகக் கொண்டுள் ளான் என்றும் பலரும் கூறுவதைக் கேட்டு பரீட்சித்து மன்னனுக்கு ஒரு சந்தேகம் தோன்றியது. அதாவது உண்மையிலேயே இறைவன் இவ்வாறு பாகுபாடு காட்டக் கூடியவனா? இவ்வுலகம் இறைவனால் படைக்கப்பட்டது. இவ்வுலக உயிர்கள் அனைத்தும் அவனுக்கு ஒன்றே ஆகும். தேவர்களுக்கும் அசுரர்களுக்கும் இடை யில் பாகுபாடு காட்டுவதினால் இறைவ னுக்கு ஆகப்போவது என்ன? அசுரர்களி டத்து இறைவனுக்கு அச்சம் உண்டாகுமா? என்பதே அவருக்கு உண்டான சந்தேகம். அதைப் போக்கிக் கொள்ள சுகதேவரைப் பார்த்து தனக்கு உண்டான சந்தேகத்தைத் தீர்த்து வைக்கும்படி கேட்டுக் கொண்டான். அப்பொழுது சுகதேவர் பரீட்சித்து மன்னனுக்கு விளக்கிக் கூற முற்பட்டார். இது பாகவத்தில் ஏழாவது ஸ்கந்தத்தில் சொல்லப்பட்டுள்ளது.

முன்பொரு சமயம் தருமர், “ராஜசூய” யாகம் செய்து கொண்டிருந்த போது சிசு பாலன் பகவான் கிருஷ்ணனின் சக்ராயுதத் தால் வதம் செய்யப்பட்டு மோட்சத்தை அடைந்தான். அதைக் கண்டு தர்ம ராஜாவுக்கு ஆச்சர்யம் உண்டாயிற்று. சிசுபாலன் கிருஷ்ணனி டத்தில் மிகவும் வெறுப்புடையவனாகவும், எப்பொழுதும் அவரை நிந்திப்பதும் துவேஷிப்பதுமாக இருந்தான். அதுமட்டுமின்றி பாவ காரியங்கள் பலவும் தொடர்ந்து செய்தும் வந்தான். இருந்தும் அவன் நரகத்திற்குச் செல்லாமல், தண்டனை ஏதுமில்லாமலும் மோட்சத்தை பெற்றதைக்கண்டு பெரிதும் வியப்புற்ற தர்மராஜா தன் உள்ளத்தில் இருந்த சந்தேகத்தை நாரதரிடத்தில் எடுத்துக் கூறி இதைத் தீர்த்து வைக்க வேண்டும் என வேண்டினான். அப்போது நாரதர் அவனுக்கு இவ்வாறு பதில் கூறினார்.

“மகாராஜா! ஒருவர் ஒருவரை நிந்தித்து பேசுவதும் அவமதித்து தூற்றுவதுமான இச்செயல்கள் அறியாமையால் உண்டாகின்றது. இந்த மாய உலகத்தின் தன்மையை அறியாததாலும் உயிர், உடல் போன்றவற்றின் தன்மையை உணராததாலும் உண்டானவை இவை. மேலும், “நான்”, “எனது” என்ற அகங்காரத்தின் காரணமாகவே பல குற்றங்களுக்குக் காரணமாகின்றனர். ஆனால், பரமாத்மாவாகிய இறைவனுக்கு உறவு என்றோ, பகைவர் என்றோ எவருமில்லை. அசுரர்கள் இறைவனால் தண்டிக்கப்படுவதும் அவர்களுடைய நன்மைக்காக வேண்டியே ஆகும். பக்தர்களுடைய வேண்டுகோளை ஏற்பதும் அவர்களின் நன்மைக்கே ஆகும். நிந்தனைகள் எதுவும் அவரை அண்டாது. எவரொருவர் வைராக்கியம், பக்தி, பயம், நட்பு மற்றும் காமம் போன்றவற்றாலும் அல்லது அவற்றில் ஏதாவது ஒன்றையாவது கைக்கொண்டு மனதை ஒருமுகப்படுத்தி இறைவன்

மீது செலுத்தினால் எல்லா விதமான நல்ல பலன்களும் கிடைக்கும்.

இறைவன் நடுநிலையானவர் எனவே புகழ்ந்து பாடினாலும், இகழ்ந்து ஏசினாலும் அவருக்கு அனைத்தும் ஒன்றே. "ராஜா! கோபிகைகள் காமத்தாலும், கம்சன் அச்சத்தாலும், சிசுபாலன் துவேஷத்தாலும், யாதவர்கள் உறவு முறையின் மூலமாகவும், நீங்கள் (பாண்டவர்கள்) நட்பின் மூலமாகவும், நாங்கள் பக்தியின் மூலமாகவும் பகவான் கிருஷ்ணரின் கருணையைப் பெற முடிந்தது. ஆனால், இந்த ஐந்து உபாயங்களில் எந்தவொரு மார்க்கத்திலும் கூட இறைவனை நினைக்காத வேனுவன் போன்றவர்கள் மோட்சத்தை அடைய முடியாமல் போனார்கள். எனவே நட்பாகவோ அல்லது பகைக் கொண்டோ ஒருவர் தவறாமல் கிருஷ்ணரை நினைத்தல் வேண்டும். உம்முடைய சித்தப்பாவின் குமாரர்களாகிய சிசுபாலனும், அவனுடைய சகோதரனும் முன்பு விஷ்ணுவை வணங்குபவர். ஆனால் அந்தணர் சாபத்தினால் அவர்கள் வைகுண்டத்திலிருந்து கீழிறங்கி இந்த பூலோகத்திற்கு வந்தனர்.

"ராஜா! ஒரு சமயம், பிரம்மாவினுடைய புதல்வர்களான சனகாதி முனிவர்கள் மூன்று உலகங் களையும் சஞ்சரித்து வந்தனர். அப்பொழுது விஷ்ணுவின் உலகத்திற்கும் சென்றனர். உண்மையில் அவர்கள் அறிவில் முதிர்ந்தவர்களாய் இருந்தும், பார்ப்பதற்கு ஐந்தாறு வயதுடைய சிறுவர்களைப் போன்ற தோற்றம் உடையவராய் இருந்தனர். ஆடைகள் களைந்த சிறுவர்களாய் இருந்ததினால் துவார பாலகர்களான ஜய விஜயர்கள் அவர்களை வைகுண்டத்திற்கு உள்ளே செல்ல அனுமதிக்காமல் தடுத்தனர். அச்செயல் பிரம்மாவின் குமாரர்களுக்கு கோபம் வரச் செய்தது. உடனே அவர்கள், துவார பாலகர்களைப் பார்த்து, நீங்கள் "அசுர ஜன்மத்தை அடைவீர்களாக" என்று சபித்தனர். அப்படியாக சபிக்கப்பட்டு பூலோகத்திற்குத் தள்ளப்பட்ட அவர்கள் மீது சனகாதிகளுக்கு இரக்கம் உண்டாயிற்று. எனவே, மூன்று பிறவிகளுக்குப் பிறகு மீண்டும் நீங்கள் உங்களுடைய பழைய நிலையை அடைவீர்கள் என்று சாப விமோசனத்தைத் தந்தனர். எனவே இப்பொழுது அவர்களுக்கு மூன்று பிறவிகள் முடிவுற்றது என்று தெரிவித்தார்.

"ராஜா! அந்த ஜயவிஜயர்கள் திதி கர்ப்பத்தில் முதலில் இரண்யகசிபு, இரண்யாட்சகனாகவும் பிறந்தார்கள். தேவாதி தேவனாகிய ஸ்ரீஹரி நரசிம்ம அவதாரத்தில் இரண்யகசிபுவையும், வராக அவதாரம் எடுத்து இரண்யாட்சகனையும் கொன்றார். ராஜா! ஜயவிஜயர்களே பின்பு கேசினி கர்ப்பத்தில் இராவணன், கும்பகர்ணனாகப் பிறந்து, அவர்களிருவரும் இராமச்சந்திர மூர்த்தியின் கையால் கொல்லப்பட்டனர். பிறகு மூன்றாவது பிறவியாக சத்திரிய குலத்திலே உன் சிற்றப்பாவின் குமாரர்களாகப் பிறந்தனர். சாபம் முடியும் காலம் அதனால் ஸ்ரீகிருஷ்ணருடைய சக்ராயுதத்தால் கொல்லப்பட்டு அவர்கள் இருவரும் முன்பிருந்த வைகுண்ட லோகத்திற்குச் சென்றனர்.

நாரதர் கூறிய விளக்கங்களைக் கேட்ட ராஜாவிற்கு மற்றொரு சந்தேகம் உண்டாயிற்று. அதாவது இரண்யகசிபுவுக்கும் அவனுடைய குமாரனாகிய பிரகலாதனுக்கும் இடையில் பகை எவ்வாறு ஏற்பட்டது என்பதே அது. மேலும் பிரகலாதன் இவ்வளவு பெரிய பக்திமானாக எப்படி ஆகமுடிந்தது என்பதை அறியவும் விருப்பம் கொண்டவராக இருந்தார். இதைப் பற்றி கூறுமாறு நாரத முனியைக் கேட்டுக் கொண்டார். ராஜா கேட்ட அக்கேள்வியினால், நாரதமுனி பக்த பிரகலாதன் கதையை சொல்லத் தொடங்கினார்.

## ஆன்மீகப் பகுதி

**முதலில் கடவுளையடைய முயற்சி செய். அதற்கு பிறகு எதை வேண்டுமானாலும் விரும்பு. உன்னுடைய இதயத்தை இறைவனிடம் கொடுத்து விடு. அது வெண்ணெய் போல உருகி விடும். உட்காரும் போதும் எழுந்திருக்கும் போதும் பகவானை அழை. அழைத்தால் அவர் உடன் வருவார்.இராமன் பெயரைச் சொல்லாத வாய் வெற்று தோல் குழி. நாக்கு வெறுமம் தோல் துண்டு**



தொகுப்பு :
திரு. எம்.ராதாகிருஷ்ணன்,
வாணியம்பாடி.


விஷ்ணுபகவான் வராக அவதாரத்தில் இரண் யாட்சகனை வதம் செய்த போது இரண்யகசிபு மிகவும் கோபம் கொண்டான். அரக்கர்களை எல்லாம் ஒன்று திரட் டினான். அவர்களிடம் "என் மீது மிகவும் அன்பு கொண்ட அரக்கர்களே! நான் இப்பொழுது கூறுவதை மிகவும் கவனமாகக் கேளுங்கள். பிறகு நான் சொல்லியபடி நீங்கள் நடந்து கொள்ள வேண்டும். தேவர்கள் அனைவ ரும் ஒன்று கூடி என் அன்புக்குரியவரான இரண்யாட் சகனை கொன்று விட்டார்கள். ஆகையால் யாகம், அத் யயனம், தானம் போன்ற நல்ல காரியங்கள் செய்கின் றவர்களை பிடித்து அழியுங்கள். அந்தணர்களை கொல் லுங்கள். அந்தணர்கள் இல்லாமல் போனால் வேள்வி கள் நடைபெறாது. வேள்விகள் இல்லையென்றால் தேவர்களுக்குக் கிடைக்க வேண்டிய அவிர்பாகங்கள் நின்று போகும். இப்படி செய்வதின் மூலமாக தேவர்கள் மரணமடைவார்கள்" என்று கூறினான்.

இரண்ய கசிபுவின் வார்த்தைகள் அரக்கர்களுக்கு மிகவும் மகிழ்ச்சி உண்டாக்கியது. உடனே அவர்கள் இரண்யகசிபுவின் ஆணையை அமல் படுத்தத் தொடங்கி விட்டனர். பல கொடுமைகள் புரியத் தொடங்கினர். அந்த ணர்களையும் மக்களையும் அடித்துத் துன்பப்படுத்தினர். அதனால் மக்கள் அனைவரும் மிகவும் கவலைப்பட்டனர். வைதிக காரியங்கள் எல்லாம் நின்று போயின.

ஆகவே, வேள்வியினால் கிடைக்கக்கூடிய பலன் தேவர்களுக்குக் கிடைக்காமல் போனது. அவர்களும் மிகவும் கவலைக்குள்ளானார்கள். அரக்கர்களுக்கு அஞ்சி தலைமறைவாக வாழத்தலைப்பட்டனர். அரக்கர் களுக்கு ஆணையிட்ட பின்பு இரண்யகசிபு தன் சகோ தரனுக்கு செய்ய வேண்டிய தர்பணம் முதலிய காரியங் களைச் செய்து முடித்தான். இரண்யாட்சகனின் மனைவி யையும் பிள்ளைகளையும் தன் தாயாகிய திதியையும் ஆறுதல் படுத்த முயற்சித்தான். அவர்களுக்கு ஞானோ தயம் உண்டாகவே சோகத்தில் இருந்து விடுபட்டனர். திதியும் தன் புத்திர சோகத்திலிருந்து விடுபட்டாள்.

**பாகவத கதை சாகரம் தொடரும்...**

# அருள் தரும் அற்புத வேங்கடவன்!



*உலகைக் காக்கும் பரம்பொருளே*
*உன்னடி பணிந்தோம் கோவிந்தா!*
*பலநாள் விரதம் தனித்திருந்தே*
*பணிவாய் மலைமேல் ஏறிவந்தோம்!*
*நலமாய் நாங்கள் இருந்திடவே*
*நன்றாய் உன்னை வேண்டி நின்றோம்!*
*சிலநொடி தரிசனம் என்றாலும்*
*சிந்தை இனிக்கும் காட்சியன்றோ!*

*குருவாய் உன்னை நினைக்கின்றோம்*
*குடும்ப வளத்தை பெருக்கிடுவாய்!*
*தருக்கள் செழிக்கும் மலைதன்னில்*
*தங்கி இருக்கும் வேங்கடவா!*
*விருந்தாய் உணவை அளிக்கின்றாய்*
*விரும்பிய பக்தர் அனைவருக்கும்!*
*உருண்டை லட்டை கொடுக்கின்றாய்*
*உன்னருள் பெற்ற பக்தருக்கே!*

*கேட்கும் வரங்கள் உடனளிப்பாய்!*
*கேது தோஷம் நீக்கிடுவாய்!*
*பாட்டால் உன்னை பாடிவந்தோம்!*
*பக்திப் படிகள் ஏறிவந்தோம்!*
*நாட்டில் உள்ள வினைகளையே*
*நன்றாய் துடைத்தே போக்கிடுவாய்!*
*வீட்டில் இருக்கும் பக்தர்களையும்*
*விரும்பி காத்தே அருள் புரிவாய்!*

- பாவலர் வ.பழனி,
புதுச்சேரி



# ஸம்ஸ்க்ருதம் அறிவோம்!

## உயிர்மெய் எழுத்துக்கள்

| | | | | |
|---|---|---|---|---|
| कृ | खृ | गृ | घृ | ङृ |
| க்ரு | க்ரு$_2$ | க்ரு$_3$ | க்ரு$_4$ | ங்ரு |
| के | खे | गे | घे | ङे |
| கே | கே$_2$ | கே$_3$ | கே$_4$ | ஙே |
| कै | खै | गै | घै | ङै |
| கை | கை$_2$ | கை$_3$ | கை$_4$ | ஙை |
| को | खो | गो | घो | ङो |
| கோ | கோ$_2$ | கோ$_3$ | கோ$_4$ | ஙோ |
| कौ | खौ | गौ | घौ | ङौ |
| கௌ | கௌ$_2$ | கௌ$_3$ | கௌ$_4$ | ஙௌ |
| कं | खं | गं | घं | ङं |
| கம் | கம்$_2$ | கம்$_3$ | கம்$_4$ | ஙம் |
| कः | खः | गः | घः | ङः |
| க: | க:$_2$ | க:$_3$ | க:$_4$ | ங: |

- திரு. உ.வே. பி.டி. சேஷாத்திரி,
சென்னை, 99404 28830

மேலும் வளரும்...

தொடர்

# அப்பிள்ளை அருளிய ஆழ்வார் ஆசார்யர்கள் வாழித்திருநாமமும் உரையும்

உ.வே. டாக்டர் மாடபூசி வரதராஜன் ஸ்வாமி, சென்னை, 9841884972

**ஆண்டாள் வாழித்திருநாமம் தொடர்ச்சி...**

*(ஒரு நூற்று நாற்பத்து மூன்றுரைத்தாள்)* திருப்பாவையில் எம்பெருமான் உகப்புக்கான அடிமை செய்வதை உறுதியாக நிச்சயித்த பின்பும் அவனைப் பெறாமையாலே இடைப்பெண்ணாகவே இருந்து பதினான்கு பதிகங்கள் பாடுகிறாள் ஆண்டாள். அதுவே நாச்சியார் திருமொழி எனப்படும். ஒருநூற்று நாற்பத்து மூன்று பாசுரங்கள் கொண்ட இப்பிரபந்தத்தில் கோயில் எனும் திருவரங்கம், திருமலை, திருமாலிருஞ்சோலை, ஸ்ரீவில்லிபுத்தூர், திருக்கண்ணபுரம், வைகுந்தம், திருப்பாற்கடல், பிருந்தாவனம் முதலான திவ்யதேச எம்பெருமான்களைப் பாடியுள்ளாள். இப்பிரபந்தத்தில் – விபவாவதாரத்தில் ராமனாய் இருந்து ராமசரமச்லோகம் அருளியதை *''குமரனார் சொல்''* (10–4) என்றும், வராகனாய் இருந்து வராகசரமச்லோகம் அருளியதை *''பேசி இருப்பனகள்''* (11–8)என்றும், கண்ணனாய் இருந்து கிருஷ்ண சரமச்லோகம் அருளியதை *''மெய்ம்மைப் பெருவார்த்தை'' (11-10)* – என்றும் ஆண்டாளே இரண்டு பதிகங்களில் அருளியது காணலாம். மேலும் வேதாந்த ரகசியப் பொருளின் கருத்தான சரமபருவ நிஷ்டையான ஆசார்ய அபிமானம் வீடுபேறு பெற உபாயம் என்பதை மிகவும் தெளிவாக *''நல்லவென் தோழீ''* (10–10) என்ற பாசுரத்தில் அருளியது காண்க.

*(உயர் அரங்கற்கே கண்ணி உகந்தளித்தாள்)* அரங்கற்கு உயர்வாவது *''பொங்கோதம் சூழ்ந்த புவனியும் விண்ணுலகும் அங்காதும் சோராமே ஆள்கின்ற எம்பெருமான் செங்கோலுடைய திருவரங்கச் செல்வனார்''* (நா.தி 11–3) என்று ஆண்டாளே கொண்டாடுவது காணலாம். *''செருவாளும் புள்ளாளன் செருச்செய்யும் நாந்தமென்னும் ஒருவாளன் மறையாளன் ஓடாத படையாளன் விழுக்கையாளன் இரவாளன் பகலாளன் என்னையாளன் ஏழுலகப் பெரும்புரவாளன் திருவாளன்''* (பெ.தி.4.9.10) என்று பலபடியாக அரங்கனின் பெருமையைப் பெரியாழ்வார் போற்றுவது காண்க. (கண்ணி) – தலையாலே தாங்குவதான மாலை. இது பற்றியே *''அரங்கர் மௌளி சூழ்கின்ற மாலை''* என்றார் அமுதனார். ஆண்டாள் சூடிக் கொடுத்தது ஸ்ரீவில்லிபுத்தூரில் உள்ள வட பெருங்கோயிலுடையானுக்கு தானே எனில் திருவரங்கமே தலைமை அகமாகவும், மற்ற திவ்ய தேசங்கள் கிளை அகங்களாகவும், அரங்கனே எல்லா இடத்திலும் எழுந்தருளியிருந்து அருள் புரிவதாகக் கூறப்படும் ஸம்பிரதாயம் என்று பெரியோர் பணிப்பர். மேலும் ஆண்டாள் மீது அளவற்ற காதலால் ஸ்ரீரங்கத்தில் உள்ள வடிவோடு அமையாது ஆண்டாளுடைய அவதார தலமான ஸ்ரீவில்லிபுத்தூரிலும் வடபெருங்கோயிலுடையான் திருமேனி கொண்டு காத்துக் கிடந்தது பற்றி "அரங்கர்" என்று பன்மையில் கூறப்பட்டது என்பர். பெரியபெருமாளுடைய திருமுடியைச் சூழ்ந்த திருமாலையைத் தன்னுடைய திருக்குழலிலே சூடி வாசனையுடைய தாக்கி கொடுத்த வைபவத்தை உடையவள் ஆண்டாள் என்கிறார் மாமுனிகள். தான் சூடிக்களைந்த மாலையை அரங்கனுக்கு அர்ப்பணித்து "மதிப்புடைய சோலைக் கிளி" என்ற பெருமை பெற்றவள். வேதாந்த தேசிகரும் கோதா ஸ்துதியில் (17) அரங்கன் திருவடியில் வேத மணம், நாபியில் கமல மணம், திருமார்பில் மகாலக்ஷ்மி கொங்கையில் பூசிய சந்தன மணம். இவ்வளவு மணம் இருந்தும் ஆண்டாள் உகந்தளித்த மாலையைத் தலையில் ஏற்றானல்லவா என்று அநுபவிப்பர். தலையாய மணத்தை தலையாலே தானே தாங்கவேணும் என்பர்.

*(மருவாரும் திருமல்லி வளநாடி)* மணம் நிறைந்த திருமல்லி என்ற நாட்டுக்கு தலைவியானவள். *''மல்லி நாடாண்ட மடமயில்''* என்று நாச்சியார் திருமொழி



## ஸ்ரீமத் பாகவதம் வினாக்கள்

திருமதி என். ஹேமா,
திருப்பதி.
77020 15076

1. பிரகலாதனுக்கு தரிசனம் கொடுத்தவர் யார்?
2. ஸ்ரீஹரி பலிசக்ரவர்த்தியிடம் எதை யாசகமாக கேட்டார்?
3. மூன்றாவது அடியை ஸ்ரீஹரி எங்கு வைத்தார்?
4. முக்குணம் எது?
5. பலிசக்கரவர்த்திக்கு எந்த லோகம் கிட்டியது?
6. பலிசக்கரவர்த்திக்கு ஸ்ரீஹரி எந்த பதவி கொடுத்தார்?
7. த்ரிவிக்ரமனான ஸ்ரீஹரியின் பாதத்தை பூஜித்தவர் யார்?
8. அங்க ராஜனின் மகன் யார்?
9. அங்கராஜனை சம்ஹரித்தவர் யார்?
10. பலிசக்கரவர்த்தி யாருக்கு பேரனாகப் பிறந்தார்?

விடைகளுக்கு 52ம் பக்கம் பார்க்க...

தனியனில் திருக்கண்ணமங்கையாண்டான் என்னும் ஆசார்யர் அருளியது காண்க. ஒரு தேசத்துக்கு மயிலா யிருக்குமவள் ஆண்டாள். "மயில்" என்றது கூந்தலையும் பெண்மையையும் குறிக்கும். இவள்தான் பேடை மயி லன்றோ, புனமயிலாய்க் காட்டு மயிலாயிருக்கை யன் றிக்கே நாட்டு மயிலாயிருந்து தன் குணத்தாலே நாடாக ஈடுபடும்படி பண்ணி அத்தை ஆளுமவள் என்கை. வேடு வக் குடும்பத்தில் தோன்றிய மல்லி என்பவளுக்கு வில்லி, கண்டன் என்ற இரு பிள்ளைகள். அவர்களில் வில்லி என் பவன் ஸ்ரீவில்லிபுத்தூரை இறை அருளால் நிர்மாணித் தான். அழகு மிக்க அந்நாட்டை தன் தாயான மல்லியின் பெயரையும் சேர்த்து "மல்லி நாடு" என வழங்கலானான். அப்படிப்பட்ட மல்லி நாட்டைத் தன் குணத்தாலே ஈடுபடுத் தியவளாகையாலே "திருமல்லி வளநாடி" என்றபடி. மேலும் மற்றொரு தனியனில் பொன்னடிக் கால் ஜீயர் *"தென் திருமல்லிநாடி"* என்கிறார். இவ்விடத்தில் பிள்ளை லோகம் சீயர் "ஆண்டாளுக்கு ஸ்வபாவம் நாட்டு நலத் தாலே வந்தது கோசல தேசத்தில் உள்ளார்க்குப்போலே. *"திருமல்லி நாடி"* என்று அதுவே அடையாளம்படியான அதிசயத்தை உடையவள். தென் திருமல்லிநாடி – தெற்குத் திக்கிலேயாய் அழகாயிருக்கிற திருமல்லிநாடி. பெரியாழ்வாரும் ஆண்டாளும் அவதரிப்பதற்கு பாங் கான ஸ்ரீவில்லிபுத்தூரை அடுத்து கிட்டியதான நாட்டுக்கு "திருமல்லிநாடு" என்றன்றோ திருநாமம் என்பர். *"வாழி திருமல்லி வளநாடு"* என்று இயல்சாற்றில் வகுளாபரண பட்டரும் அருளியது காண்க.

*(வண்புதுவை நகர்க்கோதை மலர்ப்பதங்கள்)* வண்புதுவை – அழகான புதுவை. திருமல்லிநாடு என் றும், ஸ்ரீவில்லிபுத்தூர் என்றும் கொண்டாடப்படும் நாட்டை வில்லியானவன் தன் வலிமையாலும் புகழாலும் இறை அருள் பெற்று பழைய நகரைப் புதுநகரமாக்கி யதால் புதுவை என்றும் அந்நாட்டுக்குச் சிறப்புப் பெயர் வந்தது. புதுவைக்கு அழகாவது – ஆண்டாளே *"பொருப் பன்ன மாடம் பொலிந்து தோன்றும் புதுவை"* என்று உரைப் பாள். அதாவது மலைகளைக் கொண்டுவந்து சேர வைத் தாப் போலே இருக்கிற மாடங்கள் நிறைந்ததாம் புதுவை. அதுமட்டுமல்ல – *"பொன்னியல் மாடங்கள் சூழ்ந்த புதுவை"* என்கிறபடியே அழகு பெற்று விளங்கும் மாளி கைகளாலே சூழப்பட்ட புதுவை என்பர்.

மேலும் புதுவையில் *"பண்ணுறு நான்மறையோர்"* என்பதற்கு ஏற்ப ஸ்வரத்தை முக்கியமாகக் கொண்ட நாலு வேதங்களும் கைவந்திருக்குமவர்கள் வாழும் நகரம் என்பர். மேலும், வடபெருங்கோயிலுடையானும், பெரி யாழ்வாரும், ஆண்டாளும், மன்னனாரும் கூடியிருக்கிற வளப்பமன்றோ. (கோதை) – "கோதா" என்ற வட சொல் ஸ்ரீஸூக்திகளைத் தந்தருளியவள் என்ற பொருள் கொண்டு தமிழில் "கோதை" எனத் திரிந்தது. "கோதை" – மாலை. மாலை போலே மிகவும் இனியவளாயிருப்பவள் ஆண்டாள் என்று உரைப்பர் காஞ்சீ ஸ்வாமி. (மலர்ப் பாதங்கள்) – மலரையொத்த திருவடிகள். நாச்சியார் திருமொழி "கோலச் சுரிசங்கை" என்ற தனியனில் *"அவள் தூயநற்பாதம் துணை நமக்கே"* என்றது காண்க. அதாவது ஆண்டாளின் தூய்மையும், அழகுமுடைய திருவடிகள். ஆண்டாளது திருவடிகள் இங்கிருக்கும் வரை நமக்குத் துணையாய், கைங்கர்யத்தை வளர்ப்பதாயிருக்கும். ஆண்டாளின் மலர்ப்பாதங்களை வணங்கி எங்கும் திருவருள் பெற பல்லாண்டு பாடுவோமாக.

ஆண்டாள் திருவடிகளே சரணம்.

வாழித்திருநாமம் வளரும்...



திருமலை திருப்பதி தேவஸ்தானம்

# "ஸ்ரீவேங்கடேஸ்வரா சர்வஸ்ரேயஸ்சு அறக்கட்டளை"

*"மானிட சேவையே மாதவன் சேவை" எனும் பெரும் நோக்கத்துடன் தி.தி.தேவஸ்தானம் பல்வேறு சமூக நலச் செயல்களை நிர்வகிக்கின்றது. இதில் ஒரு பகுதியாக ஆதரவற்ற சிறார்களுக்கு உதவிக்கரம் நீட்டும் நோக்கத்துடன் 1943–ஆம் ஆண்டு ஸ்ரீவேங்கடேஸ்வரா பால மந்திரம் (திருப்பதி) அறக்கட்டளையை தி.தி.தே. நிறுவியது. இந்த ஸ்ரீவேங்கடேஸ்வரா பால மந்திரம் அறக்கட்டளையோடு ஸ்ரீவேங்கடேஸ்வரா ஜலநிதி திட்டம், கல்யாண மஸ்து திட்டம், ஸ்ரீவேங்கடேஸ்வரா தகவல் தொழில் நுட்ப அறக்கட்டளை போன்றவற்றை இணைத்து "ஸ்ரீவேங்கடேஸ்வரா சர்வஸ்ரேயஸ்சு அறக்கட்டளை" யாக வடிவமைக்கப்பட்டுள்ளது.*

**திட்டத்தின் நோக்கங்கள் :**

1) ஆதரவற்ற சிறார்கள், முதியோர், ஆதரவற்றோர் பாக்கியமற்றோர், ஏழ்மையில் வாடும் தாழ்த்தப் பட்ட வகுப்பினர் போன்றோரின் வளர்ச்சி, பாதுகாப்பு நலனுக்காக தர்மசாலைகள், தங்கும் வசதி, இல்லங்கள் ஏற்படுத்துதல். பொருளாதாரத் தில் பின் தங்கிய மாணவ மாணவியர்க்கு பண உதவி அளித்தல்.

2) மாற்றுத் திறனாளிகளுக்கும், மனவளம் குன்றிய நோயாளிகளுக்கும் தகுந்த மருத்துவ உதவிகள் உண்டு பண்ணி அவர்களின் வாழ்வினை மேம் படுத்துவது, குலம், மதம், ஜாதி, வர்க்கம், வர் ணம் போன்ற வேறுபாடுகள் கடைப்பிடிக்காமல் அனைவரையும் சமமாகப் பார்ப்பது.

3) வெள்ளம், வறட்சி போன்ற இயற்கைச் சீற்றங் களின் போதும், தீப்பிடித்தல் போன்ற எதிர்பாராத சம்பவங்கள் நிகழும்போதும் விரைவான உதவி களை மேற்கொள்ளுதல்.

4) காது கேளாத, வாய் பேசாத குழந்தைகளுக்கும் மேற்படி குறைபாடுகளோடு பிறக்கும் சிசுக்களுக் கும் மறுவாழ்வு மையங்களை ஏற்பாடு செய்தல்.

5) மேற்குறிப்பிட்ட குறைபாடுகளோடு கிராமங்களில் உள்ள சிறுவர் சிறுமியர்களுக்குத் தேவையான கருவிகளை அளித்தலோடு, அவர்களுக்குக் கல்வி போதித்தல்.

6) மக்களுக்கு மிகவும் தேவையான குடிநீர் வச தியை ஏற்படுத்தித்தருதல், திருமலை பஞ்சா யத்து, திருப்பதி மாநகராட்சிக்குத் தேவையான நீர் வள ஏற்பாட்டிற்காக தடுப்பணைகளை ஏற்பாடு செய்வது, நீர் சேகரிப்பிற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

7) புத்தகங்களுடன் இணைய தளம் முதலான அதி நவீன தொழில் நுட்ப உதவிகளோடு நம் நாட்டு வரலாறு மற்றும் பண்பாட்டு கலாச்சார பாரம் பரியத்தை அடுத்தத் தலைமுறைக்கு அளிப்பது.

8) சமுதாய ஒழுக்கம், அற நெறிமுறைகளை வளர்த்து இளைஞர்களிடையே ஆன்ம நேய நம்பிக்கையை உண்டு பண்ணுதல்.

9) உதவிகரமான திருமண நிகழ்வுகள் மூலம் மண மக்களை கௌரவ அபிமானத்துடன், உயர் குடும்ப வாழ்க்கையை வாழும்படி செய்தல்.

10) மேற்குறிப்பிட்ட நோக்கங்களுக்கு ஊக்கமளித்திட தனி நபர்களுக்கும், நிறுவனங்களுக்கும் உதவி அளிப்பது.

11) மேலே விவரித்த இலட்சிய சாதனங்களில் இலா பம் ஈட்டுவதற்கு வாய்ப்பு இல்லாமல் பார்ப்பது.

**ஸ்ரீவேங்கடேஸ்வரா சர்வஸ்ரேயஸ்சு அறக்கட்டளை நன்கொடையாளர்களுக்கு :**

1) இத்திட்டத்திற்கு குறைந்தபட்ச நன்கொடை ரூ.1,000/-

2) ரூ.1,000/-க்கு குறைவாக நன்கொடையளித்தால் எவ்விதத் தகவலும் இன்றி ஸ்ரீவாரி உண்டிக்கணக்கில் செலுத்தப் படும். பெறப்படும் நன்கொடைகளை தேசிய மயமாக்கப்பட்ட வங்கியில் இருப்பு வைத்து அதிலிருந்து கிடைக்கும் வட்டியை இத்திட்டத்திற்கு உபயோகப்படுத்தப்படும். இத்திட்டத்திற்கான நன்கொடையை வழங்குபவர்கள் - "செயலாட்சித் தலைவர், ஸ்ரீவேங்கடேஸ்வரா சர்வஸ்ரேயஸ்சு அறக்கட்டளை, தி.தி.தேவஸ்தானம், திருப்பதி" எனும் பெயரில் காசோலை/வங்கி கேட்பு வரைவோலையை "பிரதான கணக்காளர், தி.தி.தேவஸ்தானம், திருப்பதி - 517 507" எனும் முகவரிக்கு அனுப்பவும்.

# 108 திவ்விய தேச வைபவம்



# திருப்புளிங்குடி

## (நவதிருப்பதி–3)

– திரு. உருப்பட்டூர் சௌந்தரராஜன்,
சென்னை.

**புராண வரலாறு :**

வைகுண்டவாஸியான பகவான், மஹா லக்ஷ்மியுடன் இங்கு, தாமிரவருணி மணற்திட்டு அழகில் ஈடுபட்டு விளையாடியதாகவும், நிலமகள் கோபித்துக் கொண்டு பாதாள லோகம் செல்ல, பூமி முழுவதும் பொலிவு இழந்து வறட்சி பெருக, பகவான் இதை உணர்ந்து, மண்மகளை எங்கும் தேடி, பாதாளம் சென்று திரும்பி அழைத்து வந்து, இங்கு வந்து படுத்து ஓய்வு எடுத்ததாகவும் சொல்வர்.

இன்னொன்று,

யக்ஞசர்மா என்கிற வேதாத்யாயி, வசிஷ்டருடைய குமாரர் சக்தி முனிவரும், மற்றும் பல முனிவரும் வந்த போது, அவர்களை உபசரிக்காமல் கடுஞ்சொல் சொன்ன தாகவும், அவர்கள் அரக்கனாகப் போகுமாறு சபித்ததாக வும், பிழை பொறுக்க வேண்டிய போது, திருப்புளிங் குடிக்குச் சென்று, இந்திரனின் யாகத்தை நீ அரக்கனாக இருந்து கெடுக்கும்போது, பகவானால் சாப விமோசனம் ஆகுமென்று சொன்னதாகவும், அந்த வேதம் வல்லான், அரக்கனின் உருவில், இங்கு வந்து, இந்திரன் இந்தத் திவ்ய தேசத்து பகவானை வேண்டிச் செய்கிற யாகத் தைக் கெடுக்கும்போது, பகவானே தோன்றி இவனை அழித்து, பரமபதம் அருளினார் என்பர்.

**சிறப்பு :**

ஸ்ரீராமாநுஜரே வியந்து போற்றிய ஒரு பெண், இங்கு திருவாய் மொழியில் புலமை பெற்று விளங்கி னார். இவள், இவ்வூர் அர்ச்சகரின் மகள். இதுவே இப்படியெனில் இவ்வூர் பெரியவர்களின் சிறப்பை அளவிட இயலாது என்பர்.

பகவானின் திருநாபியிலிருந்து கிளம்பும் தாமரைக் கொடி, பின்பக்கச் சுவற்றில் உள்ள பிரம்மாவின் தாமரை மலருடன் இணைவது போன்ற காட்சி, பிரமிக்க வைக்கிறது.

| | |
|---|---|
| பெருமாள் | – காய்சின வேந்தன் பூமிபாலர் (கிழக்கு நோக்கிய கிடந்த திருக்கோலம்) |
| தாயார் மூலவர் | – மலர்மங்கை, பூமகள். |
| தாயார் உற்சவர் | – புளிங்குடி வல்லித்தாயார். |
| புஷ்கரணி | – .... |
| விமானம் | – வேதசாரவிமானம், ச்ருதிசார ஸேகர விமானம் |
| தீர்த்தம் | – வருண தீர்த்தம், நிர்ருதி தீர்த்தம் |



## ஆதிசங்கரர் அருளிய பஜகோவிந்தம்

*அக்ரே வஹ்னி: ப்ருஷ்டே பானு:*
*ராத்ரௌ சுபுக சமர்ப்பித ஜானு:।*
*கரதல பிக்ஷஸ் தருதல வாஸ: ததபி ந*
*முஞ்ச த்யாசா பாச:॥*

**ஒருவன் எல்லாவற்றையும் துறந்துவிட்டதாக நினைத்து, தவம் செய்கிறான். அவனது எதிரில் அக்னி எரிகிறது. அவனது பின்புறம் முதுகின் மீது சூரியனுடைய வெப்பம் தகிக்கிறது. இரவு ஆகி விட்டாலோ, குளிர் தாங்காமல், தனது முகவாய்தனை முழங்கால்களுக்கு இடையில் வைத்து மூடிக் கொள்கிறான். பிக்ஷை எடுக்கும் பாத்திரம் கூட இல்லாமல், கைகளில் பிக்ஷை வாங்குகிறான். ஒரு குடிசை கூட இல்லாமல், மரத்தின் அடியிலேயே தங்குகிறான். இவ்வாறாக தவம் செய்ய முயற்சி செய்பவனையும் "ஆசை" என்பது விடுவதில்லை.**

ஒரு மனிதன், எல்லாவற்றையும் துறந்துவிட்டு, வனத்தில் வெப்பமும் குளிரும் சேர்ந்த சூழலில், தவம் செய்யும் நிலையில் கூட, ஆசை என்பதை விட்டு விட முடிவதில்லை என்று உணர்த்துகிறார் ஆதி சங்கர பகவத் பாதாள்

**– திரு. சீதாராமன், சென்னை.**

| | |
|---|---|
| ப்ரத்யக்ஷம் | – வருணன், நிர்ருதி, தர்மராஜன், நம்மாழ்வார். |
| ஆகமம் | – வைகானஸம். |
| மங்களாசாஸனம் | – நம்மாழ்வார். |
| விசேஷம் | – இந்த திவ்ய தேசத்தில் ஸ்ரீசடாரி இல்லை. குரு பகவானின் பரிகாரஸ்தலம். |

### த்யான சுலோகம்

*ஸ்ரீமத் காய்சின பூபதிஸ்ஸபகவான், ஸ்ரீதிந்த்ரிணீ மந்திரே*
*பூர்வா சாவதனோ புஜங்க சயன: பத்மோத்பவா ஸங்கத: ।*
*ச்ரேஷ்ட வாருண தீர்த்த ராஜ விலஸத்தீரே தயா வாரிதி:*
*ரேஜே ஸ்ரீச்ருதி ஸார சேகரலஸந் மூர்த்தி: ப்ரசேதச்ச்ரித: ॥*

### பாசுரம்

*"கிடந்த நாள் கிடந்தாய் எத்தனை காலம்*
*கிடத்தி? உன் திரு உடம்பு அசைய*
*தொடர்ந்து குற்றேவல் செய்து தொல் அடிமை*
*வழிவரும் தொண்டரோர்க்கு அருளி*
*தடம் கொள் தாமரைக் கண்விழித்து நீ எழுந்து*
*உன் தாமரை மங்கையும் நீயும்*
*இடம் கொள் மூவுலகும் தொழ இருந்து அருளாய்*
*திருப்புளிங்குடிக் கிடந்தானே!"*

– நம்மாழ்வார்

*"தெளியும் பசும்பொன் சிறைக்காற்று வீச*
*விளியும் துயர் போய் விடுமே - எளியேற்கு*
*அருளப் புளிங்குடி வாழ் அச்சுதனைக் கொண்டு*
*கருளப்புள் இங்கு வந்தக்கால்."*

– பிள்ளைப்பெருமாள் ஐயங்கார்

### நாமாக்கள்

441. **ஓம் நக்ஷத்ரநேமி: நம:**
(நக்ஷத்ரமண்டலத்தை நடத்துபவனே)
**ஓம் ஸம்வ்ருதஜ்யோதிஷே நம:**
(தமோ குணாதியர்கள் காண இயலாத மறைக்கப் பட்ட பிரகாசத்தை உடையவளே)

442. **ஓம் நக்ஷத்ரீ நம:**
(நக்ஷத்ர மண்டலத்தைத் தாங்குபவனே)
**ஓம் யோகிந்யை நம:**
(சேராததைச் சேர்த்து வைக்கும் மஹாப்பாவத்தை உடையவளே)

443. **ஓம் க்ஷம: நம:**
(உலகபாரங்களைத் தாங்கும் பொறுமையாளனே)
**ஓம் யோகஸித்திதாயை நம:**
(யோகாப்யாஸ பலமாக, சர்வசித்திகளையும் தருபவளே)

444. **ஓம் க்ஷாம: நம:**
(ப்ரளய காலத்தில் சற்று இளைத்திருப்பவனே)
**ஓம் ஸ்ருஷ்டி ஸக்த்யை நம:**
(ஜகத்ச்ருஷ்டிக்கு வேண்டிய உபாதாந சக்தியை உடையவளே)

445. **ஓம் ஸமீஹந: நம:**
(ஸ்ருஷ்டி சமயத்தில் எல்லாரையும் செயல்பட வைப்பவனே)
**ஓம் த்யோதமாந பூதாயை நம:**
(சேதநாசேதந ப்ரபஞ்சங்களை உடையவளே)

446. **ஓம் யக்ஞ: நம:**
(யாகஸ்வருபே)
**ஓம் மங்கள தேவதாயை நம:**
(சுபத்தையே அருளும் தெய்வமே)

447. **ஓம் இஜ்ய: நம:**
(இந்த்ராதி தேவதா ரூபமாக ஆராதிக்கப்படுபவனே)

## சாஸ்த்திர நீதிகள்–80



அக்னி ஹோத்ர பலா வேதம் தத்த புக்த பலம் தனம்।
ரதி புத்ர பலா தாரா சீல வ்ருத்த பலம் ச்ருதம் ||

வேத அத்யயனம் செய்கிறவன் தினமும் அக்னி ஹோத்ரம் செய்வதனால் அவனுக்கு புண்ணியம் சேரும். பணம் படைத்தவன் தானங்களை செய்து புண்ணியம் தேட வேண்டியது. மனைவியிடம் உண்மையாக வாழ்க்கை நடத்துபவனுக்கு நல்ல குணமுள்ள புத்திரன் பிறந்தால் புண்ணியம் உண்டு. சாஸ்த்திர அர்த்தங்களை கேட்டவன் அப்படியே அதை செய்து வாழ்ந்து வர புண்ணியம் சேருகிறது.

தொகுப்பு : திருநாங்கூர் உ.வே. ஸௌந்திரராஜபட்டர், புதுடில்லி.

*ஓம் சம்ஹாரஸக்த்யை நம:*
(ப்ரளய காலத்தில் ஜீவன்களை மேன்மேலும் பாபம் செய்ய இயலாமல் அவர்களை நாமங்களை விலக்கி, தம்முள் ஒடுக்கும் சக்தி உள்ளவளே)

448. *ஓம் மஹேஜ்ய நம:*
(தன்னை ஆராதிப்பதையே சிறந்ததாக ஏற்பவனே)
*ஓம் ப்ரபலாயை நம:*
(இப்படி ச்ருஷ்டி, ஸம்ஹார சக்தியின்போது, தன்னை யாரும் தடுக்க இயலாதபடி அவற்றை நிர்வகிக்கும் வல்லமை உடையவளே)

449. *ஓம் க்ரது: நம:*
(சகல யக்ஞங்களாலும் ஆராதிக்கப்படுபவனே)
*ஓம் நிருபாதயே நம:*
(இயற்கையாகவே எல்லாப் பெருமைகளையும் உடையவளே)

450. *ஓம் ஸத்ரம் நம:*
(நீண்ட காலம் செய்யப்படும் “ஸத்ரம்” என்கிற யாகத்தாலும் ஆராதிக்கப்படுபவனே)
*ஓம் பராவராயை நம:*
(ப்ரஹ்ம ருத்ராதிகளை விட உயர்வான பெருமை உடையவளே)

*ஸ்ரீமதே ஸ்ரீ, பூ, நாயிகா ஸமேத ஸ்ரீபூமிபாலாய, வைரிணே தர்ஸின கோபாய ஜ்யோதி தேவாய பரப்ரம்மணே நம:*

ஸ்ரீவைகுண்டம் கோயிலில் இருந்து கிழக்கே சுமார் 3 கி.மீ. தொலைவில் இவ்வாலயம் அமைந்துள்ளது.

திவ்ய தேச வைபவம் வளரும்...

## ஸ்ரீநிவாசமங்காபுரத்தில் சாக்ஷாத்கார வைபவம்

**தொடர் ஆண்டு 1906ல் வெர்ரி பாகுளம்மா என்கிற ஒரு பெண்மணி ஸ்ரீநிவாசமங்காபுரத்தில், சிதிலமடைந்திருந்த ஸ்ரீகல்யாண வேங்கடேஸ்வர ஸ்வாமி திருக்கோயிலுக்கு வந்து, அங்குள்ள கிராமவாசிகளிடம் பிரசாதத்திற்கு தேவையானவற்றை யாசித்து, எம்பெருமானுக்கு நிவேதனம் செய்து, அனைவருக்கும் கொடுத்து அங்கேயே வசித்து வந்தார். ஒரு நாள் திடீரென ஊரிலுள்ளவர்களை அழைத்து “இனி தன்னை இந்த ஊரில் காண முடியாது என்றும், கோயிலை நிர்வகிக்க ஒரு பிராம்மணர் வருவார்” என்றும் கூறி விட்டு சென்றார். அடுத்த நாளே காஞ்சீபுரத்தில் இருந்து சுந்தரராஜ ஸ்வாமி என்பவர் இங்கு வந்தார். இவ்வூர் மக்களிடையே, தனது கனவில் இந்த எம்பெருமான் வந்து, தான் முட்புதருக்கு நடுவே இருப்பதாகவும், தனக்கு முறைப் படி பூஜைகள் செய்யுமாறு அருள் வாக்கு அளிக்க, தான் இங்கு வந்ததாகக் கூறினார். சுமார் நூறு வருடங்களுக்குப் பிறகு விக்ரம ஆண்டு ஆடி மாதம், சுக்லபக்ஷ சப்தமியில், உத்திர நட்சத்திரம் கூடிய சுப தினத்தில் ஸ்ரீகல்யாண வேங்கடேஸ்வர ஸ்வாமிக்கு ஆகமப்படி பூஜைகள் ஆரம்பமாகியது. 11–7–1940லிருந்து ஒவ்வொரு வருடமும், இன்று வரை அந்த நன்னாள் கொண்டாடப்படுகிறது. அதன் பின்பு 1980ல் திருமலை திருப்பதி தேவஸ்தானம் இந்த ஆலயத்தைத் தங்கள் பொறுப்பில் ஏற்றுக் கொண்ட பிறகும், இந்த உற்சவம் அதே நாளில் மூன்று நாள் உற்சவமாக ஸ்ரீவைகானச ஆகமப்படி “சாக்ஷாத்கார வைபவ உத்ஸவ”மாக நடத்தப்பட்டு வருகின்றது.**




# அசுரகுணம் பந்தத்திற்கு வழி வகுக்கும்

தெலுங்கு மூலம் : டாக்டர். வைஷ்ணவாங்கிரி சேவக் தாஸ்.
தமிழாக்கம் : திரு. வ.ஓ. சுரேஷ், 6304428489

பந்தம், மோட்சம் எனும் இரு வார்த்தைகள் ஆன்மீக உலகில் பெரும்பாலும் ஒலித்துக் கொண்டே இருக்கும். எனினும், இந்நிலையினை சாதாரண வாழ்வில் காணப்படுகின்றவைகளை குறித்து எவரும் அதிகமாகக் கூறுவதில்லை. உண்மையில் பந்தம், மோட்சம் என்றால் என்ன? திருட்டு, குற்றம், கொலை போன்ற செயல்களுக்கு காவல் துறையினரும் சிலரை தண்டிக்கின்றனர். அவர்களின் கைகளுக்கு விலங்கிடுதல், அவர்களை நீதிமன்றத்திற்கு அழைத்துச் செல்லுதல், தண்டனையை பொறுத்து சிறையில் அடைத்தலும் செய்கின்றனர். இந்த எடுத்துக்காட்டுகள் பந்தத்திற்கு சிறப்பாக ஒத்துப்போகும். அதாவது பந்தத்தில் உள்ள ஒருவன் ஒரு பொதுக்குடிமகனாக விளங்க முடியாது. சுதந்திரத்தை அனுபவிக்க முடியாது. சொந்தங்களுடன் ஒன்றிணைந்து மகிழ்ச்சியுடன் இருக்கவும் முடியாது. நிம்மதியுடன் உறங்கவும் முடியாது. இதுதான் பந்தத்தினால் உண்டாகின்ற விளைவுகளாகும். இனி மோட்சத்தை குறித்து அலசுவோம்.

தற்போது உலகம் முழுவதும் பரவியுள்ள நுண்கிருமியான கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளானவரை மருத்துவமனையில் சேர்த்து, சிகிச்சை அளித்து வருகின்றனர். எம்பெருமானின் அருளால் இந்தியத் திருநாட்டில் அந்த வைரஸ் தொற்றிலிருந்து பெரும்பாலானோர் குணமடைந்துள்ளனர். மற்ற நாடுகளோடு ஒப்பிடுகையில் குணமடைந்தவர்களின் விழுக்காடு அதிகமாகவே உள்ளது. அதாவது யார் மருத்துவரின் ஆலோசனைப் படி தகுந்த முறையில் சிகிச்சை மேற்கொண்டனரோ அவர்களே நோய் தொற்றிலிருந்து குணமடைந்தனர். அதாவது நோயிலிருந்து மோட்சம் அடைந்தனர்.

இவ்விதமாக பந்தம், மோட்சம் குறித்து அறிந்த பின்னர் உண்மையான பந்தம், மோட்சம் குறித்து மேலும் அறிவதே அறிவியலாகும். இதனை குறித்தே பகவத்



கீதையில் கீதாசாரியரும் "அசுர குணம் பந்தத்தை உண்டாக்குகிறது" என்கிறார். அதாவது அசுர குணம் இருந்தால் பந்தம் நிச்சயம். பந்தம் உண்டானால் துன்பம் நிச்சயம் என நாம் தெரிந்து கொள்ளல் வேண்டும். அசுர குணம் எப்படி இருக்கும் என கேள்வி உண்டாகும். இதற்கு பதில் பகவத் கீதையில் கூறப்பட்டுள்ளது.

"ஓ பார்த்தா! பகட்டு, ஆடம்பரம், இருமாப்பு, தற்பெருமை, கோபம், கடுமை, அஞ்ஞானம் இவை யாவும் அசுர பண்புடன் பிறந்தவர்களுடைய குணங்களாகும்" – பகவத் கீதை 16.4

"தெய்வீக குணம் மோட்சத்திற்குக் காரணம் என்றால், அசுர குணம் பந்தத்திற்கு வழிவகுக்கிறது. ஓ பாண்டவ புத்திரனே! நீ தெய்வீக குணத்துடன் பிறந்திருக்கிறாய். எனவே வருந்தாதே"

அசுர குணம் மானிடரை நேரடியாக நரகத்தில் கொண்டு சேர்க்கிறது. அவர்களுக்கு அந்த நரகம் இப்பிறவியிலேயே காணப்படுகிறது. எனவே இப்பிறவிக்குப் பிறகு அவர்கள் செல்வது கண்டிப்பாக நரகமேயாகும். யாரொருவர் தனக்கு இருக்கக் கூடிய கல்வி, பணம், பொருள், நற்பெயர், பதவி, மக்கட்பலம் இவற்றினை கொண்டு பெருமை பட்டுக் கொண்டால் அதுவே கர்வமாகும். சாதாரணமாக இவையாவும் மானிடருக்கு கர்வத்தை உண்டாக்கும். இவையாவும் இருந்தாலும் கூட எளிமையான குணம் இருப்பவனே எம்பெருமானின் கருணைக்கு பாத்திரரா கின்றான். இந்த கர்வத்தால் அவனுக்கு திமிரும் உண்டாகின்றது. வாயிற்கு வந்த வற்றை பேசுவதும், சிறியவர் பெரியவர் வேறுபாடின்றி பேசுவதும் திமிராகும். இது போன்றவர்களை எவராவது எதிர்த்து நின்றாலே இவர்களுக்கு அகங்காரமும் அதிகரிக்கின்றது. அசுர குணம் வெளிப் படுத்தக் கூடிய மற்றொரு தீய குணம் அகங்காரமாகும். எனவே தான் அகங்காரம் அதிகரிக்கும் போது கோபம் வருகின்றது. அதனால் அவர்கள் முரட்டுத் தனமாகப் பேசுவதிலும், முரட்டுத்தனமாக மற்றவரை கையாள்வதிலும் ஈடுபடுகின்றனர். அச்சமயத்தில் சிறியோர், பெரியோர் எனும் வேறுபாடின்றி கையாள்வர். இக்குணமானது அவர்களுக்கு, எப்பொழுதாவது, ஏதோ ஒரு நிலையில் துன்பத்தையே அளிக்கும். பந்தத்தை அளிக்கும். அதுமட்டுமின்றி அவர்கள் நரகவாசிகளாகின்றனர்.

எனவே தான் இளைஞர்கள் இந்த அசுர குணத்திலிருந்து தள்ளி இருத்தல் வேண்டும். வாழ்வில் நம் வெற்றிகளுக்கு காரணமானவர்களின் ஊக்கத்தையும், உதவியையும் எண்ணி பணிவுடன் இருத்தலை கற்றுக் கொள்ளல் வேண்டும். இதுபோன்ற பணிவு மேலும் வெற்றிகளுக்குக் காரணமாய் அமையும் பணிவுடன் இருப்போருக்கு எந்நாளும் திமிர் என்பது இருக்காது. படிப்புடன் பணிவும் இருப்போரையே உலகமும் போற்றும். கோபத்தினால் எவ்வித நன்மையும் இருக்காது. மேலும், அது நம்மையே அழித்தும் விடும். இச்சுலோகத்தில் கூறப்பட்டுள்ள அசுர குணங்கள் ஒவ்வொன்றினையும் கைவிடும் இளைஞர்கள் கண்டிப்பாக வெற்றிச் சிகரத்தை அடைவர். இவர்கள் செல்லும் இடமெங்கும் வாழ்த்துக்களையும் பாராட்டுகளையும் பெறுவர். இதை தவிர்த்து அசுர குணம் கொண்டால் பந்தம் தப்பாது. துக்கம் தப்பாது, நரகமும் தப்பாது. எனவே அசுரகுணம் விடுத்து பணிவுடன் இருந்து வெற்றிகள் பல பெறுவோம்.

பகவத்கீதை தொடரும்...

## வைணவக் குறுக்கெழுத்துப் புதிர் - 46க்கான பதில்

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 தி | ரு | ப் | பி | ரை | யா | ர் | ண | க | ங் | 2 கொ | 3 தி |
| ரு | | ன் | ண | ய | ரா | நா | ய | ரி | 4 சூ | தை | ரு |
| ப் | 5 தொ | ட் | ட | ம | ளு | ர் | | ரை | து | 6 ம | வ |
| பா | 7 வெ | ங் | க | பா | ம் | பே | ட் | டை | | ர் | ந் |
| வை | ர் | ண | ஷ் | ரு | கி | ன | த | த் | ர் | 8 ந | தா |
| 9 யோ | க | ந | ர | சி | ம் | ம | ர் | க | ன | 10 ஜ | தி |
| | | | 11 அ | மா | சோ | ம | வா | ர | ம் | | |
| 12 நா | ங் | கு | நே | ரி | ம் | ச | தே | க | ங் | 13 அ | 21 தி |
| | ம் | ர | தா | வ | ச | ச் | 14 ம | | லி | க | ரெள |
| | 15 கு | வா | ல | ய | பீ | ட | ம் | | தி | லி | ப |
| 16 ம | ந் | தி | ர | ம் | ண | வ | ர | 17 சி | ந் | கை | தி |
| 18 தி | ரு | நீ | ர் | ம | லை | 19 பி | த் | ரு | 20 அ | | |



# நூல் மதிப்புரை

**நூலின் பெயர் :**
**ஸ்ரீமத்நிகமாந்த மஹாதேசிகன் அருளிய ஸ்ரீஹம்ஸ ஸந்தேசம்**

(பதவுரை, பொழிப்புரையுடனும்) – தொகுப்பாசிரியர் ஸ்ரீ உ.வே. மாமண்டூர் கிடாம்பி நரசிம்மசாரி ஸந்தானம் ஸ்வாமி. கிடைக்குமிடம் – 5/3, சிவா அருண் காலனி, மேற்கு மாரட் பள்ளி, செகந்திராபாத் – 500 026. 040–2780346.
(விலை – இலவசம். தபால் செலவு ரூ.30)

ஸ்ரீவேதாந்த தேசிகர் எழுதிய வடமொழி நூல்களில் ஸ்ரீஹம்ஸ ஸந்தேசம் மிகவும் உயர்ந்த நூலாகும். 110 சுலோகங்களைக் கொண்ட இந்த நூலுக்கு பற்பல பெரியோர்கள் உரை எழுதியுள்ளனர். அந்த வகையில் இப்போது ஸ்ரீ உ.வே. மாமண்டூர் கிடாம்பி நரசிம்மாசாரி ஸந்தானம் அய்யங்கார் ஸ்வாமி எளிமையான தமிழ் மொழியில் சுலோகத்துக்குப் பதவுரை அளித்து, மிகவும் அழகான உரையும் எழுதியுள்ளார். கட்டிப்பொன் போலே விளங்கும் சுலோகங்களின் உள்ளார்ந்த பொருள்களைப் பொன்னைக் கொண்டு ஆபரணம் செய்தாற் போலே வழங்கியுள்ளார்.

அனுமன் இராமனிடம் சீதையைக் கண்டு வந்ததைச் சொன்ன பிறகு, இராமனுக்கு ஏற்பட்ட பொறுக்கமாட்டாத துன்பத்தை வெளிப்படுத்தும் வகையில் இராமன் தன் எதிரில் கண்ட ஒரு அன்னத்தைச் சீதையிடம் தூதுவிடுவதாக இந்நூல் அமைந்துள்ளது. ஸ்ரீவால்மீகி ராமாயணத்தில் இம்மாதிரி தூது விட்டதாக இல்லாதிருப்பினும் வேதாந்த தேசிகர் இராமனிடம் கொண்ட பக்தியாலே “ஞானத்தில் தன் பேச்சு ப்ரேமத்தில் பெண் பேச்சு” என்று அழகிய மணவாளப் பெருமாள் நாயனார் அருளிய ஆசார்ய இருதயத்தின்படி ஞானமும் ப்ரேமமும் கலந்து பரிபூர்ணமாக இராமன் பட்ட பிரிவின் வருத்தத்தைத் தாமே ஏறிட்டுக் கொண்டு தன் முன்னே கண்ட அன்னத்தை இராமன் தூதுபோகச் சொல்லி, தன் ஆற்றாமையையும் அவ்வன்னம் எப்படி செல்ல வேண்டும் என்ற வழியையும் கற்பனைக் காவியமாக அழகாகப் புனைந்துள்ளார் வேதாந்த தேசிகர். மேலும் இந்நூலில் சுந்தரகாண்டத்தில் அமைந்த சொற்களை ஆங்காங்கே சேர்த்து சொன்னதையும் காணலாம்.

இராமன் அன்னத்தை இலங்கை செல்லுமாறு வேண்டும்போது, அன்னத்தின் இயல்பான தன்மையான நீரில் திரிவது, ஆகாயத்தில் பறப்பது, பிரமனின் வாகனமாக மேம்பட்டு இருப்பது ஆகியன பற்றி சொல்லி, அந்த நகருக்குச் செல்வது எளிது என்று காட்டுகிறார் (சுலோகம் 8). அன்னங்களின் தன்மையைச் சொல்லும்போது அவைகளுக்கு முத்துக்கள் உணவு என்றும், மழையை விரும்பாது என்றும் காட்டி உரைப்பர். வழி நடையில் மற்ற பறவைகளுக்கு இடையூறு இல்லாமல் கவனமாகச் செல்ல வேண்டும் என்பதை பலபடியாக உண்மைகளை எடுத்துரைக்கும் வகையில் தம்பதியர்கள் பார்ப்பது நல்ல சகுனம் என்றும், கருடன் எதிர்ப்பட்டால் அவரை வணங்கி வலது புறமாகச் செல்ல வேண்டும் என்றும் உரைப்பது குறிப்பிடத்தக்கதாகும். வழியில் திருவேங்கடமலை தென்படும் என்று கூறி அதன் வரலாற்றையும், மானிடரும் தேவரும் கூடி வழிபடுவது, ஸுவர்ணமுகி நதிப்பெருமை முதலானவற்றை (சுலோகம் 21–24) அழகாக எடுத்துரைக்கும் பாங்கு மிகவும் நேர்த்தியாக உள்ளது. இவற்றுக்கெல்லாம் மேலாக தேசிகர் சீதையைக் கண்ட அன்னத்திற்கு தனக்குள்ளே உண்டாகும் சோகத்தை “அந்த: ஸ்வயம் உபநதம் சோக வேகம்” (ச்.84) என்று சுட்டிக் காட்டிச் சுவைபட உரைப்பர். சீதையைக் கண்ட அன்னம் இராமனின் செய்தியைக் கேட்பதில் சீதைக்கு உண்டான ஆர்வத்தை மிக அழகாக தேசிகர் புனைந்துள்ளர் (ச்.90). இவ்வாறு இந்நூலில் பக்கம்தோறும் கரும்பு கணுதோறும் இனிக்குமாபோலே, இவ்வாசிரியர் மிக அழகான முறையில் உரை அமைத்துள்ளது அனுபவிக்கத்தக்கதாகும். இராமபிரானை பக்தியோடு வழிபடுபவர்களுக்கு இது பெருவிருந்தாகும் என்பதில் ஐயமில்லை. இந்நூலை வாங்கிப்படித்து பயன் பெறுவீராக.

**– டாக்டர் மாடபூசி வரதராஜன், சென்னை**

தொடர்

ஆயுர் வேதம்

# கற்றாழை






தெலுங்கு மூலம் :
டாக்டர். சி.மதுசூதன சர்மா, 90007 61390.
தமிழாக்கம் :
திருமதி. வி. உஷா, 99850 03156


கற்றாழை அனைத்து பகுதிகளிலும் கிடைக்கக் கூடியதாகும். மருத்துவ குணங்கள் மிக்க இந்த கற்றா ழையை அழகுப் பொருட்களில் அதிகமாக உபயோகப் படுத்துகின்றனர். இச்செடியை நம் வீட்டுத் தோட்டங் களிலும், சிறு தொட்டிகளிலும் வளர்க்கலாம்.

இச்செடி ஒரு புதர் போல் வளரும். இதன் இலைப் பகுதியின் நுனிகளில் முட்கள் இருக்கும். தடிமனாகவும் இருக்கும். பெண்களின் சில நோய்களைப் போக்குவ தால் இதனை "குமரி" என்றும், இதன் உட்பகுதி நெய் போன்று இருப்பதால் "க்ருதமாரி" என்றும் சமஸ்கிருதத்தில் அழைப்பர். "அகாவேசி" என்ற தாவர குடும்பத்தைச் சார்ந்த கற்றாழையின் அறிவியல் பெயர் "அலோவேரா" என்பதாகும். இக்கற்றாழையின் மருத்துவ குணங்களைப் பற்றி அறிந்து கொள்ளலாம்.

### தோல் வியாதிகளுக்கு, காயம் மற்றும் புண்களுக்கு :

நாள்தோறும் ஓரிரண்டு முறை கற்றாழையில் உள்ள கூழ்மத்துடன் (ஜெல்) மஞ்சள் கலந்து பூசினால் குறையும்.

### சீழ் பிடித்த கட்டிகள் உடைய :

கற்றாழை கூழ்மத்துடன் தகுந்தளவு உப்பு, மஞ்சள் பொடி ஆகியவற்றை கலந்து கட்டிகளின் மேல் வைத்து கட்டுப் போட்டால் விரைவில் அந்த கட்டிகள் உடைந்து புண் ஆறிவிடும்.

### சொரியாஸிஸ் :

கற்றாழை கூழ்மத்தை மிக்ஸியில் அறைத்து, சாறு எடுத்து அரசமரக் கொட்டையினால் எடுக்கப் படும் எண்ணெய் உடன் கலந்து, உடலிற்கு தேய்த்து, இரண்டு மணி நேரம் கழித்து குளித்தால் நற்பலன் கிடைக்கும்.

### தீப் புண்களுக்கு :

நாள்தோறும் இரண்டு முறை கற்றாழை கூழ் மத்தை பூசி வந்தால் எரிச்சல் குணமாகும். விரைவில் குறையும். அலோவேராவில் உள்ள எ.டி, என்ற இரசாயணம் வலியை குறைப்பதில் நல்ல பலனையும் அளிக்கும்.

### அதி உடல் சூட்டினைத் தணிக்க :

நாள்தோறும் இரண்டு முறை ஒரு டீஸ்பூன் கற்றாழை கூழ்மத்தை 5 முறை நீரில் கழுவி விட்டு தகுந்தளவு சர்க்கரையுடன் சேர்த்து சாப்பிட்டால் உடல் சூடு தணியும்.



## ஸ்ரீமத்பாகவதம் விடைகள்

1. நரசிம்மர்.
2. மூன்று அடி பூமியை.
3. பலிசக்கரவர்த்தியின் சிரசில்.
4. ரஜோ, தமோ, ஸத்துவ.
5. பாதாள லோகம்.
6. இந்திர பதவி.
7. பிரம்மன்.
8. விரச்ச சேனன்.
9. அர்ஜுனன்.
10. பிரகலாதனுக்கு.

தொகுப்பு : திருமதி. என். ஹேமா, திருப்பதி

**பிழை திருத்தம்**

2020, மே மாத இதழில் பக்கம் 23ல் ஸ்ரீமத் பாகவத வினாக்கள் பகுதியில் வினா எண்.9ல் துருவனை என்பதற்கு பதில் பிரகலாதனை என திருத்தி வாசிக்கவும்

**கண் கோளாறுகளுக்கு :**

தகுந்தளவு கற்றாழை கூழ்மத்தை நீரில் கழுவி துணியில் ஒரு மூட்டை போல் கட்டி, கண் மேல் வைத்துக் கொண்டால் கண் எரிச்சல், கண்ணில் இருந்து நீர் வருதல், கண் சிவப்பு போன்றவை குறையும்.

**வயிற்றுப்புண் குணமாக :**

50 கிராம் சோம்புப் பொடியை, 200 மி.லி. கற்றாழை கூழ்மத்துடன் கலந்து காய வைத்து ஆறிய பின் ஒரு சீசாவில் வைத்துக் கொண்டு, நாள்தோறும் 2–3 கிராம் பொடியை 50–100 மி.லி. நீருடன் கலந்து உட்கொண்டால் வயிற்றுக் குழாயில் ஏற்படும் புண், வயிற்று எரிச்சல், வலி, உப்பசம், பித்தம் போன்றவை குறையும். கற்றாழைக்கு அல்சர் குணப்படுத்தும் குணம் உள்ளது என்று ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்துள்ளனர்.





**மூட்டு வலிகள் நீங்க :**

அரை கிலோ கற்றாழை கூழ்மத்தை, கால்கிலோ கோதுமை மாவு ஆகியவற்றை எடுத்துக் கொண்டு, சிறிது நெய் விட்டு தனித்தனியே நன்கு சூடுபடுத்திக் கொள்ள வேண்டும். கால் கிலோ கற்கண்டை நீரில் கலந்து பாகு ஏற்படும் வரை சூடுபடுத்தி, அதனு டன் கற்றாழை கூழ்மத்தை மற்றும் கோதுமை மாவு கலந்து லேகியம் போன்று தயார் செய்ய வேண்டும். பிறகு அதனுடன் பசு நெய் கால் கிலோ சேர்த்து நன்கு கிண்ட வேண்டும். ஆறிய பின் பத்திரப்படுத்தி நாள்தோறும் காலை மாலை வேளைக்கு ஒரு டீஸ்பூன் வீதம் உட்கொண்டால் மூட்டுவலி குறையும்.

**முடி நன்கு வளர தைலம் :**

கற்றாழை கூழ்மத்தை மிக்ஸியில் போட்டு அறைத்து கால் கிலோ சாறு எடுத்துக் கொள்ள வேண்டும். அரைகிலோ தேங்காய் எண்ணெயுடன் கற்றாழை சாற்றினைக் கலந்து சூடுபடுத்தி ஆறிய பின் வடிகட்டி சீசாவில் வைத்துக் கொண்டு, நாள்தோறும் தலைக்கு பூசி வந்தால் முடி கருமையாகவும் பார்ப்பதற்கு அழகாகவும் இருக்கும்.

**கர்ப்பப்பை கோளாறுகள் நீங்க :**

சீரகப்பொடி 50 கிராம், கற்கண்டு 50 கிராம், படிக வெல்லம் 50 கிராம் ஆகியவற்றை கலந்து வைத்துக்கொள்ள வேண்டும். நாள்தோறும் இரண்டு வேளை ஒரு டீஸ்பூன் கற்றாழை கூழ்மத்தை ஏழு முறை நீரில் கழுவி, மேற்கூறிய பொடியினை 2 கிராம் சேர்த்து விழுங்கினால் மாதவிலக்கு சீராய் ஏற்படும். இரத்தப்போக்கு, வயிற்று வலி, கர்ப்பப்பையில் உள்ள கட்டிகள் நீங்கி உடல் ஆரோக்கியமாக இருக்கும். நல்ல பலன் கிட்டும்.

கற்றாழையை கர்ப்பிணிகள் பயன்படுத்தக்கூடாது. பால் கொடுக்கும் தாய்மார்களும் உட்கொள்ளக் கூடாது. ஒரு வேளை உட்கொண்டால் குழந்தைகளுக்கு அதிக முறை வயிற்றுப்போக்கு ஏற்படும்.

**குறிப்பு :**

மருந்துகளை உபயோகிப்பதற்கு முன்பு ஆயுர் வேத மருத்துவரை அணுகி, ஆலோசனைப் பெறவும். இக்கட்டுரை வாசகர்கள் பொது அறிவை வளர்த்துக் கொள்ளவே தவிர நோய்களுக்கு நிரந்தர தீர்வு அல்ல.

ஆயுர்வேதம் வளரும்...

திருமலை திருப்பதி தேவஸ்தானம், திருப்பதி

# ஸப்தகிரி

(சமய மாத இதழ்)

## சந்தாதாரர் விண்ணப்பப்படிவம்

1. பெயர் மற்றும் முகவரி :
(பெரிய எழுத்துக்களில்)
_______________
_______________
_______________
_______________
_______________

மாவட்டம் & பின்கோடு எண் __________ ☐☐☐☐☐☐

அலைபேசி எண் ☐☐☐☐☐☐☐☐☐☐

2. தேவையான மொழி : ☐ தெலுங்கு ☐ தமிழ் ☐ கன்னடம் ☐ இந்தி ☐ ஆங்கிலம் ☐ சமஸ்க்ருதம்

3. வருட /ஆயுள் சந்தா : ☐ ரூ. 60/- ☐ ரூ. 500/-

4. சந்தா புதுப்பித்தல் :

(அ) சந்தா எண். :

(ஆ) மொழி :

5. செலுத்திய தொகை :

6. செலுத்திய வழி :

பணவிடை

(எம்.ஒ.கூபன் (எண்) : தேதி:

வங்கி கேட்பு வரைவோலை

(டி.டி. எண்.) : தேதி:

இடம் :

நாள்: *சந்தாதாரர் கையொப்பம்*


திருமலை திருப்பதி தேவஸ்தானம், திருப்பதி.

## தகவல் மையம்

### தி.தி.தே. கால்சென்டர்

உங்களுக்காக

### 24 மணி நேரமும்

திருமலை திருப்பதி தேவஸ்தானம் பக்தர்களின் வசதிக்காக திருப்பதியில் தகவல் மையம் ஆரம்பித்துள்ளது. பக்தர்கள் தங்களுக்கு வேண்டிய அனைத்து விவரங்களையும் அறிய இந்த மையத்தைத் தொடர்பு கொள்ளலாம்.

ஸ்ரீவாரி ஆர்ஜித சேவை டிக்கெட், தங்கு வசதி, நன்கொடை திட்டங்கள் குறித்து அறிய..... இங்ஙனே பல்வேறு சேவைகள் குறித்து.... தேவஸ்தானத்திற்குத் தொடர்புடைய அனைத்து விவரங்களையும் நீங்கள் உங்கள் ஊரிலிருந்தே தெரிந்து கொள்ளலாம்.

*இம்மையம் 24 மணி நேரமும் பணிபுரியும் எப்பொழுது வேண்டுமானாலும் நீங்கள் தொடர்பு கொள்ளலாம்.*


தொடர்பு கொள்ளவேண்டிய தொலைபேசி எண்கள் :
0877-
2233333
2277777


- ஸப்தகிரி வருடச் சந்தா ரூ.60/- ஆயுள்சந்தா ரூ.500/-டி.டி.ஐ பிரதான ஆசிரியர், ஸப்தகிரி, தி.தி.தேவஸ்தானம். திருப்பதி எனும் பெயருக்கு எடுத்தல் வேண்டும்.
- ஸப்தகிரி சந்தாதாரராக சேர/சந்தா புதுப்பிக்க விரும்புவோர் இக்கூபனை பூர்த்தி செய்தோ அல்லது வெள்ளைத்தாளில் மேற்குறிப்பிட்ட விபரத்தை எழுதியோ அனுப்பலாம்.
- கீழே குறிப்பிட்டுள்ள முகவரியை மட்டுமே அணுகவும்.
- தி.தி.தேவஸ்தான ஆசிரியர் அலுவலகத்தைத் தவிர வேறு எங்கும் பணத்தை செலுத்தி ஏமாறாதீர்கள்.
- மணியார்டர் அனுப்புவோர் அதில் உங்கள் சந்தா விவரங்களை எழுதி கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பவும்.
- சமஸ்க்ருதம் மொழி ஸப்தகிரி பத்திரிக்கைக்கு ஆயுள் சந்தா இல்லை. வருடச்சந்தா மட்டுமே உண்டு.


**எங்கள் முகவரி :**

பிரதான ஆசிரியர்,
ஸப்தகிரி அலுவலகம்,
தி.தி.தேவஸ்தான அச்சக வளாகம்,
கபிலதீர்த்தம் சாலை,
திருப்பதி – 517507.











## திருமலை திருப்பதி தேவஸ்தானம்

# திருமலையப்பன் சேவையில் பொறுப்பாண்மைக்குழு தீர்மானங்கள்

மாண்புமிகு ஆ.மா. முதல்வர் திரு. ஒய்.எஸ். ஜகன் மோகன் ரெட்டி அவர்களின் ஆணைக்கிணங்க கொரோனா வைரஸ் காரணமாக தி.தி.தே.பொறுப்பாண்மைக் குழு கூட்டம் 2020, மே28 ஆம் தேதியன்று திருமலையில் உள்ள அன்னமய்யா பவனில் பொறுப்பாண்மைக்குழுத் தலைவர் திரு.ஒய்.வி.சுப்பா ரெட்டி அவர்கள் தலைமையில், சிறப்பு அழைப்பாளர்களான திரு. பூமண கருணாகர ரெட்டி, திரு. செவிரெட்டி பாஸ்கர ரெட்டி, திரு.மேடாமல்லிகார்ஜுன ரெட்டி மற்றும் தி.தி.தே.செயலாட்சித் தலைவர் திரு.அனில்குமார் சிங்ஹால், ஐ.ஏ.எஸ். அவர்கள் மற்றும் பிற உறுப்பினர்கள் காணொலி காட்சியின் வாயிலாகவும் கலந்து கொண்டு தீர்மானங்களை மேற்கொண்டனர். அவற்றில் முக்கியமானவைகள்.

தி.தி.தே.விற்கு பக்தர்கள் காணிக்கையாக அளிக்கும் சொத்துக்களை விற்பதனை முழுமையாக தடை செய்தல் வேண்டும் என தீர்மானம் கொண்டு வந்தனர். பக்தர்கள் வழங்கும் காணிக்கைகளை எவ்வாறு பயன் படுத்தப்பட வேண்டும் என்பதனை குழு உறுப்பினர், ஸ்வாமிகள், பக்தர்கள், மேதாவிகளோடு ஒரு குழுவினை ஏற்படுத்த வேண்டும் என நிர்ணயம் மேற்கொண்டனர். அக்குழுவினர் அளிக்கும் பரிந்துரைகளை ஆதாரமாகக் கொண்டு எவ்விதமான நிர்ணயம் மேற்கொள்ள வேண்டும் என்பதை பற்றி ஆராய்வோம் என்றனர்.

ஆந்திரா, தெலுங்கானா என இரு மாநிலங்களாக பிரிக்கப்பட்ட பின்னர் ஆந்திரமாநிலத்தில் சிறு குழந்தைகளுக்கான மருத்துவமனை இல்லாததால் பிறக்கும் குழந்தைகள் இன்னல்களுக்கு ஆளாகின்றனர் என்பதால் பர்ட் மருத்துவமனையிலோ, ஸ்விம்ஸ் மருத்துவமனையிலோ உடனடியாக சிறு குழந்தைகளுக்கான மருத்துவமனையை ஏற்பாடு செய்தல் வேண்டும் என தீர்மானம் கொண்டு வரப்பட்டது.

பக்தர்கள் திருவேங்கடமுடையானை தரிசனம் செய்வது குறித்து இப்பொறுப்பாண்மைக்குழு கூட்டத்தில் மதிப்பாய்வு செய்தனர். கோவிட்–19 நோய் தொற்று சமயத்தில் சமூக இடைவெளியை கடைபிடித்து, தகுந்த பாதுகாப்புகளுடன் பக்தர்களுக்கு எவ்விதத்தில் தரிசனம் அளிப்பது என்பதற்கான வழிமுறைகளை அதிகாரிகள் முன்மொழிந்தனர். அதன்படி அரசின் ஆலோசனைகளின்படி ஜுன் 8ஆம் தேதி முதல் பக்தர்களுக்கு ஸ்வாமி தரிசனத்தை நல்கி வருகின்றனர்.

*Edited and Published on behalf of T.T.Devasthanams by* ***Prof. K.Rajagopalan****, Phd., Chief Editor, T.T.D. and Printed at T.T.D. Press by* ***Sri. P. Ramaraju,*** *M.A., Asst. Executive Officer (Press & Publications), T.T.D. Press, Tirupati - 517 507.*





திருச்சானூர்
ஸ்ரீபத்மாவதி தாயார்
வஸந்தோத்ஸவத்தை
முன்னிட்டு ஸ்நபன
திருமஞ்சனம்









ஸ்ரீநிவாசமங்காபுரம்
ஸ்ரீகல்யாணவேங்கடேஸ்வர ஸ்வாமி
வஸந்தோத்ஸவம்





SAPTHAGIRI (Tamil) ILLUSTRATED MONTHLY Published by Tirumala Tirupati Devasthanams
printing on 30-06-2020. Regd. with the Registrar of Newspapers under "RNI" No.10742, Postal Regd.No.TRP/12 - 2018-2020
Licensed to post without prepayment No.PMGK/RNP/WPP-04/2018-2020



## திருப்பதி ஸ்ரீகோவிந்தராஜ ஸ்வாமி
## புஷ்பயாக மஹோத்ஸவம்